★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜனவரி 5 வெள்ளிக்கிழமை

# தினகரன்


THINAKARAN

තිනකරන්

வரு. 92 இல. 05 | Friday 05, January, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள்

### 109 க்கு அறிவிக்கவும்



பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்ய, பொலிஸாரால் அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 06

# ஜனாதிபதி நிதிய மருத்துவ கொடுப்பனவுகள் அதிகரிப்பு



### ஐம்பது வீதத்திலிருந்து நூறு வீதமாக வழங்க புத்தாண்டிலிருந்து புதிய முறை

- ***தனியார் அல்லது அரசுசார் மருத்துவமனைகளில் கண் அறுவை சிகிச்சைகளுக்கு நிதியுதவி.***
- ***ராகம வைத்தியசாலையில் சிறு குழந்தைகளுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு ஒரு மில்லியன் ரூபா.***
- ***மருத்துவ உதவி வழங்குவதற்கான 1,50,000 ரூபா மாத வருமான வரம்பெல்லை 02 இலட்சமாக அதிகரிப்பு.***

**இதுவரை மருத்துவ உதவி வழங்கப்படாத நோய்கள் அடையாளம் காணப்பட்டு உதவி**

ஜனாதிபதி நிதியம் மருத்துவ உதவிகளுக்காக வழங்கும் உதவிக் கொடுப்பனவுகளை நூறு வீதமாக அதிகரிக்கவுள்ளது. ஏற்கனவே வழங்கப்பட்ட ஐம்பது வீத கொடுப்பனவுகள் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய நூறு வீதமாக அதிகரிக்கப்படவுள்ளன. புத்தாண்டிலிருந்து அமுலாகும் வகையில், இது அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத்குமார தெரிவித்தார்.

இதுவரை மருத்துவ உதவி வழங்கப்படாத நோய்கள் கண்டறியப்பட்டு, அந் நோய்களுக் கான மருத்துவ உதவிகள் வழங்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு முதல், 21 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு, தனியார் அல்லது அரசு அனுசணையுடைய மருத்துவமனைகளில் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு 06

## யாழ்., கிளிநொச்சி மாவட்ட விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி



யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இடம்பெயர்ந்தோரை மீள்குடியேற்றுதல் மற்றும் மாவட்டத்தின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் இந்த கூட்டத்தின் போது விரிவாக ஆராயப்பட்டதுடன் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, பந்துல குணவர்தன உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், அரசாங்க அதிகாரிகள் பலரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## பயங்கரவாதிகளிடமுள்ள இலங்கையரை விடுவிக்க இராஜதந்திர செயற்பாடுகள்

### மியன்மாருடன் அரசாங்கம் கலந்தாலோசனை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மியன்மாரில், பயங்கரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையரை விடுவிக்கும் நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது. அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையரை விடுதலை செய்யும் ஏற்பாடுகளை துரிதப்படுத்துமாறு மியன்மார் பிரதமர் மற்றும் அந்நாட்டின் வெளிவிவகார 06

## தற்போதுள்ள பிரச்சினையை மேலும் தொடர முடியாது

# இடம்பெயர்ந்தோர் சகலரும் 2025க்குள் மீள் குடியேற்றம்

### யாழ்.–கிளிநொச்சி மாவட்ட விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி நேற்று தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இடம்பெயர்ந்துள்ளோரை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் அனைத்தையும் 2025 க்குள் நிறைவுசெய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வட மாகாணத்திலுள்ள அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

2025 ஆம் ஆண்டில் நாட்டில் எவரும் இடம்பெயர்ந்தோராக இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்தியுள்ள ஜனாதிபதி அதற்குத் தேவையான வசதிகளை வழங்கி, அந்த மக்கள் வாழ்வதற்கான உரிமையை 06

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட விசேட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி நேற்று தெரிவிப்பு**

## ஜனாதிபதியின் வழிகாட்டலில் தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டம்

### முப்படையினர், பொலிஸார் களத்தில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் எதிர்வரும் 07ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. ஜனாதிபதியின் வழிகாட்டலில் சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் ஆரம்பமாகவுள்ள இத்திட்டத்தில், 06

## தபால் மூலம் அனுப்பப்பட்ட போதைப்பொருட்கள் மீட்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாடுகளிலிருந்து மத்திய தபால் பரிவர்த்தனை நிலையமூடாக அனுப்பப்பட்ட போதைப்பொருட்களை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். பல்வேறு நாடுகளிலிருந்தும் பல நபர்களால் இவை, அனுப்பப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி, கோடியே 28 06

## அரிசி இறக்குமதித் தேவை இவ்வருடத்திலும் ஏற்படாது; பெரும்போகத்தில் 80,000 ஹெக்டேயரில் கீரி சம்பா செய்கை



### 380,000 மெ. தொன் அறுவடையை எதிர்பார்க்கிறோம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாவனைக்காக கடந்த வருடத்தில் எவ்வித அரிசியும் இறக்குமதி செய்யப்படவில்லையென்றும், அதேபோன்று இந்த வருடத்திலும் வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கான எந்த அவசியமும் கிடையாது எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் கீரி சம்பா அரிசிக்கான தட்டுப்பாட்டை தவிர்க்கும் வகையில், வெளிநாடுகளிலிருந்து கீரி சம்பா அரிசியை இறக்குமதி செய்வதாக வெளிவரும் தகவல்கள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு 06

## வடக்கு பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியால் விரைவில் தீர்வு

### மாவட்டச் செயலாளர்கள் மத்தியில் ஐ.தே.க தவிசாளர் வஜிர அபேவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வடக்குக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து விரைவான தீர்வை பெற்றுக் கொடுப்பார் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வட மாகாணம் 06




## அதிவேக நெடுஞ்சாலையில் அதிரடிச் சோதனைகள்

### 323 உயர் ரக கைபேசிகள் பறிமுதல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 323 கையடக்கத் தொலைபேசிகளுடன், இருவர் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது. தீர்வை வரியிலிருந்து தப்பிக்க இந்த உயர்ரக கையடக்க தொலைபேசிகளை இவர்கள் சட்ட 06



## 03 யானைகளின் உயிரிழப்புக்கள் பாரியளவில் அதிகரிக்கின்றன

2023 இல், அதிகளவாக 474 உயிரிழப்புக்கள்

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விபத்து; தாயும் மகளும் பலி

**லோரன்ஸ் செல்வநாயகம்**




தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தொன்றில், தாயும் மகளும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிவேக நெடுஞ்சாலையில் குருந்துகஹெதெப்ம பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டது. லொறியொன்று வேனுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 06

## 27 இலட்சம் ரூபா பெறுமதியான

## வெளிநாட்டு சிகரட்டுக்களை கொண்டு வந்த வர்த்தகர் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெளிநாட்டு சிகரட்டுக்களை சட்ட விரோதமாக நாட்டுக்கு கொண்டுவர முயற்சித்த வர்த்தகர் கைதாகியுள்ளார். இவர், 27 இலட்சத்து 12 06

## சமய போதனைகளுக்கு இலக்காகி தற்கொலை செய்வோர் அதிகரிப்பு

### அவதானத்துடன் செயற்பட எச்சரிக்கிறேன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நபர்களை இலக்கு வைத்து சமய போதனைகளை மேற்கொண்ட நபர் ஒருவர், நேற்று முன்தினம் உயிரிழந்தார். இதையடுத்து அவரது போதனை நிகழ்வுக்கு சென்றிருந்த மேலும் இருவரும் உயிரிழந்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் மக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதுபற்றித் தெரிவிக்கையில், இவ்வாறு மேற்படி நபரின் சமய போதனைகளுக்கு சென்றிருந்தவர்கள் தமது குடும்பத்திலும் காணப்படுவார்களானால் அவர்கள் தொடர்பில் 06

## 06 முதல் 09 மாத குழந்தைகளுக்கு சின்னமுத்து தடுப்பூசிகள் திட்டம்

### ஒன்பது மாவட்டங்களில் சனிக்கிழமை ஆரம்பம்



நாட்டிலுள்ள ஆறுமுதல் ஒன்பது மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை (சின்னமுத்து) தடுப்பூசி மேலதிக டோஸை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. ஒன்பது மாவட்டங்களில் இத்தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளதாக பிரதம விசேட 06

# இ.போ.ச. தனியார் மயப்படுத்தப்படமாட்டாது





## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பந்துல உறுதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை போக்குவரத்து சபை, தனியார் மயப்படுத்தப்படமாட்டா தென போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இ.போ.ச. அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் பந்துல குணவர்தன வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இலங்கை போக்குவரத்து சபை செயற்பாடுகள் தொடர்பில் விசேட கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். யாழ்ப்பாணம் கோண்டாவிலிலுள்ள பிரதேச காரியாலயம் மற்றும் யாழ்ப்பாணம் டிப்போவுக்கு நேற்று விசேட கண்காணிப்பு விஜயமொன்றையும் அமைச்சர் மேற்கொண் டிருந்தார்.

06


## பாதுகாப்பு அமைச்சு

### தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்(NBRO)

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் பதவி (நிர்வாகம் / மனித வள முகாமைத்துவம்) (ஒரு பதவி)

**தகைமைகள்:**

பொது நிர்வாகம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / மனிதவள முகாமைத்துவ துறையில் இளமாணிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பதவிக்கு இயைபான பாடப்பரப்பில் ஒரு பட்டம்.

மற்றும்

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவிக்கு இயைபான பாடப்பரப்பில் குறைந்தபட்சம் 3 வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்:**

சம்பள அளவு : HM 1-1 ரூபா 53,175-1375x10-1910x15-95,575

ஏனைய நன்மைகள் :
* வாழ்க்கைச் செலவுப் படி
* 12% EPF உரித்தாகும் மற்றும் நிறுவனத்தினால் 3% ETF பங்களிப்பு செய்யப்படும்.
* நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

வயதெல்லை : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனத்தில் பணியில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் முழுமையான சுய தரவுகள் அடங்கிய விண்ணப்பங்களை 2024 ஜனவரி 18ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிடப்பட்டவருக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு 05.**



## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்

### பிரிவு 55

காலி மாவட்டத்தின் நான்கு சூழல் பிரதேச செயலாளர் பிரிவில் மகல்ல என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 810012, துண்டு இல 05, பத்திர இல 01, துண்டு இல 77 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 253/1, மாத்தறை வீதி, மகல்ல, காலி என்னும் விலாசத்தைக்கொண்ட கொடான் ஜயவீர பட்டபந்திகே சமன் சுதந்த டி சில்வா என்னும் ஆள் 23.05.2022 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 25/1, பத்தேகம வீதி, ஹிரிம்புர, காலி என்ற இடத்தில் காணி அமைந்துள்ள உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 05.02.2024 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**



## பிரசித்த ஏல விற்பனை

01ம், 02ம் ஜூன் 2023, 4ம், 5ம் ஜுலை 2023, 03ம், 04ம் ஆகஸ்ட் 2023, 01ம், 04ம் செப்டம்பர் 2023, 02ம், 03ம் அக்டோபர் 2023, 30ம, 31ம அக்டோபர் 2023, 29ம், 30ம் நவம்பர் 2023, 28ம், 29ம் டிசம்பர் 2023 இல் "மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பிஎல்சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
| --- | --- |
| நுவரெலியா, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, தெஹியத்தகண்டி, குருநாகல், குருநாகல் நகர கிளை, குருநாகல் பிறீமியர் நிலையம், குளியாபிட்டிய, நாரம்மல, கலேவேல, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டிய, மாத்தளை, கெலிஓயா, ஆனமடுவ, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, ஹட்டன், மஸ்கெலிய, திகனா, தம்புள்ளை புத்தளம், கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளிய, மோதறை, கிரான்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கனேமுல்ல், சிலாபம் கொச்சிக்கடை- நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, கட்டுநாயக்க-அவிரிவத்த, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகந்த, கல்பிட்டிய, கெக்கிரவா, அனுராதபுர நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சிய, தம்புத்தேகம, நொச்சியகம, பொலன்னறுவை, மெதிரிகிரிய, கந்தலை, ஜம்பெட்டா, கிரான்ட்பாஸ், பேசாலை. | 26 ஜனவரி 2024 |
| கொத்தாடுவ புதிய நகரம், தெமட்டகொட, தொட்டலங்க, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, ஹோமாகம, மஹரகம, மஹரகம நகர கிளை, கொட்டாவ, அதுருகிரிய, அம்பலாங்கொட, கராபிட்டிய, காலி, தங்காலை, சங்கராஜ மாவத்தை-கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொகுவல, டாம் வீதி, டீன்ஸ் வீதி கிளை, மருதானைஇ பொறளை, மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, மாலபே, கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, பிறீமியர் கொழும்பு 07, சிலேவ் ஐலேண்ட், கார்ப்பரேட் அலுவலகம், தலைமை அலுவலகம் கொழும்பு 07, மாவனல்ல, மினுவங்கொட, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிட்டிய. | 27 ஜனவரி 2024 |
| எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரண, பண்டாரகம, மத்துகம, பதுரலிய, பலாங்கொடை, ரத்தினபுரி, அவிசாவளை, எஹலியகொட, ஹன்வெல்ல, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவ, கெசல்வத்த, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, கல்கிச, ரத்மலான, நகர அலுவலகம், அளுத்கம, பேருவளை, களுத்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, எம்பிலிப்பிட்டிய, திஸ்ஸமஹாராம, கொலன்னாவ, பதுளை, பதுளை நகர கிளை, அம்பலாந்தோட்டை, பண்டாரவளை. | 30 ஜனவரி 2024 |
| யாழ்ப்பாணம், யாழ்ப்பாண நகரம், யாழ்ப்பாணம் பிறீமியர், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, மல்லாவி, வட்டுக்கோட்டை, கோப்பாய் கொடிகாமம், பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பளை, வவுனியா, சங்கானை, மன்னார் மருதங்கேணி செங்கலடி, வாழைச்சேனை, கிண்ணியா, திருகோணமலை, கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, கல்முனை, ஏறாவூர், வஹாரை, சேருநுவர, கிரன், திருகோணமலை நகரம், வவுணதிவு, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, மத்திய முகாம் அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, திருக்கோவில். | 06 பிப்ரவரி 2024 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE
உதவி பொது மேலாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


## அரிசி இறக்குமதிக்கான வரி 01 ரூபாவாக குறைப்பு

### 02 முதல் 21ஆம் திகதி வரை அமுல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இறக்குமதி செய்யப்படும் அரசிக்காக விதிக்கப்பட்டிருந்த விசேட வர்த்தக பொருள் வரி, ஒரு ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கான விசேட வர்த்தக வரி 65 ரூபாவாக இருந்தது.

இது தொடர்பில் நிதியமைச்சினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி இத்தீர்மானம் ஜனவரி 02 முதல் எதிர்வரும் 21 வரை நடைமுறைக்கு வருவதாக அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சீரற்ற வானிலை: 38,075 பேர் பாதிப்பு

நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற காலநிலையால், 11,241 குடும்பங்களைச் சேர்ந்த 38,075 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலையால், கிழக்கு மாகாணத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, கிழக்கு மாகாணத்தில் 9,965 குடும்பங்களைச் சேர்ந்த 33,625 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத மருந்தக உரிமையாளர் கைது

### மாத்திரைகள், பாணி மருந்துகள் மீட்பு

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

பதிவுச் சான்றிதழ் மற்றும் தேசிய மாத்திரைகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் உரிய சான்றிதழ்களின்றி, சட்டவிரோதமான முறையில் மருந்தகத்தை நடத்தி வந்த சந்தேக நபரை, அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் (03) இரவு அநுராதபுரம் சாலிய மாவத்தை பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே, சட்டவிரோதமான முறையில் நடத்திச்சென்ற மருந்தக உரிமையாளர் கைது செய்யப்பட்டார்.

187,600 பல்வேறுபட்ட மாத்திரைகள், 173 பாணி வகைகள், கிறீம் வகைகள் அடங்கிய 20 டியுப்களும் மது ஒழிப்பு பிரிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் 47 வயதுடைய சாலிய மாவத்தை அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்டவரென ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய மதுஒழிப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்

### (மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு)

### பதவி வெற்றிடம்

1992 இல. 41 தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் செயற்படுவதுடன் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய 1978 இல. 16 பல்கலைக்கழக சட்டத்தின் 25A பிரிவின் கீழ் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் பட்டம் வழங்கும் நிறுவனமாக பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

01. பதவி: பதிவாளர் - பதவி 01 (MM1 -1)

02. வேலை விபரம் -
   1. தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் நடத்தப்படும் சகல பாடநெறிகளுக்கும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல், மாணவர்களின் தனிப்பட்ட கோவைகளை நடத்திச் செல்லல்.
   2. சகல பாடநெறிகளையும் பயிலும் மாணவர்களின் மதிப்பீட்டு விடயங்கள், பரீட்சை பற்றிய மதிப்பீட்டு விடயங்கள் மற்றும் நிறுவனத்தின் பரீட்சை சபைகளின் செயலாளராக செயற்படுதல்.
   3. பாடநெறியைப் பயின்ற மாணவர்களுக்கு சான்றிதழ் பத்திரங்களை வழங்குதல்.
   4. பட்டம் மற்றும் சான்றிதழ் பத்திரங்களின் வழங்கல் நிகழ்வு ஏற்பாடு மற்றும் நடத்திச் செல்லல்.
   5. மாணவர் தகவல் முகாமைத்துவ அமைப்பை நாளது வரைக்கு உட்படுத்துதல் மற்றும் நடத்திச் செல்லல்.
   6. பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் (கல்வி) இனால் ஒப்படைக்கப்படும் வேறு விசேட வேலைகளை நிறைவேற்றுதல்.

03. கல்வித் தகைமைகள்: வெளி விண்ணப்பதாரிகள்
   1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவம்/ அரச நிர்வாகம்/ அரச முகாமைத்துவம்/ முகாமைத்துவ பட்டத்தைப் பெற்று இருத்தல் மற்றும் பட்டத்தைப் பெற்ற பின்னர் பதவியுடன் சம்பந்தப்பட்ட குறித்த பாடத் துறையில் குறைந்தபட்சம் 01 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

   உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழே 1 அல்லது 2)

   1. மேற்படி வெலி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
   2. "கனிஷ்ட முகாமைத்துவ" JM சேவை வகுதியில் குறித்த துறையில் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

04. **சம்பள அளவு: MM1-1 ரூ (53,175-10x1375-15x1910-95575)**

05. **பொது நிபந்தனைகள்:**
   * சகல விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜையாக இருத்தல்.
   * இது நிறுவனத்தின் நிரந்தர பதவியாகும்.
   * பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி, ஊழியரால் 8% மற்றும் நிறுவனத்தினால் 12% செலுத்தப்படும் ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) உரித்துரிமை கிடைக்கும். இதற்கு மேலதிகமாக ஊழியர் பொறுப்பு நிதிக்கு (ETF) நிறுவனம் 3% பங்களிப்பை வழங்கும்.
   * விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்வி, தொழில்சார் அனுபவம் மற்றும் வேறு குறித்த சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். உங்களால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களை 2024.01.19 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு "பதிவுத் தபாலில்" கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டியதுடன் விண்ணப்பம் உள்ளிடும் உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.
   * வயதெல்லை - விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 22 வயதிற்கு குறையாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது)

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,**
**லியனகேமுல்ல,**
**சீதுவை.**



## அறிவித்தல்

### மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மருத்துவ அத்தியட்சகர் (ஆயுர்வேதம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2024

கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் மருத்துவ அத்தியட்சகர் (ஆயுர்வேதம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நாடளாவிய ரீதியில் இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவையின் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **22.01.2024** ஆகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கு முன்னர் கீழ் குறிப்பிட்டுள்ள கிழக்கு மாகாண சபையின் இணையத் தளத்தில் மேலதிக தகவல்கள் மற்றும் தகைமைகளை பரீட்சிக்குமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். முறையாக பூர்த்திசெய்யப்படாது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

***www.ep.gov.lk → Exams & Results → Recruitment***

**ஏ.மன்சூர்,**
செயலாளர் (பதில்),
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
**05.01.2024**


யாழில்,கரையொதுங்கும்

## மர்ம பொருட்களால் பொதுமக்கள் பீதி

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக மர்ம பொருட்கள் பல, கரையொதுங்குகின்றன.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஒன்பதாம் வட்டாரம் அரசடி முருகன் கோவிலடியில், மர்ம பொருளொன்று கரையொதுங்கி உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த மர்மபொருள் நேற்று (04) காலை கரையொதுங்ககியுள்ளது. கரையொதுங்கிய இப்பொருளை பொதுமக்கள் அதிகளவானோர் பார்வையிட்டு வருவதுடன், காவல்துறையினருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.இப்பொருளில் Asia 2 என பெயரிடப்பட்டுள்ளதாகவும் கப்பலில் இருந்து தவறி விழுந்து இது, கரையொதுங்கி இருக்கலா மெனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இப்பொருளை அகற்றுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை கடந்த (01) யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதி கடற்கரையில், இரும்பில் அமைக்கப்பட்ட பொருளொன்றும் கரையொதுங்கியிருந்தது.

மேலும், கடந்த டிசம்பர் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு உடுத்துறை கடற்கரையில் கப்பல் போன்ற அலங்கரிக்கப்பட்ட உருவத்துடன் இரதம் ஒன்றும் கரையொதுங்கியிருந்தது.இவ்வாறு அடிக்கடி மர்மப்பொருட்கள் கரை ஒதுங்குவதால் பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர்.

# சேவா அபிமன் - 2023

# இ.போ.ச. வின் பெருமைமிகு 66ஆவது ஆண்டு நிறைவு விழா



## கௌரவ போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரின் ஆசிச் செய்தி

ஒரு நாடும் ஒரு தேசமாக உலகில் முன்னோக்கிச் செல்வதற்கு முயற்சிக்கும் இலங்கையர்களாக போக்குவரத்து என்பது பொதுமக்கள் வாழ்வில் முதன்மையான தேவையாக மாறியுள்ளது. பொருளாதார, சமூக, கலாசார, சமயம் போன்ற அனைத்து துறைகளிலும் முன்னேற்றத்திற்கு போக்குவரத்து என்பது அசியமான காரணியாகும். போக்குவரத்தின் பல்வேறு காலத்தை கடந்து வந்திருக்கும் நாம் அண்மைக் காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் முகம்கொடுத்துள்ள பொருளாதார சவால்களுக்கு முன் பொதுப் போக்குவரத்தில் பெரும்பாலான மக்களின் பாரிய ஈடுபாடு ஏற்பட்டுள்ளது என்பது இரகசியமல்ல. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறைசார்ந்த அமைச்சர் என்ற வகையிலும், அமைச்சு என்ற வகையிலும் எப்போதும் அது தொடர்பில் அவதானத்துடன் செயற்படும் பொறுப்பை நாம் தயக்கமின்றி மேற்கொள்வோம்.

இந்நாட்டு பொதுப் போக்குவரத்தில் முக்கிய பங்களிப்புச் செய்யும் இலங்கை போக்குவரத்து சபை தமது வரலாற்று முக்கியம் வாய்ந்த பொதுமக்கள் சேவையை ஆரம்பித்தது எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களின் தலைமையில் 1958ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி அன்று வரை இருந்த தனியார் பஸ் நிறுவனங்களின் ஏகபோபத்தை மக்கள் உடைமையாக்கி ஆரம்பிக்கப்பட்ட இ.போ.ச. யுகம் பல சவால்களுக்கு இடையே நாட்டின் பல் திசைகளின் போக்குவரத்தை வழங்கும் பொறுப்பை தயக்கம் இன்றி நிறைவேற்றுவதற்கு செய்த அர்ப்பணிப்புகள் அதிக பாராட்டுக்குரியதாகும். இலாபத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளாது சேவைக்கு முன்னுரிமை அளித்து வடக்கு, கிழக்கு பாகுபாடு இன்றி இரவு பகல் பாராது தமது சேவையை தொடர்ச்சியாக மக்களுக்கு வழங்குகின்ற இ.போ.ச. 30 ஆண்டு போர் காலத்திலும் அதன் பின்னர் நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடிக்கு முன்னும் கொவிட் 19 பெருந்தொற்று சந்தர்ப்பத்திலும் செய்த பங்களிப்பு மற்ற நிறுவனங்களுக்கும் பாரிய முன்னுதாரணமாகும். அதேபோன்று பாடசாலை பிள்ளைகள், பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற முக்கிய துறைகளுக்கு நிவாரண அடிப்படையிலான கட்டண முறையின் கீழ் இ.போ.ச. செய்யும் சேவை மக்களுக்காக செய்கின்ற மறைமுகமான முதலீடாக குறிப்பிட விரும்புகிறேன்.

நாடு ஒன்றாக எவ்வளவு பிரச்சினைகள், சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு வேண்டி ஏற்பட்டபோதும் அவற்றை வெற்றி கொண்டு முன்னோக்கி செல்வது இந்த சந்தர்ப்பத்தில் எம் முன் இருக்கும் பாரிய சவாலாகும். டிஜிட்டல் யுகத்தில் தொழில்நுட்ப எல்லைகளை தாண்டிச் சென்று வழக்கமான நிர்வாகச் சேவை போக்கை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் எதிர்காலத்துடன் இணைக்கும் பொறுப்பு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என்ற வகையில் நாம் ஆரம்பித்திருப்பதோடு அதன் தீர்க்கமான வருடம் 2024 ஆம் ஆண்டாகும். மக்களின் போக்குவரத்து வசதியை வழங்குவது தமது பிரதான இலக்காகக் கொண்டு பொருளாதார சவால்களுக்கு முன் இலாபம் பெறும் நிறுவனம் ஒன்றாக மாற்றும் இலக்கும் இ.போ.ச. முன் உள்ளது. அதற்காக புதிய பஸ் வண்டிகளை சேர்ப்பது மற்றும் மின்சார பஸ்களை இ.போ.ச. வாகன கட்டமைப்பில் சேர்ப்பது, குறைந்த பயன்பாட்டு பொருட்களை முகாமைத்துவம் செய்தல் போன்ற புதிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

மக்களுக்கு பெரும் நம்பிக்கைக்குரிய, பாதுகாப்பான, வசதியுடைய போக்குவரத்து சேவை ஒன்றை வழங்கி பிராந்தியத்தில் சிறந்த பயணிகள் போக்குவரத்து சேவையை வழங்குவதற்காக அர்ப்பணிக்கும் இலங்கை போக்குவரத்து சபை ஆரம்பிக்கப்பட்டு 66 ஆண்டுகள் நிறைவடையும் சிறப்பு வாய்ந்த தருணத்தில் நாட்டின் சுபீட்சத்திற்கான பங்களிப்பை தொடர்ந்தும் மேலும் வலுவுடன் மேற்கொள்வதற்கு வாழ்த்துகளை கூறிக்கொள்கிறேன்.

**கலாநிதி பந்துல குணவர்தன**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்**



## இ.போ.ச. தலைவரின் ஆசிச் செய்தி

இலங்கை போக்குவரத்துச் சபையின் 66ஆவது ஆண்டு நிறைவையொட்டி இ.போ.ச. குடும்பத்தின் அனைவருக்கும் வாழ்த்துச் செய்தியை வெளியிட முடிந்ததையிட்டு தலைவர் என்ற வகையில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

1956ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அரசின் கொள்கை முடிவுக்கு அமைய தனியார் துறையிடம் இருந்து பயணிகள் போக்குவரத்து பஸ் வர்த்தகம் மக்கள் உடைமையாக்கப்பட்டு அரச வீதிப் போக்குவரத்து சேவை என 1958ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி இலங்கை போக்குவரத்து சபை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின் 1970 களின் நடுப்பகுதியில் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற செயல்திறன் மிக்க மற்றும் விரைவான சேவையை வழங்கும் அரச சார் நிறுவனம் ஒன்றாக இ.போ.ச. மாறி இருந்ததோடு சமூக செயற்பாட்டாளர்களால் அக்காலப்பகுதி இ.போ.ச. வின் பொற்காலமாக அழைக்கப்பட்டது அந்த சமூக அங்கீகாரத்தை மேலும் உறுதி செய்வதாக உள்ளது. மேலும் அந்தத் தசாப்தத்தின் இறுதியாகும்போது அப்போது இருந்த அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான முடிவின்படி இலங்கை போக்குவரத்து சபை மத்திய போக்குவரத்து சபையாகவும் ஒன்பது பிராந்திய சபைகளாகவும் பரவலாக்கம் செய்யப்பட்டதோடு அதனால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் கிடைக்காத நிலையில் மீண்டும் ஒரு முறை 1990 தசாப்தத்தில் ஒவ்வொரு டிப்போவும் வெவ்வேறு பஸ் நிறுவனங்களாக செயற்படுத்துவற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த முடிவும் வெற்றி அளிக்காததால் 1996ஆம் ஆண்டாகும்போது மக்கள் உடைமையாக்கப்பட்ட பஸ் நிறுவனம் மற்றும் கொத்தணி பஸ் நிறுவனங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அப்போது நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்த பஸ் நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் அந்த முயற்சியும் வெற்றி அளிக்காததால் 2005ஆம் ஆண்டு கடைசிப் பகுதியாகும்போது அனைத்து பஸ் நிறுவனங்களையும் ரத்துச் செய்து இலங்கை போக்குவரத்து சபை உருவாக்கப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபை எந்த மாற்றத்திற்கு உள்ளானபோதும் அது ஆரம்பித்த திகதி தொடக்கம் இலக்கு வைக்கப்பட்ட நோக்கங்களை அந்த வகையிலேயே நிறைவேற்றுவதற்கு மேற்கூறிய அனைத்து ஆளும் நிர்வாகிகளுக்கும் முடிந்தது. ஏனெனில் கிராமத்தையும் நகரத்தையும் இணைத்து பயணிகள் போக்குவரத்து சேவையை வழங்கல் இ.போ.ச. வுக்கு வழங்கப்பட்ட மக்கள் சேவை என்பதாலாகும். காலையில் முதல் பயண நேரத்தில் இருந்து கடைசி பயண நேரம் வரை கிராமம் நகரங்கள் ஊடாக பயணித்து இன்று வரை இ.போ.ச. பஸ் பயணிப்பது அதன் காரணமாகவாகும். அதேபோன்று இந்நாட்டில் உருவான மத்திய மகா வித்தியாலய கட்டமைப்பு மூலம் நாட்டின் எதிர்காலத்திற்கானு அறிஞர்கள், தொழில்முறையாளர்கள் மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கு தோள் கொடுக்கும் சேவை மற்றும் உற்பத்தி துறைகளின் பல்வேறு தேர்ச்சிகளைக் கொண்ட தொழிலாளர்களுக்கு போக்குவரத்து வசதிகளை இன்றும் வழங்குவது இ.போ.ச. ஆகும். பாடசாலை மாணவ, மாணவியருக்கு இ.போ.ச. மூலம் வழங்கப்பட்ட பருவச் சீட்டு அவர்களின் வாழ்வை ஒளியூட்டுவதற்கு உதவிய பொருளாதார ஆதாரமாக அமைந்தது. இன்றும் கூட பயணக் கட்டணத்தில் 7% மாத்திரம் பிள்ளைகளிடம் அறவிட்டு அரசாங்கத்தின் மூலமும் இ.போ.ச. மூலமும் எஞ்சிய செலவை ஏற்பது நாட்டின் எதிர்காலத்திற்கான சமூகப் பணியாகவாகும்.

சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் ரீதியில் மிகவும் உணர்வுபூர்வமான நிறுவனம் ஒன்றாக இலங்கை போக்குவரத்து சபை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளான காலங்களை, கடந்த 65 ஆண்டுகளில் நாம் பார்த்துள்ளோம். 1978ஆம் ஆண்டுக்குப் பின் இ.போ.ச. செயல்திறன் மந்தமடைந்த நிலைக்கு மாறி இருப்பதோடு பல்வேறு ஊழல் மோசடி மற்றும் செயல்திறன் அற்ற நிறுவனம் ஒன்றாக மாறியது, இ.போ.ச. விடம் இருந்து பல்வேறும் சொத்துகள் மற்றும் காணிகளை இழந்ததும் இந்நாட்டு பயணிகள் போக்குவரத்துத் துறையை பலப்படுத்துவதற்கு இருந்த அடிப்படையை தகர்ப்பதாக உள்ளது. குறிப்பாக வேரஹர, ஏகல, கஹகொல்ல போன்ற பாரிய அளவிலான இயந்திர பொறியில் தொழிற்சாலைகளை இழந்தது அதில் பிரதானமானதாகும். தேவைகளை விட ஊழியர்களை நிரப்புவதன் விளைவாக இந்த துரதிருஷ்ட நிலை ஏற்பட்டிருப்பதாக பலரும் கருதுகின்றனர்.

இ.போ.ச. சேவை வழங்கும் நிறுவனம் ஒன்று என்றபோதும் நிதி அடிப்படையில் தன்னிறைவு பெற்ற நிறுவனம் ஒன்றாக மாறும் சவால் தற்போதைய நிர்வாகத்திற்கு உள்ள பிரதான பொறுப்பாகும். அதனை செய்ய முடியும் என்பது எனது நிலைப்பாடு என்பதோடு அதற்காக பஸ் கட்டமைப்பை பலப்படுத்துவது, போக்குவரத்து சேவையை நவீனப்படுத்தல் மற்றும் ஊழியர்களின் முயற்சி ஆகியவை கட்டாயமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அரசு மற்றும் அரச சார்புத் துறைகளை மறுசீரமைத்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் ஒழுங்குமுறைகள் தயாரிக்கப்பட்ட புதிய சம்பள முறை ஒன்றின் கீழ் உழியர்களின் உரிமைகள் உறுதி செய்தல் வேண்டும் என்றபோதும் இன்னும் கூட இ.போ.சா.வுக்கு அந்த அதிர்ஷ்டம் கிடைக்கவில்லை. அது விரைவாக தீர்க்க வேண்டிய பிரச்சினை ஒன்றாக மாறி இருப்பதோடு அதனுடன் தொடர்புபட்டு தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியது.

எவ்வாறாயினும் 2024 ஆம் ஆண்டுக்கு காலெடுத்து வைக்கும் இந்தத் தருணத்தில் இ.போ.ச. வின் அனைத்து ஊழியர்களில் ஊக்கக் கொடுப்பனவு உரித்தனவர்களுக்கு 20,000.00 ரூபா ஊக்கக் கொடுப்பனவு ஒன்றை வழங்குவதற்கு இயலுமாக இருப்பதும் இ.போ.ச. வரலாற்றில் முதல் முறையாக திறைசேரிக்கு 145.0 மில்லியன் ரூபா தொகையை பெற்றுக் கொடுப்பதற்கு முடியுமாகி இருப்பதும், அதேபோன்று முதன்மை தரங்களின் ஊழியர்களுக்கு 2018 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவிருந்த சம்பளத் திருத்தங்களின் சம்பள நிலுவைகளில் 640.0 மில்லியன் ரூபாவை செலுத்தி முடிப்பதற்கு முடியுமாகி இருப்பதும் 2023ஆம் ஆண்டு நாம் பெற்ற வெற்றிகளாக குறிப்பிட வேண்டும்.

அந்த வெற்றிகளுக்காக வழிகாட்டிய கௌரவ ஜனாதிபதி உட்பட அரசுக்கும், துறைக்கு பொறுப்பான கௌரவ அமைச்சருக்கும், இராஜாங்க அமைச்சருக்கும், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் [illegible]

**பட்டய பொறியியலாளர் லலித் அல்விஸ்**
**தலைவர்**
**இலங்கை போக்குவரத்து சபை**



## இ.போ.ச.வின் பயணம்

**மக்கள் சேவைக்கு அர்ப்பணித்துள்ள இ.போ.ச.**


பிராந்தியத்தின் சிறந்த பயணிகள் போக்குவரத்தாளராக தமது நோக்காகக் கொண்ட இலங்கை போக்குவரத்து சபையின் சேவை பிரகடனத்திற்கு அமைய, பொதுமக்களின் பாதுகாப்பு, நம்பிக்கை, வசதியுடனான பயணிகள் போக்குவரத்து சேவை ஒன்றை நியாயமான கட்டண முறை ஒன்றின் கீழ் சேவைக்கு அர்ப்பணித்திருக்கும் பயன்மிகு பணிக் குழுவின் மூலம், நிறுவனத்தின் அனைத்து வளங்களில் இருந்தும் உச்ச பயனைப் பெற்று பொருளாதார ரீதியில் சமநிலையுடன் மேற்கொள்வதை இலக்காகக் கொண்டுள்ளது. [illegible] மேற்கொள்வதற்கு 1958ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட [illegible] போக்குவரத்து சபை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி தற்போது இலங்கை போக்குவரத்து சபை என நாட்டின் போக்குவரத்து நண்பனாக பொறுப்பு வகிக்கிறது என்பதை கூறிக்கொள்ள வேண்டும்.

**இலங்கை போக்குவரத்து சபையின் வரலாற்றுப் பயணம்**

1907ஆம் ஆண்டு இலங்கை பயணிகள் போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்பட்டது சிலாபம் தொடக்கம் கொழும்பு வரை தனியார் பஸ் ஒன்றை செலுத்தியதன் மூலமாகும். அன்று தொடக்கம் 1958 வரை பயணிகள் போக்குவரத்து இடம்பெற்றது தனியார் பஸ் நிறுவனங்கள் மூலமாகும். 1957 இன் 48ஆவது இலக்கம் கொண்ட கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் 1958 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி காலஞ்சென்ற பிரதமர் கௌரவ எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களின் தலைமையில் போக்குவரத்து அமைச்சர் கௌரவ மைத்ரிபால சேனநாயக்கவின் பங்கேற்புடன் காலி முகத்திடலில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் இலக்கம் 22 ஸ்ரீ 1087 கொண்ட பஸ் வண்டியில் பிரதமர் ஏறி நுழைவுச் சீட்டு ஒன்றை வாங்கி பயணித்ததன் மூலம் இலங்கை போக்குவரத்து சபையின் போக்குவரத்து பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை போக்குவரத்து சபையின் முதல் தலைவராக வி.ஏ.எச் டி மெல் இருந்தார்.

அன்று தொடக்கம் இன்றுவரை இருந்த தனியார் ஏகபோகத்தை முறியடித்து அரசு அந்த இடத்தை கைப்பற்றி அரச வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை ஆரம்பமானது. தூர கடினப் பகுதிகளுக்கு போக்குவரத்து சேவைகள் வழங்குவது, பாடசலை மாணவர்களுக்கு நிவாரண அடிப்படையிலான கட்டணத்தில் பயணிக்கும் வாய்ப்புகள் கிடைத்தது போன்ற விடயங்கள் மூலம் அதன் சேவைகள் மக்களுக்கு மிகவும் நெருக்கமானது. இந்த பயணத்தில் 19 ஆவது மைற்கல்லை எட்டும்போது, அதாவது 1977 ஆம் ஆண்டாகும்போது இ.போ.சா. பொற்காலத்தை எட்டியது. அக்காலத்தில் தலைவராக செயற்பட்டவர் அனில் முனசிங்க அவர்களாவார். இந்தக் காலத்தில் இ.போ.ச. தமது தேசிய பணியை பல்வேறு துறைகளுக்கு விரிவுபடுத்தி இருந்தது.

அதன்மூலம் வேரஹர மத்திய தொழில்சாலை அமைக்கப்பட்டது, கின்தொட்ட, உடுபத்தாவ, கெப்பட்டிபொல, குருனுகல, காலி, கண்டி, ஏகல பிராந்திய தொழில்சாலைகள் அமைத்தல், மொரட்டுவை பஸ் பராமரிப்பு நிலையத்தை ஆரம்பித்தல், சுற்றுலா இல்லங்களை நிர்மாணித்தல், புதிதாக டிப்போ ஆரம்பித்தல், ஓட்டுநர் பயிற்சி கல்லூரிகள் ஆரம்பித்தல், தபால் சேவை செயற்படுத்தல், சங்கைக்குரிய பிக்குகளுக்காக பிக்குகளுக்கான கூப்பம் முறை மூலம் நுழைச்சீட்டுகள் வழங்கல், டிக்கெட் இயந்திர பழுதுபார்த்தல் நிலையம் ஒன்றை ஆரம்பித்தல், முகாமைத்துவ பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்தல், மூத்த குடிமக்களுக்கு நிவாரண அடிப்படையில் போக்குவரத்து சேவை வழங்கல் மற்றும் முழு பணிக் குழுவுக்காகவும் மருத்துவ நிலையங்கள் ஆரம்பித்தல் போன்றுவை இதில் குறிப்பிடத்தக்க விடயங்களாக சுட்டிக்காட்ட முடியும்.



## கௌரவ போக்குவரத்து இராஜாங்க அமைச்சரின் ஆசிச் செய்தி

இலங்கையின் பொது பயணிகள் போக்குவரத்துக்காக முறையான பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்கும் கௌரவம் உரித்தாவது இலங்கை போக்குவரத்து சபைக்காகும். அதற்காக தலைமை ஏற்ற 1956 அரசியல் புரட்சிக்கு தலைமை வகித்த மக்கள் உடைமாக்கல் திட்டத்தின் தோற்றுவிப்பாளரான காலஞ்சென்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாநாயக்க அவர்கள் என்பதோடு அந்த அரசின் போக்குவரத்து அமைச்சராக செயற்பட்ட காலஞ்சென்ற மைத்ரிபால சேனநாயக்க அவர்கள் துணிச்சலுடன் நாடு முழுவதுக்குமான சேவை ஒன்றாக பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவையை ஆரம்பித்தது இந்நாட்டு மக்கள் பெற்ற வெற்றியாகும். குறிப்பாக 1950களாகும்போது கிராமிய பகுதிகளில் மக்களுக்கு இருந்த போக்குவரத்து பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எடுத்த முடிவுகள் காரணமாக நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இ.போ.ச. பஸ்களை ஈடுபடுத்துவதற்கு அரசுக்கு முடியுமானது மற்றும் அதன்மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான பாதைகளை திறப்பதற்கு முடியுமானது.

1978இல் ஆரம்பிக்கப்பட்ட திறந்த பொருளாதார கொள்கையால் பயணிகள் போக்குவரத்துத் துறையில் போட்டித் தன்மை ஒன்று ஏற்பட்டதோடு 1980களாகவும் போது பயணிகளின் தேவையை பூர்த்தி செய்வதற்கு இ.போ.ச. பஸ்கள் போதுமானதாக இல்லாததன் காரணமாக தனியார் துறையின் பஸ்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டபோது, அரசினால் பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய சமூக நலன்புரி சேவையை மேற்கொள்வதற்கான பொறுப்பு இலங்கை போக்குவரத்து சபைக்கு இருந்தது என்பது இரகசியமல்ல. குறிப்பாக கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் நிவாரண அடிப்படையிலான விலைக்கு மாதாந்த பருவச் சீட்டுகளை வழங்கி தேசத்தின் பொறுப்பை செய்தது பாராட்டுக்குரிய விடயமாகும். பல்வேறு சவால்களுக்கு முன் இ.போ.ச. ஊழியர்கள் பயணிகள் போக்குவரத்து துறையில் தமது பொறுப்புகளை தயக்கமின்றி செய்து பல்வேறு அச்சுறுத்தல், எதிர்ப்புகளுக்கு மத்தியில் தமது கடமையை செய்த இ.போ.ச. ஊழியர்களின் முக்கிய அடையாளமாகும். என்றாலும் அவர்களுக்கான உரிமை, நன்மைகள் போதுமானதாக இல்லை என்று நான் கருதுகிறேன். இ.போ.ச. சேவையை வழங்க ஒரு நாளின் 24 மணி நேரத்திலும் செயற்படுவதோடு அதற்காக முகம்கோடுக்க வேண்டிய சிக்கல்களை நாம் சாதாரணமாக கருத முடியாது.

2004ஆம் ஆண்டில் சந்திரிக்கா பண்டாரநாயக்க ஜனாதிபதியின் தலைமையின் கீழ் போக்குவரத்து துறைசார் இராஜாங்க அமைச்சராக 2005இன் 27 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை போக்குவரத்து சபை சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைத்து இ.போ.ச.வை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நான் முன்வந்தது அதில் இருக்கும் பெறுமதியை இந்நாட்டு மக்களுக்கு உறுதி செய்வதற்காகும். அதன் விளைவுகள் குறைபாடுகளுடன் இருந்தாலும் பொது பயணிகள் போக்குபுவரத்து சேவையை வலுவுடன் கொண்டு செல்வது அரசின் பொறுப்பு என்ற வகையிலும் அரச போக்குவரத்து சேவையாக இ.போ.ச. அதற்கு இசைவாக அமைய வேண்டும் என்பதாலும் அதற்கான வழிகாட்டலின் கீழ் சென்று நாடு ஒன்றாக அர்ப்பணிப்புச் செய்யாவிட்டால் எமது நாட்டை சரிவில் இருந்து மீட்க முடியாது என்பது இன்று போன்று அன்றும் பொருந்தியதால் நாம் அந்த முடிவை எடுத்தோம். பேண்தகு அபிவிருத்தி இலக்கு மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக முகம்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்கங்களை குறைப்பதற்காக புதைபடிவ எரிபொருள் உமிழ்வு இன்றி புதுப்பிக்கத்தக்க வலுசக்தியில் செயற்படும் போக்குவரத்து சேவையை நோக்கி செல்வதற்கு நாம் செயற்பட வேண்டி உள்ளதோடு அதற்காக இ.போ.ச.வும் தலைமை வகித்து செயற்பட வேண்டும். இந்நாட்டின் வாகனங்களின் செறிவை பார்க்கும்போது வாகன விபத்துகளால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு வசதியுடைய பொதுப் போக்குவரத்துக்காக மக்களை ஈடுபடுத்தும் திறன், குறிப்பாக அரச போக்குவரத்து துறையிடம் இருக்க வேண்டும். அதனால் தற்போது இ.போ.ச. செய்கின்ற சேவைகளை நான் பாராட்டுவதோடு பொதுப் பணிகள் சேவைகளை நவீனப்படுத்தும் கவர்ச்சிகரமான சேவை வழங்கல் ஒன்றுக்காக இ.போ.ச. நிர்வாகம் விரைவாக செயற்பட வேண்டும். அதற்காக தற்போதைய அரசின் எமது அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்கு அதிக பொறுப்புடன் செயற்படுவது இ.போ.ச. வின் பொறுப்பாகும்.

66 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் இந்த சந்தர்ப்பத்தில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் இலங்கை போக்குவரத்து சபையின் அனைத்து பணியாளர்களுக்கும் மற்றும் கடந்த 65 ஆண்டுகளாக இ.போ.ச. வுக்காக பணியாற்றிய அனைத்து பணியாளர்களுக்கும் அவர்கள் இந்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு செய்த அர்ப்பணிப்புக்காக எனது வாழ்த்துகள் உரித்தாவதோடு இ.போ.ச. சேவைகளை மென்மேலும் வலுவுடனும் சிறப்பாக மேற்கொள்வதற்கு சக்தியும் தைரியமும் கிடைக்க வேண்டும் என நான் மனப்பூர்வமாக பிரார்த்திக்கிறேன்.

**லசந்த அலகியவன்ன**
**போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்**

1978 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்கம் கொண்ட மத்திய போக்குவரத்து சபை சட்டத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபை மத்திய போக்குவரத்து சபை எனவும் 09 பிராந்திய போக்குவரத்து சபைகளாக பிரித்து பரவாலாக்கப்பட்டது. அந்த ஆண்டிலேயே அதுவரை இருந்த அரசின் ஏகபோகத்தை முடிவுக்குக் கொண்டுவந்து தனியார் துறைக்கு வீதிப் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு அனுமதி கிடைத்தது. 1987 இன் 23 ஆம் இலக்கம் கொண்ட அரச கூட்டுத்தாபனம் அல்லது அரசுக்கு சொந்தமான வர்த்த நிறுவனங்களை பொது நிறுவனங்களாக மாற்றும் சட்டத்திற்கு அமைய 1990 டிசம்பர் 18 ஆம் திகதி பஸ் டிப்போக்களை வெவ்வெறாக நிர்வாகிக்கின்ற நிறுவனமாக பரவாலக்கப்பட்டு மக்கள் உடைமையாக்கப்பட்ட பஸ் நிறுவனங்கள் உருவாகின. நீர்கொழும்பு, இரத்மலானை மற்றும் கண்டி தெற்கு டிப்போக்கள் முதலாவது மக்கள் உடைமையாக்கப்பட்ட பஸ் நிறுவனங்களாகின. அதன் பின் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம், 1996 இன் 30ஆம் இலக்கம் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுக்கள் (திருத்தம்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டு மக்கள் உடைமையாக்கப்பட்ட பஸ் நிறுவன கொத்துகள் பஸ் நிறுவனங்களாகின. அதன் பின் 2005இன் 2ஆம் இலக்கம் கொண்ட இலங்கை போக்குவரத்து சபை சட்டத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபை மீண்டும் உருவானதன் காரணமாக அரச பணிகள் பஸ் போக்குவரத்துச் சேவை, மைப்படுத்திய நிர்வாகத்திற்கு உட்படுத்தப்பட்டது. அதன் பின் மீண்டும் இ.போ.ச. தலைவர் ஒருவரைக் கொண்ட பணிப்பாளர் சபை மூலம் நிர்வகிப்பது ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு புத்துயிர் பெற்ற இ.போ.ச. தொடர்ந்து புதிய வாகனங்களை சேர்த்தல் மற்றும் வேறு மாற்று முறைகள் மூலம் வாகனங்கள் வரிவுபடுத்தப்பட்டன. அவ்வாறு விரிவுபடுத்தப்பட்ட வாகனங்களை பயன்படுத்தி நாடு முழுவதும் கீழ் குறிப்பிடப்பட்ட பல்வேறு சேவைகளை வழங்குவதை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

, பாடசாலை பிள்ளைகளுக்காக திருப்திகரமான பஸ் சேவைகளை வழங்கல் மற்றும் சிசுசெரிய திட்டத்தை செயற்படுத்தல், கிராமிய பகுதிகளில் பயணிகள் போக்குவரத்துக்காக பஸ்களை செயற்படுத்தல், பண சிக்கல் காரணமான தனியார் பஸ் ஓட்டுநர்களால் கைவிடப்பட்ட மற்றும் வேறு வர்த்தக பயன்தராத வீதிகள் மற்றும் இலாபம் ஈட்டாத விதிகளில் பஸ் சேவையை ஈடுபடுத்தல், புறக்கோட்டை மத்திய பஸ் தரிப்பிடத்தில் இருந்து தூரப் பகுதிகளுக்கு தூரப் பயணச் சேவைகளை வழங்கல், அரச மற்றும் தனியார் துறைகளின் போக்குவரத்து முகவர்களை ஒருங்கிணைக்கும் சந்தர்ப்பங்களில் பஸ் சேவையை ஒரங்கிணைத்தல், தபால் மற்றும் பத்திரிகை போக்குவரத்து, பஸ் போக்குவரத்து தொடர்பில் பிரதேச மக்கள், திறைசேரி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண சபையின் குறித்த அமைச்சு மற்றும் மற்ற தொடர்புடைய முகவர் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு, இ.போ.ச. இன் ஓட்டுநர் பயிற்சி பாடசாலைகளில் சிறந்த முறையில் பயிற்சி பெற்ற ஒழுக்கமான ஓட்டுநர்களை வழங்கல், ஓட்டுநர்கள், நடத்துநர்கள், பொறிமுறையாளர்கள் மற்றும் மேற்பார்வை பணியாளர்களுக்காக கருத்தரங்கு, பயிற்சிப் பட்டறைகளை நடத்துவது, பிராந்திய தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் தொகுதிகள்/ துணைப் பொருட்களை டிப்போக்களுக்கு வழங்கல், கவர்ச்சிகரமான குறைந்த விலைகளில் பெரியவர்கள் மற்றும் மாணவர்களுக்காக பருவச்சீட்டு வழங்கல், பிராந்திய தொழிற்சாலைகளுக்காக மிக முக்கியமான உதிரிப்பாகங்கள் வழங்குவதற்காக இ.போ.ச. தலைமை அலுவலகத்தினால் நிர்வகிக்கப்படும் ஜாஎல ஏகல களஞ்சியத்தை நடத்திச் செல்லல் மற்றும் டிப்போக்களில் பஸ்களை செலுத்துவது தொடர்பில் பாதுகாப்பு விசாரணைகள், அதரடி சுற்றிவளைப்புகள், சோதனை போன்றவை மேற்கொள்ளப்படுவது இதில் அடங்கும்

1958 ஆம் ஆண்டு தமது பயணத்தை ஆரம்பித்த இ.போ.சா. 2010 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13 ஆம் திகதி இ.போ.ச. வரலாற்றில் முதல் முறையாக தேசிய உற்பத்தித் திறன் விருதை வென்றது. நாட்டின் பயணிகள் போக்குவரத்தில் அபரிமிதமான சேவையை மேற்கொள்ளும் இ.போ.சாவிடம் உள்ள முழு டிப்போக்களின் எண்ணிக்கை தற்போது 108 பிரதான டிப்போக்கள், 12 உப டிப்போக்களையும் கொண்டிருப்பதோடு அது தவிர தலைமை அலுவலகம், கொழும்பு மத்திய பஸ் தரிப்பிடம் உட்பட 12 பிராந்திய அலுவலகங்கள், 11 பிராந்திய தொழிற்சாலைகளையும், 25 ஓட்டுநர் பயிற்சி கல்லூரிகளையும், எரிபொருள் நிரப்பு நிலையங்கள், நாரஹென்பிட்டவில் அமைந்துள்ள ஷாலிக்கா விளையாட்டு மைதானம் உட்பட சுற்றுலா இல்லங்கள் மற்றும் ஓய்வு மண்டபங்கள் கொண்ட பாரிய வளங்களுடன் பலம்பெற்றுள்ளது.

**சவால்களுக்கு மத்தியில் முன்னோக்கி**

நாடு முழுவதும் இருக்கின் பயணிகளின் கேள்வியை பூர்த்தி செய்வதற்காக 6000 பஸ்களை இ.போ.ச. கொண்டிருந்தபோதும் தற்போது பயன்படுத்துவதற்கு வழங்க முடியுமான பஸ் வண்டிகளின் எண்ணிக்கை 5300 வரை குறைந்துள்ளது. அந்த எண்ணிக்கையிலும் தற்போது இருக்கின்ற பஸ்களில் 52% வரையான பஸ்கள் 10 வருடங்களைத் தாண்டிய பஸ்கள் என்பதால் அவ்வாறான பஸ்களை பயன்படுத்துவதன் மூலம் பயணிகள் போக்குவரத்தில் செயல்திறனை அதிகரிப்பதற்கு முடியாமல் உள்ளது. என்றபோதும், இருக்கன்ற வாகனங்களில் 92% இனை நாடு முழுவதும் பயன்படுத்துவதன் மூலம் பாராட்டுக்குரிய அளவில் பயணிகள் போக்குவரத்து சேவை ஒன்றை வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்து சபையால் முடியுமாகியுள்ளது. 2

**தவுஷ்க ஜயசிங்க**
**முகாமையாளர் (அபிவிருத்தித் திட்டங்கள்)**
**இ.போ.ச. நிர்வாகம் சார்பில்**

## தலைமை நிர்வாக அதிகாரியின் ஆசிச் செய்தி



1958 ஜனவரி மாதம் 01ஆம் திகதி இலங்கை போக்குவரத்து சபை இலங்கை மக்களுக்கு பாரிய சேவையை மேற்கொள்ளும் நோக்குடன் அமைக்கப்பட்டதோடு பல்வேறு பொருளாதார, அரசியல் மற்றும் சமூக தாக்கங்கள் காரணமாக பல சந்தர்ப்பங்களில் மூலோபாய ரீதியில் பல மாற்றங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அந்த மூலோபாய ரீதியிலான மாற்றங்களினால் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்காததால் 2005 இன் 27 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை போக்குவரத்து சபை சட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்து சபை அமைக்கப்பட்டு நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக பாரிய பங்களிப்பை செய்து எதிர்கால சவால்களுக்கு தயக்கமின்றி முகம்கொடுத்து தமது பணிகளை மேற்கொள்கிறது.

அதிகாலை பயண நேரம் தொடக்கம் கடைசி பயண நேரம் வரை நகர் மற்றும் கடினப் பிரதேச கிராமங்கள் இடையே இணைப்பை தொடர்ச்சியாக பேணி இந்நாட்டு பொதுமக்களின் தேவைகளுக்காக போக்குவரத்து வசதிகளை வழங்கும் முதன்மையான பணியை இலங்கை போக்குவரத்து சபையினால் மேற்கொள்வதை பெருமையுடன் குறிப்பிட வேண்டும்.

நாடு முழுவதும் பரந்துள்ள டிப்போக்கள் உட்பட அனைத்து பணி இடங்களின் பணிக் குழுக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும், போர், கொவிட் பொருந்தொற்று, பொருளாதார பிரச்சினைகள் போன்ற தேசிய நெருக்கடிகளில் இ.பொ.ச.வுக்கு வழங்கப்படும் பாரிய சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கு முடியும் என்பது இந்நாட்டின் அனைத்து மக்களுக்கும் தெரிந்த விடயமாகும்.

தற்போதைய இ.போ.ச. செயற்பாடு, பொருளாதார, சமூக தேவைகளுக்கு பொருந்துகின்ற வகையில் தயார்படுத்தும் சவால் தற்போதைய முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்டிருப்பதோடு அதற்காக தேவையான திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. பல ஆண்டுகளாக தீர்க்கப்படாது இருந்த பல சிக்கல்களுக்கு தீர்வு வழங்குவதற்கு தற்போதைய முகாமைத்துவத் திற்கு முடிந்திருப்பதோடு நாட்டில் பொருளாதார நெருக்கடி ஒன்று இருக்கின்றபோதும் நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாத்துக் கொண்டு செயற்படுவதற்கு முடியுமாவது முழு இ.போ.ச. ஊழியர்களின் வெற்றியாக குறிப்பிட வேண்டும். தற்போதைய நாள்தோறும் முன்வைக்கப்படும் மக்கள் கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தும்போதும் எந்த ஒரு போக்குவரத்து இருந்தபோதும் பயணிகள் போக்குவரத்து சேவையை வழங்குவதில் நம்பிக்கைக்குரிய பங்குதாரர்கள் இ.போ.ச. என்பது தெரியவருகிறது.

இலங்கை போக்குவரத்து சபையின் 66ஆவது ஆண்டு நிறைவையொட்டி எனது வாழ்த்துகளை தெரிவிப்பதோடு இ.போ.ச. மூலம் மேற்கொள்ளப்படுகின்ற தேசியப் பணியை மேலும் முன்னெடுப்பதற்கு இ.போ.ச. முழு பணிக் குழுவினருக்கும் சக்தியும் தைரியமும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**ஜீ.ஜீ.எம். மஹேஷ் குலதிலக்க**
**தலைமை நிர்வாக அதிகாரி**
**இலங்கை போக்குவரத்து சபை**




**2024.01.07**

## தேசிய விழா

மதவச்சி, மைத்ரிபுற இ.போ.ச பிராந்திய பணியிட வளவில் இடம்பெறும் பெருமைமிகு விழா மு.ப. 10.30 தொடக்கம் பி.ப. 12.30 வரை

சேவா அபிமன் – 2023 சிறந்த சேவைக்கான கௌரவம்
சேவை வலுவூட்டலுக்கான கௌரவம்
சிறப்பு சேவைக்கான கௌரவம்

இ.போ.ச. பணியாளர்களை பாராட்டும் தேசிய விழா கௌரவ போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், அரசாங்க அமைச்சரவை பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன, கௌரவ வட மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் உட்பட பிரமுகர்களின் பங்கேற்புடன் இடம்பெறும்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஆகிறா பிறை 21

### குறள் தரும் சிந்தனை



கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்

இருப்பதை ஒளித்துக்கொண்டு இல்லை என்பவர்களின் சொல்லைக் கேட்டவுடன், இரப்போரின் உயிரே போய் விடுகிறதே; அப்படிச் சொல்பவர்களின் உயிர் மட்டும் எங்கே ஒளிந்துகொண்டு இருக்குமோ?

# மக்கள் பிரச்சினைக்கு தீர்வுகாணும் ஜனாதிபதியின் வடபகுதி விஜயம்

நாட்டின் வடபகுதிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வியாழக்கிழமை பயணமாகியுள்ளார். நான்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அங்கு பல்வேறு வைபவங்களிலும் பங்குபற்ற உள்ளதோடு பல தரப்பினருடனும் சந்திப்புக்களையும் நடத்தவிருக்கிறார்.

இந்நாட்டின் தலைவர் ஒருவர் வடபகுதிக்கு நான்கு நாட்கள் விஜயம் மேற்கொண்டிருப்பது அண்மைக் கால வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும். ஜனாதிபதியின் யாழ் விஜயமானது மக்கள் மத்தியில் நம்பிக்கைளை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விஜயத்தின் போது வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் மாவ ட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் ஜனாதிபதி, 250 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள பாலியாறு நீர் விநியோகத் திட்டத்தையும் தொடக்கி வைக்க உள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றும் பிரச்சினை தொடர முடியாது எனவும், 2025ஆம் ஆண்டுக்குள் இடம்பெயர்ந்தவர்கள் எவரும் இருக்கக்கூடாது எனவும் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பினால், காணிகளை விட்டு இடம்பெயர்ந்த மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அக்காணிகளில் மீளக்குடியேறி வாழ வேண்டுமென்பது அம்மக்களின் நீண்டகாலக் கனவாகும்.

உண்மையில் இது பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய அறிவுறுத்தலாகும். யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 15 வருடங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. அப்படியிருக்கையில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் இன்னும் மீளக் குடியேற்றப்படாமல் இருப்பது எவ்விதத்திலும் நியாயப்படுத்தக் கூடியதல்ல. அது தொடர்பில் நிலவும் தாமங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உரிய தீர்வுகள் காணப்பட்டு இடம்பெயர்ந்துள்ளவர்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும். அதுவே இடம்பெயர்ந்தவர்களின் கோரிக்கையாகும்.

அந்த வகையில்தான் ஜனாதிபதி 2025 இற்குள், இடம்பெயர்ந்தவர்கள் எவரும் இருக்கக்கூடாது என்ற பணிப்புரையை விடுத்திருக்கிறார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இன்னும் மீளக்குடியேற்றப்படாமல் இருக்கும் மக்கள் மத்தியில் ஜனாதிபதியின் இப்பணிப்பு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது.

அதேநேரம் வடபகுதி மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கேட்டறிய இருக்கும் ஜனாதிபதி, யாழ்ப்பாணம் மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான கலந்துயைாடல்களையும் நடத்த உள்ளார். அத்தோடு வடபகுதி மக்களின் தேவைகளையும் குறைகளையும் அவர் கேட்டறியவிருப்பதாகவும் தெரியவருகிறது.

வடபகுதி மக்கள் முகம்கொடுத்துள்ள பிரச்சினைகளில் காணிப் பிரச்சினை முக்கியமான விடயங்களில் ஒன்றாகும். இப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்குமாறு வடபகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

வடபகுதியில் யுத்தம் இடம்பெற்ற போது பாதுகாப்புப் படையினர் தங்களது தேவைகளின் நிமித்தம் சில காணிகளை பொறுப்பெடுத்தனர். அவற்றில் தனியாரின் காணிகளும் உள்ளடங்கி இருந்தன. அவற்றில் குறிப்பிடத்தக்க அளவிலானோரின் காணிகள் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் உரிமையாளர்களிடம் கட்டம் கட்டமாக மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் குறிப்பிடத்தக்க அளவிலான காணிகள் இன்னும் பாதுகாப்புப் படையினரின் பொறுப்பின் கீழ் உள்ளன. அக்காணிகளின் உரிமையாளர்கள் அவற்றை மீள தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி வருகின்றனர். இதன் நிமித்தம் பல்வேறு தரப்பினரோடும் சந்திப்புக்களையும் பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளனர். அவற்றின் பிரதிபலனாகவும் பலரது காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இன்னும் குறிப்பிடத்தக்களவிலானோரின் காணிகள் படையினரின் பயன்பாட்டில் இருக்கவே செய்கின்றன. அக்காணிகளையும் மீளப்பெற்றுக் கொள்ளும் முயற்சிகளை உரிமையாளர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்த வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மக்களின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி விஷேட கவனம் செலுத்தியுள்ளார். இப்பின்னணியில் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலான பேச்சுவார்த்தைகளும் இடம்பெற உள்ளன.

அதேநேரம் இவ்விஜயத்தின் போது வடபகுதி கடற்றொழிலாளர்களுடன் கலந்துரையாடும் ஜனாதிபதி அவர்கள் முகம்கொடுத்துள்ள பிரச்சினைகள் குறித்து கேட்டறியவும் உள்ளார். அதன் ஊடாக அவர்கள் முகம்கொடுத்துள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கும் நியாயமான தீர்வு கிடைக்கப்பெறும் என்ற எதிர்பார்ப்பும் நிலவவே செய்கின்றது.

ஆகவே ஜனாதிபதியின் வடபகுதிக்கான நான்கு நாள் இவ்விஜயம் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தும். மக்களின் நீடித்துவரும் பல பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் கிடைக்கப்பெறும் என்ற எதிர்பார்ப்பும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அதுவே நாட்டின் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஜனாதிபதி, பிரதமர் வழிகாட்டலில் சர்வதேச நீர் மாநாடு-2023

'நீர் மற்றும் சுகாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான மாற்றத்தை துரிதப்படுத்துதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் சர்வதேச நீர் மாநாடு 2023, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் 2023 டிசம்பர் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் இரத்மலானையில் அமைந்துள்ள நீர் மற்றும் சுகாதாரத்திற்கான சிறந்த மையத்தில் நடத்தப்பட்டது.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையின் அபிவிருத்திகள் தொடர்பில் உரையாற்றினார்.

அத்துடன் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சமர திவாகர, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க ஆகியோரும் இதன்போது உரை நிகழ்த்தினர்.

நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்ட உலக வங்கியின் சர்வதேச நீர் இயக்குனர் சரோஜ் குமார் ஜா நீர்ப்பாது காப்பு, பசுமை நெகிழ்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான உலகளாவிய நடவடிக்கை நிகழ்ச்சிநிரலை நிறுவுவதற்கான உலகளாவிய கூட்டு நடவடிக்கை குறித்த தனது அறிவு, அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை பகிர்ந்துகொண்டார்.

நிபுணத்துவ அமர்வுகள், வர்த்தக அமர்வுகள், தொழில்நுட்ப அமர்வுகளுடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கருத்தரங்கம், கண்காட்சி மற்றும் களவிஜயம் ஆகியனவும் இம்மாநாட்டின்போது நடைபெற்றன.

**அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரதம அதிதி**



நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு துறையில் மாற்றத்தை துரிதப்படுத்தும் வகையிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காலநிலை மாற்றம் மற்றும் நீர்வள முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான நிலையான தீர்வுகள் பற்றிய பயனுள்ள விரிவுரைகள் உலகெங்கிலுமுள்ள தொழில்துறை தலைவர்கள் மற்றும் நிபுணர்களினால் நிபுணத்துவ அமர்வுகளின்போது நிகழ்த்தப்பட்டன. வர்த்தக அமர்வுகளின்போது நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையின் முன்னணியில் ஒத்துழைக்க வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் எட்டாவது ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கருத்தரங்கும் இதன்போது நடைபெற்றது. இது நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஒரு ஊக்கியாக செயற்பட ஒரு தளத்தை உருவாக்கியது. இதன்போது கேள்வி_பதில் நிகழ்ச்சியும் மற்றும் குழு விவாதங்களும் நடைபெற்றன.

நடந்து முடிந்த சர்வதேச நீர்மாநாடானது சமீபத்திய தொழில்நுட்பம், சேவைகள் மற்றும் பிற முன்னேற்றங்கள் பற்றிய அறிவை கற்றுக்கொள்வதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் சிறந்ததொரு வாய்ப்பாகும். இது பிராந்திய ரீதியில் நாட்டின் நீர் மற்றும் சுகாதாரத் துறையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தாக்கத்தை விரைவுபடுத்துகிறது.

# புதிய பாதையில் அடியெடுத்து வைத்துள்ள இனிய நந்தவனத்தின் இலக்கியப் பயணம்

இனிய நந்தவனத்தின் இலக்கியப் பயணத்தில் 27ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். இதழியல் பயணத்திலும் எண்ம வடிவம் வளர்ச்சி பெற்று வருகிறது. உலகம் உள்ளங்கைக்குள் வந்துவிட்டது. ஆகையால் வாசிப்பு என்பதும், கணினிமயமாகவும், கைப்பேசி மயமாகவும் மாறிவிட்டது.

இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் கைப்பேசிக்குள்ளேயே எல்லாவற்றையும் அறிந்து கொண்டு, அவசரமாகப் பயணப்படுகிறோம். இப்படியான சூழலில் ஒரு புத்தகத்தையோ, ஒரு வார, மாத இதழையோ பிரித்துப் படிப்பது குறைந்துவிட்டது. ஆனால் எண்ம வடிவத்தில் எவ்வளவு வாசித்தாலும், புத்தகமாக வைத்து வாசிக்கும் திருப்தி அதில் ஏற்படுவதில்லை என்ற எண்ணம் பெரும்பாலானவர்களிடம் இருக்கிறது. ஒரு புத்தகத்தைக் கையில் வைத்து வாசித்துப் புரிந்து கொள்ளும் அனுபவம் என்பது, வாசிப்பாளனுக்குள் ஒரு மாற்றத்தை உண்டாக்குகிறது. எண்ம வடிவிலான வாசிப்பில் என்ன மாற்றம் ஏற்படுகிறது? என்பது வினாக்குறியாகவே இருக்கிறது.

காலத்தின் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். என்றாலும், புத்தகத்தின் முக்கியத்துவத்தையும் பாதுகாக்க வேண்டியது நமது கடமை என்பதையும் அவதானிக்க வேண்டும். எண்ம வடிவங்கள் வந்தாலும் ஆதாரங்களை புத்தகங்களின் மூலம் மட்டுமே உறுதிப்படுத்த முடியும். பழங்காலக் கல்வெட்டுகளில் பதிவு செய்யப் பட்டுள்ளனவற்றை வைத்துத்தான் நம் தலைமுறை வரலாறுகளையும் அறிந்து வருகிறோம் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

எண்ம வடிவங்களால் அச்சு ஊடகங்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டாலும், முற்றிலும் தொலைந்து போகாமல் உயிர்ப்புடன் இருக்க வேண்டிய தேவையும் இருக்கிறது. அச்சு ஊடகங்களை வரவேற்கும் ஆதரவாளர்களும் இருக்கிறார்கள் என்பதனாலேயே, அச்சு ஊடகங்கள் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இப்படியான நெருக்கடிமிக்க சூழலில் இனிய நந்தவனம் 26 ஆண்டுகளைக் கடந்து, 27 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைத்திருப்பதை பெருமைப்படக்கூடிய விடயமாகவேப் பார்க்கிறேன். இந்தப் பயணத்திற்குப் பின்னால் எத்தனையோ காயங்களும், வலிகளும் இருந்தாலும் வாசகர்கள், படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், விளம்பரதாரர்களின் ஆதரவால் பயணத்தில் தடை ஏற்படாமல் பயணிக்க முடிகிறது என்பதே உண்மை.

இனிய நந்தவனத்தின் வெள்ளி விழா கொண்டாட்டத்தில் இருந்து, புதிய பாதையில், மிகுந்த உற்சாகத்துடனும் ஒவ்வொரு மாதமும் சிறப்பிதழ்களை வெளியிட்டு, புதிய வாசகர்களிடம் கொண்டு செல்வதன் மூலம், தொய்வில்லாமல் தொடர்ந்து பயணிக்கிறோம் என்ற மகிழ்ச்சியையும் இந்த நேரத்தில் பகிர்ந்து கொள்வதில் பெருமை அடைகிறேன். ஒவ்வொரு மாதமும் இதழை வெளிக்கொண்டு வருவதே பெரும்பாடாக இருக்கும் போது, இப்படியான ஆண்டு விழாக்களில் 200 பக்கங்களில் ஆண்டு மலரையும் வெளியிடுவதில் பெருமையடைகிறோம்

## 27 ஆம் ஆண்டில் காலடி; திருச்சிராப்பள்ளியில் நாளைமறுதினம் 7 ஆம் திகதி ஆண்டுவிழா



ஜனவரி 7 அன்று திருச்சிராப்பள்ளியில் பிரீஸ் ரெசிடென்சியில் நடைபெறும் 27 ஆம் ஆண்டு விழாவில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், இனிய நந்தவனம் கௌரவ ஆலோசகர் மேஜர் டோனர் ரோட்டேரியன் கே.சீனிவாசன், துபாய் டீச்சிங் கம்பியூட்டர் டிரேடிங் நிர்வாக இயக்குநர் அப்துல் வஜீத், புதுக்கோட்டை தமிழ்ச்சங்கத் தலைவர் கவிஞர் தங்கம்மூர்த்தி, மனநல மருத்துவர் ஹேமா பிரியா ஜெயபால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

வி.ஜி.பி நிறுவனங்களின் துணைத் தலைவர் இரா.தங்கையா தலைமையேற்க, திருச்சி பாட்சா பிரியாணி சென்டர் உரிமையாளர் முகம்மது அபு பக்கர் சித்திக், திருச்சி மகளிர் சிறைத்துறை கண்காணிப்பாளர் ருக்குமணி பிரியதர்ஷினி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்

ஆண்டு விழாவை முன்னிட்டு பல் துறையில் சிறந்து விளங்குவோருக்கு 'வெற்றித் தமிழன்' விருது வழங்கப்படுகிறது.

முனைவர் மா.மணிகண்டன், பொறியாளர் பெருமாள் நல்லமுத்து, உ. இராதாகிருஷ்ணன், எஸ். முர்த்தி, பொறியாளர் ஆதன் யோகி, முனைவர் தி. பாலசுப்பிரமணியன், முனைவர் பா.சக்திவேல், கவிஞர் பொ.வெ.இராஜ்குமார், இரா.அசோகன், சிங்கப்பூர் டி.என் .இமாஜன் ஆகியோருக்கு 'வெற்றித்தமிழன்' விருதும் இலங்கை ருத்ரா அமிர்ரெத்தினம், முனைவர் சிசிலியா சகாயம் ஆகியோருக்கு 'வெற்றித் தமிழினி' விருதும், கே.ஜே. புஷ்பராஜ், ஆர்.இராஜரத்தினம் ஆகியோருக்கு 'சேவைச் செம்மல்' விருதும், முனைவர் நா. சியாமளா, முனைவர் ப. ஆதிரை முல்லை ஆகியோருக்கு 'நம்பிக்கை நாயகி' விருதும், ப.கபிலரசனுக்கு 'நம்பிக்கை நாயகன்' விருதும் வழங்கப்படுகின்றன.

கவிஞர் ப.திருவள்ளுவர் ஆண்டு மலரை அறிமுகம் செய்கிறார்.

**நந்தவனம் சந்திரசேகரன்...**
பிரதம ஆசிரியர்
இனிய நந்தவனம் மாத சஞ்சிகை

# மக்கள் வங்கியின் Husma Bedana Like Ekak திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை நடும் திட்டம்

மக்கள் வங்கியின் 'மஹாஜன மெஹெவர' சமூக நலன்புரித் திட்டத்தின் அங்கமாக ஆரம்பிக்கப்பட்ட *Husma Bedana Like Ekak* முயற்சியின் கீழ், மரக்கன்றுகளை நடும் திட்டம் அனுராதபுரம் கே.பி. ரத்நாயக்க கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் அனுராதபுரம் பிராந்திய முகாமையாளர் அசித தனவிலவிதான, அனுராதபுரம் கே.பி. ரத்நாயக்க கல்லூரியின் அதிபர் திருமதி. தீபிகா குமாரசிங்க



மற்றும் வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள், கலன மித்துரு சங்கத்தின் உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஒரு பொறுப்புள்ள நிதி நிறுவனம் என்ற வகையில், வங்கிச்சேவை மற்றும் நிலைபேண்தகைமையை இணைத்து, இத்திட்டத்தின் கீழ் மக்கள் வங்கியின் முகநூல் பக்கத்தில் கிடைக்கும் ஒவ்வொரு 100 Like களுக்கு தலா ஒரு மரக்கன்று என்ற அடிப்படையில் பூமியின் நலனுக்காக நன்கொடையாக வழங்கப்படும்.

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



# இஸ்லாத்தின் பார்வையில் கல்வி

இறைவன் மனிதர்களின் படைப்பின் தொடக்கத்திலே கல்வி என்னும் ஒளியை ஏற்றினான். அதுவே கல்வியின் தொடக்கமாகும். அன்று பிரகாசித்த ஒளி இந்த உலகம் உள்ளளவும் தொடர்ந்து மனித வாழ்வுக்கு ஒளியூட்டிக் கொண்டே இருக்கும்.

இறைவன் திருமறையில் கூறுகிறான் "பின்னர் அல்லாஹ் எல்லாப் பொருள்களின் பெயர்களையும் ஆதமுக்குக் கற்றுக் கொடுத்தான். பிறகு அவற்றை வானவர்களின் முன் வைத்து "(ஒரு பிரதிநிதியை நியமித்தால் பூமியில் ஒழுங்கமைப்பு சீர்குலையும் எனும்) உங்கள் கருத்து சரியானால், இவற்றின் பெயர்களைச் சற்று சொல்லுங்கள்' எனக் கூறினான்'

(அல் குர்ஆன் 2:31)

அகிலத்தின் இறைவனிடமிருந்து மனித குலத்திற்கு அருளப்பட்ட வேதத்தின் முதல் வசனமே "இக்ரா ஓதுவீராக' என்பதுதான். "(முஹம்மதே!) படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக!' (அல் குர்ஆன் 96:1)

அல்லாஹ்வின் அளவற்ற அருளில் முக்கியமான முதலாவது அருளாகக் கல்வி தான் உள்ளது. கல்வியை நமது உயிர் மூச்சாகக் கருதிக் காக்க வேண்டும். மனித வாழ்க்கையில் உயர்வான எண்ணங்களும் உன்னதமான குணங்களும் தோன்ற வேண்டுமாயின் கல்வி அவசியம். தன்னை யார் என்று உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்குக் கல்வி ஒரு முக்கிய ஆயுதமாக விளங்குகிறது.

இறைவன் ஒவ்வொரு இறைத்தூதர்களுக்கும் ஞானத்தையும், கல்வியையும் கொடுத்து அதன் மூலம் சமூகத்தைச் சீர்படுத்தக் கட்டளையிட்டுள்ளான். இறைவன் தன் திருமறையில் "தாவூதுக்கும், ஸுலைமானுக்கும் நிச்சயமாக நாம் கல்வி ஞானத்தைக் கொடுத்தோம்' (அல் குர்ஆன் 27:15) எனக் கூறுகிறான்.

கல்வி மனிதனின் அறிவுக்கண்களைத் திறப்பதற்கான திறவுகோலாக உள்ளது. கல்வியறிவில் சிறந்தவர்கள்தான் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படுவார்கள். கல்வியின் தேடல் நாம் ஆழ்கடலில் இறங்கி எவ்வாறு விலை உயர்ந்த முத்தை எடுக்க முயல்கிறோமோ அதே போல் நமது வளர்ச்சிக்காகக் கல்வி என்னும் பொக்கிஷத்தைத் தேடுவதை நம் அடிப்படைக் கடமையாகக் கருத வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், "கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமை'

(ஆதாரம்: இப்னுமாஜா 228).

கல்வியைத் தேடும் இந்தப் பயணத்தில் ஆண், பெண் இருவரும் சமமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் பெண் என்பவள் குடும்பத்திலும், சமூகத்திலும் மிக முக்கிய பங்காகத் திகழ்கிறாள்.

நபி(ஸல்) அவர்கள் "கல்வி கற்பது முஸ்லிமான ஆண், பெண் அனைவருக்கும் கட்டாயக் கடமையாகும்' எனக் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி) அன்னை ஆயிஷா(ரலி) கல்வி ஞானத்தில் சிறந்து விளங்கியதால் மார்க்கம் குறித்த அடிப்படைச் சட்டங்கள், ஷரீஅத் சட்டங்கள் ஆகியவற்றை நன்கு அறிந்தவர்களாகவும், அதில் சரியான ஆலோசனைகளைச் சொல்லக் கூடியவர்களாகவும் விளங்கினார்கள். அவர்கள் மூலமாக நமக்குக் கிடைத்த நபி மொழிகளின் எண்ணிக்கை 2210 ஆகும். நபி(ஸல்) அவர்கள் தன் மனைவி கல்வியறிவில் சிறந்து விளங்குவதைத் தடை செய்யவில்லை. இறைவன் தனது செய்களைத் தான் தேர்ந்தெடுத்த ஓர் அடியார் மூலம் சமூகத்திற்குத் தெரிவிக்கிறான். இறைத்தூதர்களும் கற்றலைத் தேடிப் பயணித்தவர்கள் தான். நபி மூஸா (அலை) அவர்கள் தனது அறிவை வளர்த்துக் கொள்ள நீண்ட பயணத்தை மேற்கொண்டு கிள்ர் (அலை) அவர்களிடம் கற்றுள்ளார். மூஸா (அலை) அவரிடம் "தங்களுக்கு கற்றுத் தரப்பட்டிருக்கும் நல்லறிவை நீங்கள் எனக்குக் கற்றுத் தரும் பொருட்டு நான் உங்களுடன் இருக்கலாமா? என்று கேட்டார்'

(அல் குர்ஆன் 18:66)

மேலும் கல்வியைக் கற்றுக் கொள்வதற்காக அறிவில் சிறந்த ஸஹாபாக்கள் ஒரு மாத தூரம் பயணம் சென்றிருக்கிறார்கள். ஹதீஸ் கலையைத் தொகுத்த இமாம்களின் வரலாற்றைப் படித்துப் பார்த்தால் அவர்களும் நபி மொழிகளைத் தொகுப்பதற்குப் பல நாடுகள் பயணம் செய்திருப்பதை அறிய முடியும். இவ்வாறு ஒவ்வொரு இறைத்தூதர்களும், நல்லடியார்களும் கற்றலின் அவசியத்தை உணர்ந்து அதற்காக முயற்சி செய்து அதில் வெற்றியும் கண்டுள்ளார்கள். நாமும் எந்த வயது வரம்பின்றி நமது கற்றலை மேற்கொள்ள வேண்டும். சாக்குப் போக்கு சொல்லாமல் தொடர்ந்து நம் இறுதி மூச்சு வரை கல்வியின் பாதையில் பயணிக்க வேண்டும்.

இறைவன் திருமறையில் கற்றோரின் தகுதிகளை உயர்த்துவேன் எனக் கூறுகிறான். "எவர்கள் ஞானம் வழங்கப்பட்டிருக்கின்றார்களோ அவர்களுக்கு அல்லாஹ் உயர்ந்த பதவிகளை வழங்குவான் (அல் குர்ஆன் 58:11).

கற்ற மனிதரால் தான் நேர்வழி எது என்பதைப் பிரித்தறிய முடியும். கல்வி அறிவைப் பெற்றவரின் வாழ்க்கை இறைவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டதாக மாறிவிடும். அவர் இறைவனுக்கு முற்றிலும் அடிபணிந்தவராக மாறிவிடுவார். இறைவன் கூறுகிறான் "அறிந்தோரும் அறியாதோரும் சமமாக முடியுமா? அறிவுடையவர்கள் தாம் நல்லுரைகளை ஏற்கின்றார்கள்.'

(அல் குர்ஆன் 39:9)

"கற்றது கையளவு கல்லாதது உலகளவு'. நம்மால் முழுமையாக அனைத்தையும் கற்க முடியாது. நாம் கற்றுக்கொண்டிருக்கும் போது நம்முடைய கல்வியை அதிகப்படுத்துவதற்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். அதற்காக அல்லாஹ் "என் இறைவனே எனக்கு அதிகமான ஞானத்தை (கல்வியறிவை) வழங்குவாயாக' (அல் குர்ஆன் 20:114) எனும் பிரார்த்தனையை கற்றுக் கொடுத்திருக்கிறான். இந்தக் கல்வி என்னும் பொக்கிஷத்தை நாமும் கற்று நமது சந்ததியையும் கல்வி ஞானத்தை கற்கும், கல்வியைத் தேடிப் பயணிக்கும் சமுதாயமாக மாற்றுவதற்குக் கடுமையாக உழைப்போம்.

**மின்ஸார் இப்றாஹீம்...**



# அல்லாஹ்வின் அருட்கொடை

உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்குக் கொள்கை அவசியம். ஏனென்றால் மனித வாழ்விற்கு நாகரிகங்கள், பண்பாடுகள் அவசியமானது. இஸ்லாத்தின் நாகரிகம் பண்பாடு என்பது மக்களால் உருவாக்கப்பட்டவை அல்ல. அவை இறைவனால் வகுத்தளிக்கப்பட்டுள்ளன. எனவே தான் இஸ்லாம் மனிதர்களை நல்ல மாண்பாளர்களாக உருவாக்கியது. இஸ்லாத்தின் அறிவுப்பூர்வமான கோட்பாடுகள், பொருளாதார, அரசியல் வழிகாட்டுதல்கள், அழகிய வாழ்க்கை நெறிகள், மதிப்பளிக்கப்படும் மனித மாண்புகள் போன்ற உன்னத நெறிகளால் மக்கள் ஈர்க்கப்படுகிறார்கள்.

'இறைவன் ஒருவனே' என்ற ஒற்றை முழக்கத்துடனான இஸ்லாத்தின் செய்தி உலகம் முழுவதும் சென்ற இடமெல்லாம் அறியாமை, மூடநம்பிக்கை, பிற்போக்குச் சிந்தனை போன்றவைகளை வேரோடு பிடுங்கி எறிந்து கல்வியையும் இறைவனை அஞ்சிய கல்வியாளர்களையும் மரமாக நட்டு வைத்தது. அறிவைத் தேடிப் பெறுவதும் பெற்ற அறிவை முறைப்படுத்தி ஆராய்ச்சிகளைச் செய்து அவற்றை மனித இனத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தியதும் இஸ்லாம் கண்டெடுத்து உலகுக்குத் தந்த அருட்கொடை ஆகும்.

'நிச்சயமாக நாம் ஆதமுடைய சந்ததியை கண்ணியப்படுத்தியுள்ளோம்' (அல் குர்ஆன் 17:70) என்று மனித இனத்தையும் மனிதனின் அடிப்படை உரிமைகளையும் பறைசாற்றுகிறது திருக்குர்ஆன். ஷரீஅத் என்ற இஸ்லாமியச் சட்டங்கள் மனிதர்களை உயர்வானதொரு இடத்திற்கு எடுத்துச் செல்கிறது. ஷரீஅத் சட்டங்கள் மனிதர்களுக்கு மத்தியில் செல்வம், நிறம், மொழி, பதவி என்ற எந்தப் பாகுபாட்டையும் காட்டாது. மாறாக நீதியான என்றும் மாற்றம் அடையாத சட்டங்களை வகுத்துத் தந்துள்ளது. இறைவனின் தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறினார்கள், 'அல்லாஹ் உங்கள் செல்வங்களையோ உருவங்களையோ பார்க்கவில்லை. மாறாக உள்ளங்களையும் செயல்களையும் பார்க்கின்றான்'.

(நபிமொழி)

இஸ்லாமியச் சட்டங்கள் மனித இனத்திற்கு வழங்கப்பட்ட பொக்கிஷமாகத் திகழ்கிறது. இந்த அடிப்படையிலேயே ஒவ்வொரு மனிதனும் தன்னை இறைவனுக்குக் கட்டுப்பட்டவனாக ஆகிக் கொள்ள வேண்டும். முஸ்லிம் என்றால் இறைவனுக்குக் கட்டுப்பட்டவன் என்பது பொருள். ஒரு முஸ்லிம் பூமியில் அவனுடைய கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவான். தீமைகளின் பக்கம் செல்லாமல் கூடுமானவரை தன்னைப் பாதுகாத்துக் கொள்வான்.

இஸ்லாத்தை இறைநெறியாக ஏற்று வாழும் முஸ்லிம்கள் இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி என எல்லா நிலைகளிலும் இந்த மார்க்கத்தைச் சார்ந்தே இருப்பார்கள். அற்பமான இன்பத்திற்காக வாழ்வை அழிக்காமல் நிரந்தர சுகத்தைத் தேடியவர்களாக இறைவனின் பக்கம் திரும்பி விடுவார்கள். குலப் பெருமையால் சண்டையிட்டுப் பிரிந்து கிடந்த அரபிகள் பல நாடுகளைக் கைப்பற்றி இஸ்லாமிய அரசுக்குக் கீழ் ஆட்சி செய்து வரலாற்றில் உன்னதமான மனிதர்களாக உயர்ந்து நிற்கிறார்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் அவர்கள் ஏற்றுக் கொண்ட இஸ்லாமே ஆகும்.

இஸ்லாத்தின் தொடக்க காலத்தில் நபி (ஸல்) அவர்கள் சில முஸ்லிம்களை மக்காவிலிருந்து அபீசினியாவிற்கு அனுப்பிவைத்தார்கள். அப்போது ஜாஃபர் இப்னு அபூதாலிப் (ரழி) அவர்கள் அந்நாட்டு அரசனிடம், 'மன்னரே! நாங்கள் எதுவுமே அறியாத மக்களாக இருந்தோம். சிலைகளை வணங்கிக் கொண்டிருந்தோம். செத்த பிணங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். மானக்கேடான காரியங்களைச் செய்து கொண்டிருந்தோம். பலமானவர்கள் பலவீனமானவர்களைச் சுரண்டி வாழ்ந்து வந்தோம். இந்நிலையில் எங்களுக்கு ஒரு தூதரை அல்லாஹ் அனுப்பினான். அவர்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும். உண்மையைப் பேச வேண்டும். அமானிதம் பேணவேண்டும் என்று சொன்னார். இதை நாங்கள் நம்பியதாலும் செயல்படுத்தியதாலும் இறைமறுப்பாளர்கள் எங்களைக் கடுமையான துன்பத்திற்கு ஆளாக்குகிறார்கள். அதனால் இங்கு வந்துள்ளோம்'. (ஆதாரம்: அஹ்மத்) என்று கூறினார்கள்.

இந்த வார்த்தைகள் இஸ்லாம் புரட்டிப் போட்ட வாழ்வையும் வழக்கங்களையும் படம் பிடித்துக் காட்டுகிறது. இஸ்லாமியர்கள் தங்களுக்குக் கிடைத்த சத்திய மார்க்கத்தின்பால் அனைத்து மக்களையும் அழைக்கக் கூடிய பணியையும் மேற்கொண்டார்கள். உலகெங்கிலும் இஸ்லாத்தின் ஒளி வீசியது.

நபித்தோழர்களின் அழைப்புப் பணி அவர்களின் சொற்களை விடவும் அவர்களின் செயல்பாடுகள் அதிக உயிரோட்டமுள்ள, வெற்றிகரமான அழைப்புப் பணியாகத் திகழ்ந்தது. அவர்களின் வாய்மை, நேர்மை, இறையச்சம் போன்ற பண்புகள் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவின.

இஸ்லாமிய வரலாற்றைப் பெருமையோடு பகிர்ந்து கொண்டு, நபித்தோழர்களின் ஈமானையும், இறையச்சத்தையும் உரத்து முழங்கும் முஸ்லிம்களின் செயல்பாடுகளில் இஸ்லாம் மிளிர வேண்டும்.

'நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்து விடுங்கள். தவிர ஷைத்தானுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் ஆவான்'. (அல் குர்ஆன் 2:208) இஸ்லாமிய மார்க்கம் வகுத்துத் தந்த உயரிய கொள்கைகளைப் பின்பற்றும் நாம் மார்க்கத்தின் மகத்துவத்தை உணர்ந்து ஷைத்தானின் சூழ்ச்சிகளிலிருந்து வெளியேற வேண்டும். நம் சொல்லால் மட்டுமின்றி செயலாலும் இஸ்லாத்திற்குச் சான்று வழங்குபவர்களாகத் திகழ்வது இன்றியமையாததாகும்.

**அபூ மதீஹா...**

# அயல் வீட்டவர் மீதான இஸ்லாமிய கண்ணோட்டம்

இஸ்லாம் அண்டை வீட்டாரை தெளிவாக வரையறை செய்துள்ளது. அதாவது அயல் வீட்டார் என்பவர்கள் மூன்று வகையினராவர். முதலாவது வகையினர் முஸ்லிமாகவும், உறவினராகவும் இருக்கின்ற அதேநேரம் இரண்டாவது வகையினர் முஸ்லிம்களாக இருப்பர். மூன்றாம் வகையினர் முஸ்லிம் அல்லாதவர்களாவர்.

அயலவர் முஸ்லிமானாலும் முஸ்லிம் அல்லாதவரானாலும் அவர்களுடன் நேசம் கொண்டு ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் வாழ்தல் வேண்டும். அதுவே இஸ்லாத்தின் வழிகாட்டுதலாகும்.

இது தொடர்பில் அல்லாஹ்தஆலா, 'பெற்றோருக்கு நன்றி செய்யுங்கள். (அவ்வாறே) உறவினருக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினருக்கும், அண்டை வீட்டினரான மாற்று மதத்தினருக்கும் அன்புடன் நன்மை புரிவீர்களாக!' (4:36) என்று அல் குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

இவ்வசனத்தின் படி, வளர்த்துப் பாதுகாத்து ஆளாக்கிய பெற்றோருக்கு நன்றி செய்தல் முதல் கடமையாகும். அடுத்து நெருங்கிய உறவினருக்கு நலம் புரிதல் வேண்டும், தொடர்ந்து தாய் தந்தையற்ற அநாதைகளுக்கும், துன்பத்தில் உழலும் ஏழைகளுக்கும் உதவி செய்தல் வேண்டும். பின்னர் அண்டை வீட்டிலுள்ள அன்னியருக்கும் நன்மை செய்தல் என்ற முறையினைத் அல் குர்ஆன் எடுத்தியம்பியுள்ளது.

மேலும் நபி (ஸல்) அவர்கள் அண்டை வீட்டார் குறித்து ஒரு தடவை, 'தன் அண்டை வீட்டாருக்கு நல்லவராக இருப்பவரே இறைவன் சன்னிதியில் அண்டை வீட்டார் அனைவரிலும் மேலானவராக இருப்பார்' (நபிமொழி) என்று கூறியுள்ளார்கள்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் அன்னார் குறிப்பிடும் போது, 'நீர் நன்மையே செய்தீர்' என்று அடுத்த வீட்டுக்காரர் சொல்லக் கேட்டால், ஒருவர் நன்மை செய்தவராவார். அன்றி 'நீர் தீமையே செய்தீர்' என்று சொல்லக் கேட்டால், அவர் தீமை செய்தவராவார்' (நபிமொழி) என்றுள்ளார்கள்.

'எவரிடமிருந்து நன்மை விளைகின்றதோ, எவரிடமிருந்து தீமையை விட்டும் பாதுகாப்பு கிடைக்கின்றதோ அவரே நல்லவர் ஆவார். எவரிடமிருந்து நன்மையும் விளையாமல் தீமையிலிருந்தும் பாதுகாப்பு இல்லாமல் இருக்கின்றதோ அவரே தீயவர்'

நல்லவர் யார்? தீயவர் யார்? என்று அண்ணலாரிடம் கேட்கப்பட்ட போது இவ்வாறு கூறினார்கள். 'அண்டை வீட்டார் ஒருவருக்கொருவர் நன்மை புரிதலையும், தீமையை விட்டும் பாதுகாத்தலையும் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும். அதனால் ஒருவருக்கொருவர் நல்ல அண்டை வீட்டினராக வாழ முடியும். பாசத்தையும் பெருக்கிக்கொள்ளலாம்.

'அல்லாஹ்வின் தூதரே, இன்ன (பெயருடைய) அவள் தன்னுடைய ஏராளமான தொழுகையாலும், நோன்புகளாலும், தர்மத்தாலும் பிரபலம் அடைந்திருக்கிறாள். ஆனால் அவள் தன்னுடைய நாவினால் தன்னுடைய அயலவரைத் துன்புறுத்துகிறாள்' என்று ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'அவள் நரகத்தில் இருப்பாள்' என்று கூறினார்கள். மற்றொருவர் அல்லாஹ்வின் தூதரே! இந்தப் பெண் சொற்ப நோன்புகளும், தர்மமும், தொழுகையும் உடையவள். அவள் பால் கட்டியில் சிறிதே தர்மம் செய்கிறாள். ஆனால் தன்னுடைய நாவினால் தன்னுடைய அண்டை வீட்டாரை அவள் துன்புறுத்துவதில்லை' என்று அவர் கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'அவள் சுவர்க்கத்தில் இருப்பாள்.' என்றார்கள்.

ஒருவருடைய கரங்களை விட்டும் அவனுடைய அண்டை வீட்டார் பாதுகாப்புப் பெறுகின்ற வரையில் அவன் முஃமினாக (விசுவாசியாக) மாட்டான்' எனவும் பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் வுழூச் செய்த போது அன்னாருடைய தோழர்கள் அவர்கள் வுழூச் செய்த தண்ணீரை (உடம்பில்) தடவிக் கொண்டார்கள். உடனே, 'உங்களை இவ்வாறு செய்யத் தூண்டியது எது?' என அண்ணார் கேட்க, அதற்கு அவர்கள், 'அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் கொண்டுள்ள அன்பு' என்றார்கள். அப்போது 'அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் தான் நேசித்தல் வேண்டும். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும், தன்னை நேசிக்க விரும்பும் ஒருவன், பேசும் போது உண்மையே பேசுவானாக! தன்னிடம் அடைமானம் வைக்கப்பட்டால் அதனைச் செலுத்தி விடுவானாக! அயல் வீட்டாருக்குரிய கடமைகளை அவர்களுக்குப் பூரணமாய் நிறைவேற்றுவானாக! என்று பெருமானார் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'அண்டை வீட்டார் உம்மிடம் ஆதரவு வேண்டினால் அவனுக்கு ஆதரவளிப்பீராக! உதவி கோரினால், உதவி புரிவீராக! கடன் கொடுப்பீராக! இன்னும் அவனுக்குத் தேவையேற்பட்டால், உபகாரஞ் செய்வீராக! அவன் நோயுற்றால் அவனிடம் சென்று விசாரிப்பீராக! இன்னும் அவன் மரணமடைந்தால் அவன் ஜனாஸாவுக்குப் பின் செல்வீராக! அவனுக்கு நன்மை விளைந்தால் வாழ்த்துக் கூறுவீராக! அவனுக்குத் துன்பம் நேர்ந்தால் அவனைத் தேற்றுவீராக! இன்னும் அவனுடைய அனுமதியில்லாமல், அவனை விட்டும் காற்றைத் தடுக்கின்ற முறையில் கட்டிடம் எழுப்பாதிருப்பீராக! இன்னும் அவனைத் தொந்தரவு செய்யாதிருப்பீராக! நீர் ஒரு பழம் வாங்கும் போது அவனுக்கும் அளிப்பீராக! நீர் (அவ்வாறு) செய்ய இயலாவிட்டால் அதனை (வீட்டிற்குள்) இரகசியமாய்க் கொண்டு போவீராக! அன்றியும் அவனுடைய குழந்தைகள் கவலையடையும்படி உம்முடைய குழந்தைகள் அப்பழத்துடன் வெளியேறாதிருக்கச் செய்வீராக! (நபிமொழி)

அண்டை வீட்டாருக்குரிய கடமையைச் செய்வது, உண்மை பேசுதலுக்குரிய பலனையும், அடைக்கலப் பொருளைச் செலுத்துதலுக்குரிய பலனையும் ஒத்த நன்மையைத் தேடித் தருகிறது. அதனால் இறைவனுடைய நேசமும் ரஸுல் (ஸல்) அவர்களுடைய நேசமும் கிடைக்கின்றன. அயல் வீட்டாருக்கிடையே பாசமும் வளருகிறது.

எனவே, இறை நேசம் விரும்பி நேர்மையாய் நடந்து கொள்ளும் ஓர் அண்டை வீட்டான் ஒரு முஸ்லிமுக்குக் கிடைக்கப்பெறுவது வெகுமதியாகும். அதனால் அண்டை வீட்டாரின் உரிமைகளை பேணி நடப்பதற்கு எல்லாம் வல்ல நாயன் ஒவ்வொருவருக்கும் துணைபுரிந்திடட்டும்!

**எம்.யூ.எம். வாலிஹ்...**
(அல் அஸ்ஹரி), வெலிகம

# சுவர்க்கவாசி பட்டம் பெறுவதற்கு...



உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் மரணம் உறுதியானது. கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் அனைவரும் உறுதியாக ஏற்றுக்கொண்ட விடயம் மரணம் மாத்திரம் தான். உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் அதனை சுவைத்தே தீரவேண்டும். ஆனால், அந்த மரணம் பற்றிய யதார்த்தமான பார்வையும் அதற்குப் பின்னாலுள்ள உண்மையான வாழ்வு பற்றியுமே மனிதர்களில் பலர் அறியாதுள்ளனர். மரணம் உறுதியானது என்பதனை குர்ஆனிய வசனங்களும் நபிமொழிகளும் எமக்கு தெளிவுபடுத்துகின்றன.

'ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும். அன்றியும்;' (3:185) என்று அல் குர்ஆன் கூறிக் கொண்டிருக்கிறது.

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள் 'உங்களுடைய சிற்றின்பங்களையும், உங்களது அற்ப ஆசைகளையும் விட்டு உங்களை துண்டிக்க வைக்கக்கூடிய மரணத்தை நினைவு கூறுங்கள்' என்று கூறினார்கள். (ஜாமிஉஸ் ஸஹீஹ்)

நமது வாழ்க்கையில் அன்றாடம் பல மரண அறிவித்தல்களை செவிமடுக்கின்றோம். அவ்வாறே சில ஜனாஸாக்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு துஆ செய்வதையும் அவர்களுடைய நாவுகள் ஜனாஸாக்களைப் பற்றி நல்ல பல வார்த்தைகளை மொழிவதையும் கண்ணூடாக கண்டு சந்தோஷமடைகின்றோம். சில சமயம் இது போன்று எமது ஜனாஸாவும் அமையக்கூடாதா என்று எம்மில் ஏராளமானவர்கள் யாசிப்பதும் உண்டு.

நாம் மரணிக்கும் போதும் அல்லாஹுதஆலாவினாலும் மக்கள் மூலமும் நல்ல பட்டங்களைப் பெற்று நற்பாக்கியத்துடன் மரணிக்க வேண்டும். எமது ஜனாஸாக்களில் அதிகமான நாவுகள் எமக்காக கையேந்தி பிரார்த்திக்க வேண்டும். இவ்வுலக வாழ்க்கையில் அல்லாஹ்வுடனான உறவுகளை வலுப்படுத்த வேண்டும். அவன் எம்மீது கடமையாக்கியுள்ள வணக்க வழிபாடுகளை சரிவர நிறைவேற்ற வேண்டும். அவன் தடுத்த, வெறுத்த காரியங்களை முற்றும் முழுதாக தவிர்ந்து விலகி வாழ வேண்டும். மனிதர்களுடனும், ஏனைய படைப்பினங்களுடனும் நல்ல முறையில் உறவைப் பேணி நடக்க வேண்டும். அவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளை சரிவர நிறைவேற்ற வேண்டும்.

எமது நாவு, கரங்களிலிருந்து மற்றவர்கள் பாதுகாப்பு பெற்றவர்களாக வாழச்செய்ய வேண்டும். அதன் மூலம் நாம் இவ்வுலகில் இருந்து பிரியும் வேளை அல்லாஹ்வினாலும் மனிதர்களினாலும் எமக்கு இரண்டு நல்ல பட்டம் கிடைக்கும். அவற்றில் அல்லாஹ் எமக்கு அளிக்கும் பட்டம் 'சுவர்க்கவாசி' என்பதாகும்.

'நிச்சயமாக எவர்கள் 'எங்கள் இறைவன் அல்லாஹ்தான்' என்று கூறி, (அதன் மீது) உறுதியாக நிலைத்து நின்றார்களோ, நிச்சயமாக அவர்கள் பால் மலக்குகள் வந்து, 'நீங்கள் பயப்படாதீர்கள். கவலையும் பட வேண்டாம் உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள்' (எனக் கூறியவாறு) இறங்குவார்கள் (41:30) என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது.

அதேநேரம் மனிதர்களினால் எமக்கு கிடைக்கும் பட்டம் தான் 'ஓய்வு பெற்றவராவார் அல்லது (பிறருக்கு) ஓய்வு அளித்தவராவார்' என்பதாகும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்களைக் கடந்து ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டது. அப்போது அவர்கள் '(இவர்) ஓய்வு பெற்றவராவார்; அல்லது (பிறருக்கு) ஓய்வு அளித்தவராவார்' என்று சொன்னார்கள். மக்கள் 'அல்லாஹ்வின் தூதரே! ஓய்வு பெற்றவர். ஓய்வு அளித்தவர் என்றால் என்ன?' என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'இறைநம்பிக்கை கொண்ட அடியார் (மரணிக்கும்போது) இவ்வுலகத்தின் துன்பத்திலிருந்தும் தொல்லையிலிருந்தும் ஓய்வு பெற்று இறையருளை நோக்கிச் செல்கிறார்.

பாவியான அடியான் (மரணிக்கும்போது) அவனின் தொல்லைகளிடமிருந்து மற்ற அடியார்கள், (நாடு) நகரங்கள், மரங்கள் மற்றும் கால்நடைகள் ஆகியன ஓய்வு (பெற்று நிம்மதி) பெறுகின்றன' என்று கூறினார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி)

ஆகவே அல்லாஹ்வுடைய கடமைகளை சரிவர நிறைவேற்றுவதுடன் ஏனைய படைப்பினங்களுடனான உறவுகளை சீர்படுத்துவோம் அத்துடன் எமது மரணம் நல்ல நிலையில் அமைய வல்ல நாயன் அல்லாஹுதஆலாவை பிரார்த்திப்போம். சுவர்க்கவாசி மற்றும் ஓய்வுபெற்றவர் என்ற இரண்டு பட்டங்களையம் பெற்று மரணிக்க எம்மனைவருக்கும் அல்லாஹ் தௌபீக் செய்யட்டும்.

**எ.எச்.எம்.முப்தி மின்ஹாஜ்...**
(காஷிபி, மளாஹிரி), நிந்தவூர்

# பொதுமக்களின் உதவிகோரும் குடும்பத்தினர்



அப்புத்தளை தியத்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியத்தலாவையைச் சேர்ந்த செல்லத்துரை விஸ்வநாதன், வயது 69 கடந்த (29.12.2023)ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். இவர் இது வரையிலும் வீடு வந்து சேரவில்லை. பொதுமக்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவர் பற்றிய தகவல் தெரிந்தால் 0764174395 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தருமாறு இவரது மனைவி விஜயகுமாரி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பயங்கரவாதிகளிடமுள்ள இலங்கையரை...

அமைச்சர் ஆகியோரிடம் அமைச்சர் அலிசப்ரி வேண்டுகோள் விடுத்துள்ளார். அங்குள்ள பயங்கரவாத அமைப்பு 56 இலங்கையரை தடுத்து வைத்து சைபர் அடிமைகளாக வேலை வாங்குவதாக செய்திகளில் தெரிய வந்துள்ளது. இதையடுத்து இலங்கை அரசாங்கம் அவர்களை விடுவிப்ப தற்கான ராஜதந்திர நடவடிக்கைகளை மியன்மார் அரசுடன் முன்னெடுத்துள்ளது.

## வெளிநாட்டு சிகரட்டுக்களை...

ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரட்டுகளை நாட்டுக்குள் கொண்டுவர முயன்றபோது நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதான வர்த்தகரே கைதாகியுள்ளார். நேற்று அதிகாலை 4.51 மணிக்கு ஓமானின் மஸ்கட் நகரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த ஓமான் விமான சேவைக்கு சொந்தமான ஓ.வி.437 ஆம் இலக்க விமானத்திலேயே அவர் இலங்கை வந்துள்ளார். அவர் கொண்டு வந்த 03 பயணப் பொதிகளில் 'மென்செஸ்டர்' வகை 27,120 சிகரட்டுக்கள் அடங்கிய 135 காட்டூன்கள் மற்றும் 06 பக்கட்டுகளும் மறைந்து வைக்கப்பட்டிருந்தன.

## இடம்பெயர்ந்தோர்...

உறுதிப்படுத்துமாறும் அந்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அனைத்து மக்களுக்கும் பொருளாதார நெருக்கடிகள் இருப்பதைத் தாம் நன்றாக அறிந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, இந்தமுறை தைப் பொங்கல் கொண்டாட்டத்தின் பின்னர், அரசாங்க ஊழியர்களுக்கு சில பொருளாதார நிவாரணங்களை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் சென்றடைந்தார். நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி அனைத்து மக்களுக்கும் பொருளாதார நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புக் காரணமாக வழங்கவேண்டியிருந்த அனைத்து திறைசேரி உண்டியல்களையும் தற்போது வழங்கி நிறைவு செய்துள்ளதாகவும், அடுத்த நான்கு காலாண்டுகளில் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் இந்த வருட இறுதிக்குள் பொருளாதார வளர்ச்சி வேகத்தை 3% மாக அதிகரிப்பதற்கும், அத்துடன் 2025 ஆம் ஆண்டில் அதனை 5% மாக அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் பதிவுசெய்யப்பட்டுள்ள இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 1,788 ஆகும். அதுதொடர்பான 1,289 முறைப்பாடுகள் தொடர்பில் பரிசீலனை நடத்தப்பட்டுள்ளது. மீதமான 500 முறைப்பாடுகள் சம்பந்தமான பரிசோதனைகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அந்தவகையில், எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் அந்த நடவடிக்கைகளை நிறைவுசெய்யும் வகையில் காணாமற் போனோர் தொடர்பான அலுவலகத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அரசியல் பிரமுகர்கள் அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்ட மேற்படி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மாவட்டத்தில் இதுவரைகாலமும் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் அதுதொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பிலும் ஜனாதிபதி விவரமாக கேட்டறிந்துகொண்டார்.

மீள்குடியேற்றம், கல்வி, சுகாதாரம், காணி, மீன்பிடி, விவசாயம் உள்ளிட்ட துறைகள் தொடர்பிலும் வடக்கின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பிலும் இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மேலதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சமய போதனைகளுக்கு இலக்காகி...

மிகவும் அவதானம் செலுத்த வேண்டியது அவசியம் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டில் கடந்த சில தினங்களாக சந்தேகத்திற்கிடமான வகையில் இடம் பெற்றுள்ள ஏழு மரணங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அந்த விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பை குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், ஹோமாகம பிரதேசத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ள சமயமொன்றுடன் தொடர்பு பட்டவரின் சகாக்கள் என குறிப்பிடப்படும் இளைஞர் ஒருவரும் யுவதியும் உடலில் நஞ்சு கலந்ததால் மரணமடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. மேற்படி யுவதியின் சடலம் யக்கல பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அம்பலாங்கொடை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 34 வயது நபரின் சடலம் அவர் தங்கியிருந்த மகரகம பிரதேசத்தில் உள்ள விடுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் சமய போதனைகளில் ஈடுபட்டிருந்த ருவன் பிரசன்ன குணரத்ன என்ற நபர், தமது உடலில் நஞ்சேற்றி தற்கொலை செய்து கொண்டுள்ளார். அதனையடுத்து அவரது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மரணமடைந்த ருவன் பிரசன்ன குணரத்னவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டிருந்த இளைஞர் மற்றும் யுவதியும் நேற்றைய தினம் மரணமடைந்துள்ள நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருமே ஒரே விதமான விஷம் உடலில் கலந்ததால் மரணமடைந்துள்ளதாக சந்தேகம் நிலவுவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் வழிகாட்டலில்...

முப்படையினர் மற்றும் பொலிஸார் களத்தில் இறங்கவுள்ளனர். அதிகரித்து வரும் டெங்கு பரவலைத் தடுக்கும் வகையில், இத்திட்டம் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 07ஆம் திகதி முதல் அதிக டெங்கு பரவல் பிரதேசங்களை கேந்திரமாகக் கொண்டு முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில், இந்த வேலைத்திட்டம் உள்ளடக்கப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இத்திட்டம் தொடர்பான முக்கிய பேச்சுவார்த்தை சுகாதார அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் பாலித மஹிபால மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன ஆகியோரின் தலைமையில் அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் இராணுவ பிரிவை பிரதிநிதித்துவப்படுத்தி மேஜர் ஜெனரல் பீ.பீ.ஏ.பெரேரா, கடற்படையை பிரதிநிதித்துவப்படுத்தி கெப்டன் டீ.ஏ.எதிரிவீர, கெப்டன் சி.எல்.ஜேலிஆரச்சி, டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் சுகத் சமரவீர, தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் நிமல்கா பத்திலஹெட்டி ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த பேச்சுவார்த்தையின் பிரதிபலனாக நேற்றைய தினம் மாவட்ட ரீதியாக டெங்கு ஒழிப்பு மாவட்டக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. அத்துடன் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் சுற்றாடலை பரிசோதிக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த விசேட வேலைத்திட்டம் நாடளாவிய அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகங்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ளது. சுற்றாடல் பரிசோதனை நடவடிக்கைகளில் பொலிஸார் முப்படையினர், சிவில் பாதுகாப்பு செயலணி, டெங்கு ஒழிப்பு பிரிவு உத்தியோகத்தர்கள், கிராமிய குழுக்கள், கிராம சேவை உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து முன்னெடுக்கவுள்ளனர்.

## 06 முதல் 09 மாத குழந்தைகளுக்கு...

வைத்திய நிபுணர் வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்தார்.

ஐரோப்பிய மற்றும் தெற்காசிய நாடுகள் உள்ளிட்ட உலகிலுள்ள சகல நாடுகளிலும் தற்போது தட்டம்மை நோய் பரவி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். கொவிட் காலத்தில் சிறுவர் தடுப்பூசித் திட்டம் சரியாக செலுத்தப்படவில்லை. இதனால், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உலகிலுள்ள இரண்டு வயதுக்குட்பட்ட 25 மில்லியன் சிறுவர்களுக்கு தடுப்பூசியை பெற முடியாமற்போனது.

இதனால் இவர்கள் எதிர்காலத்தில் சின்னமுத்து போன்ற தொற்றுநோய்களுக்கு உள்ளாகும் அபாயம் காணப்படுகிறது.

இதனைக் கருத்திற்கொண்டே சிறுவர்களுக்கு தட்டம்மை (சின்னமுத்து) தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. இந்நோயாளர் சுமார் 16 பேருக்கு இந்நோயை கடத்தக்கூடிய அபாயம் உள்ளது. இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளில் சின்னமுத்து ஒரு பெரிய தொற்றுநோயாக பரவி வருகிறது. 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி, முதல் சின்னமுத்து நோயாளி நாட்டில் அதடையாளம் காணப்பட்டிருந்தார்.

சிறுவயது தடுப்பூசிகளை முறையாகப் பெறாதவர்களே இந்நோயால் பாதிக்கப்படுவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இதுவரை பதிவாகியுள்ள 740 சின்னமுத்து நோயாளர்களில் 49% கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. இரண்டாவது அதிகூடிய நோயாளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி நிதிய மருத்துவ...

மருத்துவ உதவி வழங்கப்படும். நோய்வாய்ப்பட்டவர்கள் மருத்துவ உதவி பெறுவதற்காக நகரத்திற்கு வருவதைக் குறைப்பதற்காக, நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளின் ஜனாதிபதி நிதியத்தில் இலகுவாகப் பதிவு செய்யும் முறையும் 2024ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கராபிட்டிய வைத்தியசாலையில் வேலை நேரத்தின் பின்னர் இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காகவழங்கப்படும்கொடுப்பனவு இவ்வருடம் முதல் அதிகரிக்கப்படவுள்ளது. ஏனைய வைத்தியசாலைகளுக்கும் இந்த முறையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் ராகம வைத்தியசாலையில் சிறு குழந்தைகளுக்கான கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சைகளுக்காக ஒரு மில்லியன் ரூபா வரையான மருத்துவ உதவி தொகையும் வழங்கப்படும்.

மேலும், தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு இது வரை மருத்துவ உதவி வழங்கப்படாதிருந்தது.

இதற்கான மருத்துவ உதவிகளும் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும். தனியார் அல்லது அரசுசார் மருத்துவமனைகள் தவிர, அரசு மருத்துவமனைகளும் இந்த ஆண்டு முதல் எலும்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்பும் பின்பும் வெளியில் செய்யப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்கு மருத்துவ உதவிகளை வழங்கவுள்ளன.

மருத்துவ உதவிகளை வழங்குவதில் நோயாளர்களின் குடும்ப அலகு ஒன்றின் மாதாந்த வருமான வரம்பான 150,000 ரூபாவை இவ்வருடம் முதல் 02 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மருத்துவ உதவி பெற வேண்டிய நடுத்தர மக்கள் ஜனாதிபதி நிதியிலிருந்து மருத்துவ உதவி பெற முடியும்.

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலை...

அம்பலாங்கொடை, பெரகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட இலங்கை வங்கி கிளை உதவி முகாமையாளரான 30 வயது சமரசிங்க கொடித் துவக்கு ஆரச்சிகே உமேஷிகா மதுஷி மற்றும் அவரது 56 வயது தாயாரான எதிரிமுனி ரீட்டா ஹெரியட் டி சொய்ஷா ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்துள்ள வங்கி உதவி முகாமையாளரான பெண், சுகவீன முற்றிருந்த தமது தாயை கொழும்பில் மருத்துவரிடம் கூட்டிச் சென்று, கொழும்பிலிருந்து மீண்டும் வீடு திரும்பும் போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## அதிவேக நெடுஞ்சாலையில்...

விரோதமாக கொண்டுவந்துள்ளனர். விமான நிலையத்திலிருந்து வாகனமொன்றில் இவற்றை கொழும்புக்கு கொண்டுவந்த போதேபொலிஸ் விசேட அதிரடிப்படையின ரால் இவர்கள் கைதாகினர்.

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் வைத்து இவர்களைக் கைது செய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

இவற்றில்,246 புதிய கையடக்கத் தொலைபேசிகளும் வேறு நாடுகளில் உபயோகப்படுத்தப்பட்ட 77 கையடக்கத் தொலைபேசிகளும் உள்ளடங்குவதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது. கொழும்பு 12 ஐச் சேர்ந்த 21 வயது இளைஞர் மற்றும் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த 43 வயது நபருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களாவர்.




## இன்றைய பலன்கள்

**( 05. 01. 2024 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** வியாபாரம் தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைவர். உத்தியோகத்தில் உள்ளவர்கள் பதவி உயர்வால் மகிழ்ச்சி காண்பார்.

**ரிஷபம்:** வியாபாரம் தொழில் செய்பவர்கள் வெகுவிரைவில் முன்னேற்றம் காண்பார். உத்தியோகத்தில் உள்ளவர்கள் எதிர்பார்த்த ஊதிய உயர்வும் பதவி உயர்வும் பெற்று மகிழ்ச்சி காண்பர்.

**மிதுனம்:** உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் வந்து சேரும். கலைஞர்களுக்கு கைநழுவிச் சென்ற ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

**கடகம்:** நீடித்த நோய அகல மாற்று மருத்துவம் கை கொடுக்கும். உத்தியோகத்தில் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கவில்லையே என கவலைப்பட்டவர்களுக்கு சுய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்:** உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்தில் இருந்து நிர்பந்தம் அதிகரிக்கும். கலைஞர்களுக்கு எதையும் திட்டவட்டமாக முடிவெடுக்க இயலாது.

**கன்னி:** கடமைகளை செவ்வனே செய்து வெற்றி காண்பீர்கள். தங்கம் வெள்ளி போன்றவை வாங்க வழி பிறக்கும். தாய் வழி ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு புது ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கூடுதல் பொறுப்புகளும் அதற்கேற்ற விதத்தில் ஊதிய உயர்வும் உண்டு.

**விருச்சிகம்:** தொழில் செய்பவர்களுக்கு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு சவாலான காரியங்களை கூட சாதுரியமாக செய்து புகழ் குவிப்பர்.

**தனுசு:** வாழ்க்கை துணைக்கு வேலை கிடைக்கும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு நல்ல மாற்றங்கள் வந்து சேரும். வியாபாரம் செய்பவர்கள் வளர்ச்சி காண்பர்.

**மகரம்:** வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதிகாரிகளின் ஆதரவு உண்டு.

**கும்பம்:** உத்தியோகத்தில் உள்ளவர்கள் மிகவும் கவனமுடன் பணி புரிவது நல்லது. மாணவ மாணவிகளுக்கு கலை, விளையாட்டுத்துறை போன்றவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத் துணையின் வேலைவாய்ப்பு கருதி ஏற்பாடு செய்திருந்தால் அதுவும் கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும். வீண் பழி ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு.

## இ.போ.ச. தனியார்.... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

யாழ்ப்பாண டிப்போவின் நிர்வாக மற்றும் ஊழியர்கள் மத்தியில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், விசேட பேச்சுவார்த்தைகளிலும் அவர் ஈடுபட்டார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், கடந்த சில வருடங்களாக நாடு, கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க நேர்ந்தது. இதுவரை நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளிட்ட ஏனைய நடவடிக்கைகளுக்காக தொடர்ச்சியாக தேசிய மற்றும் வெளிநாட்டு கடன்களை பெற்றுக் கொண்டன.

அத்துடன் நாணயத்தாள்களை அச்சடித்தல் போன்ற சந்தர்ப்பங்களிலும் ஈடுபட்டன.

இதனையடுத்து கொரோனா பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக பணம் செலவிடப்பட்டது. இந்த சவால்களையடுத்து, நாடு வங்குரோத்து நிலையை அடையும் வகையில் வீழ்ச்சியடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெண்கள், குழந்தைகளுக்கு...

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால், 109 என்ற அவசர இலக்கத்துக்கு தகவல் தெரிவிக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தபால் மூலம் அனுப்பப்பட்ட...

இலட்சம் ரூபாவாவென தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய ராஜ்யம் மற்றும் ஜெர்மனியிலிருந்து நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ள 11 பார்சல்களிலேயே, இப்போதைப் பொருட்கள் சூசகமான வகையில் அனுப்பப்பட்டுள்ளன.

சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ள மேற்படி போதைப் பொருட்கள், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## அரிசி இறக்குமதித் தேவை...

பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், கீரி சம்பா என்ற பீ.ஜி.360 ரக அரிசி இலங்கையில் மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகிறது.

வெளிநாட்டிலிருந்து கீரி சம்பாவை யாராவது கொள்வனவு செய்வார்களென்றால், எந்த நாட்டிலிருந்து அதை, இறக்குமதி செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது.

இவ் வருட பெரும்போக அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது. 780,000 ஹெக்டயாரில் இம்முறை நெற் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் 80,000 ஹெக்டயாரில் கீரி சம்பா உற்பத்தி செய்யப்படுகிறது. இதன்மூலம் 380,000 மெட்ரிக் தொன் கீரிசம்பாவை அறுவடையின் போது பெற்றுக் கொள்ள முடியும்.

## வடக்கு பிரச்சினைகளுக்கு...

சென்றிருந்தார். ஜனாதிபதியின் விஜயத்துக்கு முன்னர் அங்கு சென்ற வஜிரஅபேவர்தன எம்,பி அரச அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே வஜிர அபேவர்தன எம்பி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வடமாகாண விஜயத்தின் போது அங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் வஜிர அபேவர்தன எம்பி யின் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் வடமாகணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டச் செயலாளர்கள், அரச அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கான திட்டங்கள் தொடர்பிலும் அவர், அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார்.

ST&S SINCE 1893

softlogic Finance

# சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி மாபெரும் ஏலவிற்பனை

மாபெரும் ஏலவிற்பனை

117 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்

2024 ஜனவரி 09 செவ்வாய்க்கிழமை

இல. 463, கண்டி வீதி, களனி

என்ற முகவரியில்

காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

விபரம்:

மோட்டார் கார்கள்

| | | |
|---|---|---|
| CBI-9XXX | டொயோட்டா DBA-NGX50 C -HR | 2017 |
| CAR-0XXX | சுசூகி சியாஸ் | 2016 |
| CAE-8XXX | சுசூகி அல்டோ LXI 800 | 2015 |
| CAD 4XXX | சுசூகி அல்டோ LXI 800 | 2015 |
| CAB-7XXX | டொயோட்டா அக்வா DAA-NHP10 | 2013 |
| KT 1XXX | மைக்ரோ பண்டா LC 1.3 | 2012 |
| KU 5XXX | மைக்ரோ MX7 மார்க் 11 | 2012 |
| KR-1XXX | டாட்டா நனோ | 2011 |
| KL-7XXX | மைக்ரோ MX7 மார்க் | 2011 |
| KQ 8XXX | செரி QQ | 2011 |
| KQ-5XXX | ஹொண்டா இன்சைட் | 2010 |
| KI-0XXX | மைக்ரோ டிரெண்ட் | 2009 |
| KP-0XXX | டொயோட்டா பியர்ஸ் | 2007 |
| KE-1XXX | மாருதி வெகன் R | 2007 |
| KG-6XXX | செரி QQ | 2006 |
| KB-0XXX | மாருதி ஸென் | 2005 |
| HB-8XXX | சிட்ரோன் C5 | 2003 |
| KD -3XXX | ஹொண்டா சிவிக் | 2003 |
| KA-7XXX | டொயோட்டா கொரோலா 121 | 2002 |
| GO-4XXX | மாருதி 800 CC | 2002 |
| HU 5XXX | கியா ஸ்பெக்ட்ரா | 2001 |
| JW-5XXX | கியா ஸ்பெக்ட்ரா 1.6M | 2001 |
| JA - 2XXX | கியா கேரன்ஸ் 1.8A | 2001 |
| JL-7XXX | கியா செபியா 1.5 M | 2000 |
| JC 3XXX | டைஹட்சு GD-S200V | 1999 |
| GR-0XXX | நிசான் GS பேர்ட் | 1999 |
| 300-5XXX | ஹொண்டா சிட்டி | 1998 |
| GB-6XXX | நிஸான் சனி | 1998 |
| 300-3XXX | வொல்வோ S70 | 1997 |
| 17-2XXX | ஹொண்டா E-DA2 குயின்ட் | 1997 |
| 301-1XXX | டொயோட்டா கொரோலா-AE100 | 1997 |
| 18-7XXX | மஸ்டா மிஸ்டர் LX | 1994 |
| 300-1XXX | நிசான் FB14 | 1994 |
| 65-0XXX | டொயோட்டா கொரோசா | 1992 |
| 32 SRI 8XXX | டொயோட்டா | 1988 |
| 15 SRI 1XXX | டொயோட்டா (RX72) | 1987 |

ஜீப் வண்டிகள்:

| | | |
|---|---|---|
| KH-9XXX | மைக்ரோ கைரோன் 200XDI | 2009 |
| HP- 9XXX | ஹையுண்டி சடாபியா | 2001 |

வேன்கள்:

| | | |
|---|---|---|
| PE-5XXX | நிசான் ADF-VWME25 | 2008 |
| PC-1XXX | சுசூகி EBD-DA64V எவேரி | 2007 |
| JK-5XXX | நிசான் கெரவன் | 2000 |
| PA-0XXX | ஹையுண்டி கிரேஸ் H100 | 2000 |
| PA-2XXX | ஹையுண்டி கிரேஸ் H100 | 2000 |
| PA-5XXX | மேர்ஸிடஸ் பென்ஸ் MB100 D | 1998 |
| GS-8XXX | மிட்ஷுபிஷி டெலிகா | 1997 |
| 252-3XXX | நிசான் | 1994 |
| 250-9XXX | டொயோட்டா LH102 | 1993 |
| 252-0XXX | இசுசு பார்கோ | 1993 |

முச்சக்கர வண்டிகள்:

| | | |
|---|---|---|
| ABE-8XXX | TVS | 2015 |
| ABK 7XXX | TVS | 2015 |
| AAX-0XXX | பஜாஜ் RE | 2015 |
| AAX-0XXX | பஜாஜ் RE | 2015 |
| AAL-1XXX | TVS கிங் (M) | 2013 |
| AAH-9XXX | பஜாஜ் RE | 2013 |
| AAL-4XXX | பஜாஜ் RE | 2013 |
| YW-7XXX | பஜாஜ் RE 205 | 2012 |
| QR-8XXX | பஜாஜ் ஒட்டோ AR4S | 2008 |

பிரைம் மூவர்கள்:

| | | |
|---|---|---|
| LY-4XXX | ரெனால்ட் பிரீமியம் 460DXI | 2012 |
| LY-2XXX | டாப் FTGXF 105 | 2011 |

கெப்கள்:

| | | |
|---|---|---|
| JP-2XXX | நிசான் KG-SP6F23 குரோ கெப் | 2000 |
| 250-9XXX | நிசான் 4WD டபிள் கெப் | 1998 |

லொறிகள்/ டிரக்குகள்:

| | | |
|---|---|---|
| DAF-8XXX | மஹின்ட்ரா BMT பிளஸ் MDI | 2017 |
| DAF-0XXX | டாட்டா ஏஸ் HT 2 | 2016 |
| LM-7XXX | டாட்டா LPT 709 | 2016 |
| DAF-3XXX | DFSK டிரக் EQ1020DR | 2016 |
| DAC 9XXX | மஹின்ட்ரா சுப்ரோ மக்ஸி டிரக்T6 | 2016 |
| DAB-4XXX | மஹின்ட்ரா BMT பிளஸ் MDI | 2015 |
| DAB-6XXX | மஹின்ட்ரா பொலேரோ மக்ஸி டிரக் | 2015 |
| DAC 6XXX | அசோக் லேலண்ட் டோஸ்ட் LX | 2015 |
| LO 7XXX | இசுசு எல்ப் BKG-NPR85YN | 2014 |
| PW-4XXX | டாட்டா ஏஸ் | 2013 |
| PT-1XXX | டாட்டா ஏஸ் | 2012 |
| PS-7XXX | டாட்டா ஏஸ் EX | 2012 |
| PT-4XXX | டாட்டா ஏஸ் | 2012 |
| PR-2XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2011 |
| LJ-3XXX | டாட்டா LPT 1109 | 2011 |
| LP - 2XXX | மிட்ஷுபிஷி கென்டர் SKG-FEB50 பிரீஸர் | 2011 |
| PS-2XXX | மஹின்ட்ரா பொலேரோ மெக்ஸி டிரக் | 2011 |
| PR-4XXX | டாட்டா ஏஸ் | 2011 |
| PR-4XXX | மஹின்ட்ரா மெக்ஸிமோ | 2011 |
| PQ-4XXX | டாட்டா ஏஸ் | 2010 |
| PP-8XXX | டாட்டா ஏஸ் | 2010 |
| LD-4XXX | JAC HFC1040K | 2007 |
| LD-2XXX | சாங்கன் | 2007 |
| JN-5XXX | டாட்டா 207 DI | 2004 |
| LA-0XXX | மிட்ஷுபிஷி கென்டர் | 2000 |

மோட்டார் சைக்கிள்கள்:

| | | |
|---|---|---|
| BIX-1XXX | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2020 |
| BIB-2XXX | ஹொண்டா நவி | 2019 |
| BID-3XXX | ஹொண்டா டியோ | 2019 |
| BIH-8XXX | சுசூகி பர்க்மேன் | 2019 |
| BHZ-7XXX | யமஹா ரே-ZR (டிரம் நியூ) | 2019 |
| BIF 5XXX | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2019 |
| BIA-9XXX | ஹீரோ மெஸ்ட்ரோ எட்ஜ் | 2019 |
| BIC-6XXX | TVS என்ரொக் டிஸ்க் | 2019 |
| BGX-3XXX | சுசூகி கிக்ஸர் 150 | 2018 |
| BGG-6XXX | ஹொண்டா டியோ SCV110 | 2018 |
| BGZ-7XXX | சுசூகி கிக்ஸர் 150 | 2018 |
| BGU-5XXX | சுசூகி கிக்ஸர் 150 | 2018 |
| BHG-0XXX | யமஹா FZ VER 2.0 | 2018 |
| BHS-5XXX | ஹீரோ மெஸ்ட்ரோ | 2018 |
| BHK-4XXX | TVS அபாச்சி | 2018 |
| BHF-9XXX | பஜாஜ் பிலட்டினா | 2018 |
| BHK-1XXX | பஜாஜ் டிஸ்கவர் | 2018 |
| BIB 1XXX | ஹொண்டா நவி | 2018 |
| BGT-1XXX | மஹின்ட்ரா கஸ்ட்ரோ (M) | 2018 |
| BHF-6XXX | மஹின்ட்ரா ரொக்ஸ்டார் (M) | 2018 |
| BHB-7XXX | மஹின்ட்ரா ரொக்ஸ்டார் | 2018 |
| BGN-0XXX | மஹின்ட்ரா கஸ்ட்ரோ (M) | 2017 |
| BAA-5XXX | பஜாஜ் பள்சர் 150 | 2012 |

டிப்பர்கள்:

| | | |
|---|---|---|
| LN-2XXX | லங்கா அசோக் லேலண்ட் 1616 | 2017 |
| LI-5XXX | லங்கா அசோக் லேலண்ட் 1613 | 2011 |
| LH-3XXX | டாட்டா - LPK 1615 | 2009 |
| LD 2XXX | லங்கா அசோக் லேலண்ட் E கொமட் 1112 | 2007 |
| LC-8XXX | டாட்டா LPK 1615 | 2006 |
| 226-3XXX | நிசான் 2 கியூப் டிப்பர் | 1992 |

ரெயிலர்:

| | | |
|---|---|---|
| LX-4XXX | தந்திரி TF840 பிளட்போர்ம் | 2021 |

பார்வையிடல் - ஏல விற்பனை நடைபெறும் ஸ்தலத்தில் 2024 ஜனவரி 07 ஞாயிறு மற்றும் 08 திங்கள் ஆகிய தினங்களில்

(காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை)

விற்பனை நிபந்தனைகள்

- **நுழைவு:** ஏல விற்பனை நடைபெறும் தினத்தில், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- **கொடுப்பனவுகள்:** விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் **2024 ஜனவரி 12ஆந் திகதி வெள்ளிக்கிழமை** பி.ப 3.00 மணிக்கு முன்னர், இல. 305B, நாவல வீதி, நாவல என்ற முகவரியில் அமைந்துள்ள சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் காசாகச் செலுத்தப்பட வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உண்டு.
- ஏலதாரர் / சொப்ட்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி யின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம®

ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்

CELEBRATING 125 Years

011 2671468

www.sandslanka.com


## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.12.06 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பதுளை பிரசித்த நொத்தாரிசு டீ.எம்.என்.எஸ். திசாநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2019.02.07 திகதியிட்ட ஈட்டு முறி இல 1002, பதுளை பிரசித்த நொத்தாரிசு பீ.ஏ. உதயங்கனி அத்தாட்சிப்படுத்திய 2019.11.19 திகதியிட்ட ஈட்டுமுறி இல.833 ஆகியவற்றின் பேரில் எல்ல, பஸ்ஸர வீதி, அம்பகொல்ல பத்தனவில் வசிக்கும் திரு. வீரவர்ண நிலவீர ரம்பட்டபெந்திகே தயாரத்ன, மற்றும் திருமதி வீரவர்ண நிலவீர ரம்பட்டபெந்திகே ஷானிகா இஷானி ஆகியோரிடமிருந்து 1ஆவது கடன் மீது 2023.10.25 வரை முதலும் வட்டியும் ரூ.29,074,420.94 (இருபத்தொன்பது மில்லியன் எழுபத்துநான்கு ஆயிரத்து நானூற்று இருபது ரூபாய் தொண்ணூற்று நான்கு சதமும்) அத்துடன் ரூ.17,666,662.00 (பதினேழு மில்லியன் அறுநூற்று அறுபத்தாறு ஆயிரத்து அறுநூற்று அறுபத்திரெண்டு ரூபாய்) மீது ஆண்டுக்கு இருபத்து மூன்று தசம் ஐந்து பூச்சியம் (23.50%) வீதத்தில் 2023.10.26 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 2ஆவது கடன் மீது 2023.10.25 வரை முதலும் வட்டியும் ரூ.12,005,584.14 (பன்னிரெண்டு மில்லியன் ஐந்து ஆயிரத்து ஐந்நூற்று எண்பத்து நான்கு ரூபாய் பதினான்கு சதமும்) அத்துடன் ரூ.9,489,746.56 (ஒன்பது மில்லியன் நானூற்று எண்பத்தொன்பது ஆயிரத்து எழுநூற்று நாற்பத்தாறு ரூபாய் ஐம்பத்தாறு சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் எட்டு ஆறு (13.86%) வீதத்தில் 2023.10.26 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், 3ஆவது கடன் மீது 2023.10.25 வரை முதலும் வட்டியும் ரூ.6,186,072.23 (ஆறு மில்லியன் நூற்று எண்பத்தாறு ஆயிரத்து எழுபத்து இரண்டு ரூபாய் இருபத்து மூன்று சதமும்) அத்துடன் ரூ.4,718,974.70 (நான்கு மில்லியன் எழுநூற்றுப் பதினெட்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து நான்கு ரூபாய் எழுபது சதம்) மீது ஆண்டுக்கு பதின்மூன்று தசம் எட்டு ஆறு (13.86%) வீதத்தில் 2023.10.26 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. பதுளை பிரசித்த நொத்தாரிசு டீ.எம்.என்.எஸ். திசாநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2019.02.07 திகதியிட்ட ஈட்டு முறி இல.1002, பதுளை பிரசித்த நொத்தாரிசு பீ.ஏ. உதயங்கனி அத்தாட்சிப்படுத்திய 2019.11.19 திகதியிட்ட ஈட்டுமுறி 833 ஆகியவற்றின் பேரில் மேற்குறிப்பிட்ட ரூ.29,074,420.94 (இருபத்தொன்பது மில்லியன் எழுபத்து நான்கு ஆயிரத்து நானூற்று இருபது ரூபாய் தொண்ணூற்று நான்கு சதமும்), ரூ.12,005,584,14 (பன்னிரெண்டு மில்லியன் ஐந்து ஆயிரத்து ஐந்நூற்று எண்பத்து நான்கு ரூபாய் பதினான்கு சதமும்), ரூ.6,186,072.23 (ஆறு மில்லியன் நூற்று எண்பத்தாறாயிரத்து எழுபத்து இரண்டு ரூபாய் இருபத்து மூன்று சதமும்), அத்துடன் 2023.10.26 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் பிரிவு 397 அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு எல்ல இலங்கை வங்கி கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**ஈட்டுமுறியில் மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

ஊவா மாகாணம் பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலாளர் பிரிவில் கும்பல்வெல கோரளையில் எல்ல நகர கிராம சேவகர் பிரிவில் எல்ல நகரில் அமைந்த தம்பகொல்ல பத்தன என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஏ.எம்.கே. கருணாரத்ண தயாரித்த 2018.10.29 திகதியிட்ட வரைபடம் இல.5365 இல் காணித்துண்டு இல.01 என எல்லை நிர்ணயித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 01, வடக்கில் றீ.எஸ்.பீ.பீ.11 இல் காணித்துண்டு இல.144 மற்றும் 161உம், கிழக்கில் றீ.எஸ்.பீ.பீ.11 இல் காணித்துண்டு 161,258,260,243,239 மற்றும் 234 உம், தெற்கில் றீ.எஸ்.பீ.பீ.11 இல் காணித்துண்டு 258,260,243,239,234,137 மற்றும் 261 உம், மேற்கில் றீ.எஸ். பீ.பீ.11 இல் காணித்துண்டுகள் 261 மற்றும் 144உம் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் பூச்சியம் தசம் மூன்று எட்டு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.2,பே.0.38) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும்.

**மேற்கூறிய காணி பின்வரும் காணியின் ஒரு மீளளவை ஆகும்.**

ஊவா மாகாணம் பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலாளர் பிரிவில் கும்பல்வெல கோரளையில் எல்ல நகர கிராம சேவகர் பிரிவில் எல்ல நகரில் அமைந்த தம்பகொல்ல பத்தன என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.என்.கினிகம தயாரித்த 2018.06.22 திகதியிட்ட வரைபடம் இல.2662 இல் காணித்துண்டு இல.A என எல்லை நிர்ணயித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு A வடக்கில் றீ.எஸ்.பீ.பீ.11 இல் காணித்துண்டு இல.144 மற்றும் 161 உம், கிழக்கில் றீ.எஸ்.பீ.பீ.11 இல் காணித்துண்டு 161,258,260,243,239 மற்றும் 234 உம், தெற்கில் றீ.எஸ்.பீ.பீ.11 இல் காணித்துண்டு 258,260,243,239,234,137 மற்றும் 261 உம், மேற்கில் றீ.எஸ்.பீ.பீ.11 இல் காணித்துண்டுகள் 261 மற்றும் 144உம் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றூட் பூச்சியம் தசம் மூன்று எட்டு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.2,பே.0.38) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும்.

**மேற்கூறிய காணி பின்வரும் காணிக்கு ஒத்த காணி ஆகும்.**

ஊவா மாகாணம் பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலாளர் பிரிவில் கும்பல்வெ கோரளையில் எல்ல நகர கிராம சேவகர் பிரிவில் அம்பகொல்ல கிராமத்தில் அமைந்த தம்பகொல்ல பத்தன என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் நாயகம் தயாரித்த வரைபடம் இல. றீ.எஸ். பீ.பீ.11 இல் காணித்துண்டு 257 என எல்லை நிர்ணயித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் காணித்துண்டு இல.144 மற்றும் 161 உம், கிழக்கில் காணித்துண்டு 161,258,260,243,239 மற்றும் 234 உம், தெற்கில் காணித்துண்டு 258,260,243,239,234,137 மற்றும் 261 உம், மேற்கில் காணித்துண்டுகள் 261 மற்றும் 144உம் எல்லைகளாகக் கொண்டு ஹெக்டெயார்கள் பூச்சியம் தசம் இரண்டு பூச்சியம் மூன்று மூன்று (0.2033) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் சகலதும் ஆகும். இக்காணி பதுளை காணிப்பதிவகத்தில் LDO/U 06/154 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**(ஒதுக்கங்கள்)**

1. இக்காணியில் அல்லது அதில் காணப்படும் கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்புள்ள கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணி மீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்:**

1. உரிமையாளர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை குறிப்பாக மேட்டு நிலத்தில் 0.025 ஹெக்டெயார்களை விற்பனை செய்யலாகாது.
2. உரிமையாளர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்சப் பகுதியை விடக்குறைவான பங்கின் அதாவது 1/8 பிரிக்கப்படாத பங்கினை விற்பனை செய்யக்கூடாது.
3. நிபந்தனை 1இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
4. நிபந்தனை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக்குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரையும் உரிமையாளராக்க முடியாது.
5. இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின் போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின் போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6. அரச முகவரின் எழுத்திலான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் எழுத்து மூலம் பெற்றாலே ஒழிய உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ தேடவோ எடுக்கவோ உபயோகப்படுத்தவோ விற்கவோ இன்றேல் அப்புறப்படுத்தவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொரு பகுதியையும் கைமாற்றக்கூடாது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**

**றீ.எம்.எல்.எஸ். தென்னகோன்.**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**எல்ல கிளை**


1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன் 2024.01.03 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5348 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,179,056.00
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 1 6 5 3 7 2

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3590 — சீட்டிழுப்பு திகதி 2024.01.03 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,399,985.56
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 32 45 62 73 — விசேட எழுத்து P — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 08724

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1696 — 2024.01.03 — 45476 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 419,606,414.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 20 — வெற்றி இலக்கங்கள் 19 22 47 57
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP** — திகதி 2024.01.03 — சீட்டிழுப்பு இலக்கம் 0174
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 9 0 4 2 6 6
L7 எழுத்து S — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 22,506,726.68

**ராசி சுப பலன்** — திகதி 2024.01.03 — சீட்டிழுப்பு இலக்கம் 657 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,365,579.84
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 17 50 56 62 — தனயோக இலக்கம் 08062 — நாளுக்கான விதி எண் 11

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1378 — 2024.01.03 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 128,210,344.08
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 12 22 77 78 — விசேட எழுத்து Z — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 31349

## இலங்கை வங்கி

### ஏலவிற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

**கடன் வசதி தொடர்பு இல. 77003355, 82217941, 82495698.**

**மேலதிகப்பற்று தொடர்பு இல. 6733984.**

அம்பலாந்தோட்டை, ஹம்பாந்தொட்டை வீதி, சுபிரின்டன்கம, இல. 197/A இல் அமைந்த ரைஸ் மில்ஸ் அன்ட் அக்ரோ பிரைவேற் லிமிடெற்றின் ஏக உரிமையாளர் திரு. சமிந்த பரணமான ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.12.01 ஆம் திகதி 2361 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 நவம்பர் 27 ஆம் திகதி திங்கட்கிழமை தினகரன், தினமின, மற்றும் டேய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2024.01.30 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

தென் மாகாணம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிருவபற்று கிழக்கில் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் வளவ 125 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் மெதகம மற்றும் பாய்பொக்க அமைந்த "மெதகமகலே காணித்துண்டு 2 மற்றும் திகனஎலிய காணித்துண்டு 2" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் என். விஜேவீர தயாரித்த 2007 செப்டெம்பர் 2 திகதியிட்ட வரைபடம் இல.7386 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 01 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு 01 வடக்கில் காணித்துண்டுகள் 08 மற்றும் 09 உம், கிழக்கில் காணித்துண்டு 6 உம், தெற்கில் தங்கல்ல-ஹம்பாந்தோட்டை பிரதான பாதையும் மேற்கில் காணித்துண்டு 9 மற்றும் வரைபடம் இல.293 இல் காணித்துண்டு 01உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 7386 இன் பிரகாரம் ஒரு றூட் ஐந்து தசம் பூச்சியம் ஏழு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.1, பே.5.07) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் மற்றும் கட்டிடங்கள் சகலதும் ஆகும். இக்காணி ஹம்பாந்தோட்டை காணிப்பதிவகத்தில் H59/44 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தென் மாகாணம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிருவபற்று கிழக்கில் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் வளவ 125 ஆம் இலக்க கிராம உத்தியோகத்தர் பிரிவில் மெதகம மற்றும் பாய்பொக்க கிராமங்களில் அமைந்த "மெதகமகலே காணித்துண்டு D2 மற்றும் திகனஎலிய காணித்துண்டுகள் 07 மற்றும் 08" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எல்.கே.குணசேகர தயாரித்த 2015 ஜூலை 09 திகதியிட்ட வரைபடம் இல.6772 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு C என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு அதாவது காணித்துண்டு C வடக்கில் அதே வரைபடத்தில் காணித்துண்டு B உம், கிழக்கில் வரைபடம் இல. 653 இல் காணித்துண்டு 06 உம், தெற்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் என்.விஜயவீர தயாரித்த வரைபடம் இல. 7386 இல் காணித்துண்டு 01 உம் மேற்கில் வரைபடம் இல. 653 இல் காணித்துண்டு 9 (பிரவேசப்பாதை) உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 6772 இன் பிரகாரம் ஒரு றூட் பதின்மூன்று பேர்ச்சுகள் (ஏ.0,றூ.1,பே.13) விஸ்தீரணமுடையதுடன் அங்கு காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் மற்றும் கட்டிடங்கள் சகலதும் ஆகும். இக்காணி ஹம்பாந்தோட்டை காணிப்பதிவகத்தில் H59/42 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்கூறிய அனைத்துக் காணிகளுக்கும் ஒதுக்கியுள்ள சகல பாதைகளையும் உபயோகிப்பதற்கான உரிமையும் ஆகும்.

"மேற்குறிப்பிட்ட ஆதனங்கள் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏலவிலை கூறுவோர் சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு தொ.பே.இல. 0472223280 ஊடாக அம்பலந்தோட்டைக் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பரீட்சிக்கலாம்."

**1. பணம் செலுத்தும் முறை.: ஏலவிலை கூறல் வெற்றியடைந்ததும் கொள்வனவாளர் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.**

1.1 வாங்குபவர் கொள்வனவு விலையில் 10%ஐ (பத்து சதவீதம்) உடனே செலுத்த வேண்டும்.

1.2 வற் (VAT) கட்டணம். (ஏற்புடையதாயின்)

1.3 விற்பனை வரி விதிப்பனவாக உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1% (ஒரு சதவீதம்) செலுத்த வேண்டும்.

1.4 ஏலதார தரகுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளாக 2.5% (2.5 சதவீதம்) செலுத்த வேண்டும்.

1.5 ஏற்புடையதாயின் விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள்.

1.6 ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகள்.

மேலும் கொள்வனவு விலையில் 10% ஐ ஏலவிற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அத்துடன் விற்பனைத் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொள்வனவு விலையில் மீதி 80% ஐ செலுத்த வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக முத்திரைக்கட்டணம் மற்றும் நொத்தாரிஸ் கட்டணம், விற்பனை நிபந்தனைகள் மற்றும் விற்பனைச் சான்றிதழ் அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்கமறுப்பின் ஏலவிலை கூறிய தினத்தில் கொள்வனவாளர் செலுத்திய சகல பணங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரமும் ஆதனத்தை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரமும் வங்கிக்கு உண்டு.

**2. ஆதனத்துக்குச் செல்லும் வழி.**

அம்பலந்தோட்டை மணிக்கூட்டுச் சந்தியிலிருந்து ஹம்பாந்தோட்டைக்குச் செல்லும் பிரதான பாதையில் சுமார் 1.7 கி.மீ. தூரம் 228 ஆவது மைல்கள் வரை செல்லவும். மேலும் 100 மீற்றர் சென்றதும் ஆதனத்தை அடையலாம். ஆதனம் பிரதான பாதையின் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,**

**இலங்கை வங்கி**
**அம்பலந்தோட்டைக் கிளை**

**திரு. எச்.எம்.சீ.எஸ். குமார**
**முகாமையாளர்.**


1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# கிழக்கின் குரல்



# அம்பாறையில் மழையால் 5,944 குடும்பங்கள் பாதிப்பு



**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்த அடை மழையால் 23 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 5,944 குடும்பங்களைச் சேர்ந்த 19,959 பேர் பாதிக்கப்பட்டதாக, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம். ஏ.சீ.எம்.றியாஸ் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 3ஆம் திகதிவரை பெய்த அடை மழை மற்றும் பலத்த காற்றால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

வெள்ளத்தால் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் 2,140 குடும்பங்களைச் சேர்ந்த 8,100 பேரும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் 1,287 குடும்பங்களைச் சேர்ந்த 3,992 பேரும், காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் 1,203 குடும்பங்களைச் சேர்ந்த 3,992 பேரும், லகுகல பிரதேச செயலாளர் பிரிவில் 888 குடும்பங்களைச் சேர்ந்த 2,324 பேரும் பாதிக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, 143 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்கு முதற்கட்டமாக 10,000 ரூபா நட்டஈடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்த அவர், மழையால் முழுமையாக பாதிக்கப்பட்ட வீடுகளின் விபரம் கிடைத்ததும் முழுமையான நட்டஈடு வழங்கப்படுமென்றார்.

வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்த 2,990 குடும்பங்கள் தற்போது சீரான காலநிலை நிலவுவதை தொடர்ந்து அவர்களின் சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடு பிரதேச செயலக ரீதியாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

க.பொ.த. உ/த பரீட்சை;

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 9,259 பேர் தோற்றுகின்றனர்



**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

இம்முறை கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 9,259 பேர் தோற்றுவதாக, மட்டக்களப்பு மாவட்ட பரீட்சை நிலையம் தெரிவித்தது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. பாடசாலை பரீட்சார்த்திகளாக 7,318 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 1,941 பேரும் இம்முறை பரீட்சைக்கு தோற்றுகின்றனர். இந்நிலையில், மட்டக்களப்பில் 68 பரீட்சை நிலையங்களும் 8 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மட்டக்களப்பு மாவட்ட பரீட்சை நிலையம் தெரிவித்தது.

கல்குடா, மட்டக்களப்பு, மட்டக்களப்பு மத்தி, மண்முனை மேற்கு, பட்டிருப்பு ஆகிய ஐந்து கல்வி வலயங்களிலும் பரீட்சைக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு பரீட்சை நடைபெறுவதாகவும், மட்டக்களப்பு மாவட்ட பரீட்சை நிலையம் மேலும் தெரிவித்தது.

வெருகலில்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிழக்கு ஆளுநரால் நிவாரணம் வழங்கல்



**திருகோணமலை தினகரன் நிருபர்**

திருகோணமலையின் வெருகல் பிரதேசத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 320 குடும்பங்களுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரளவும் இணைந்து நேற்று முன்தினம் புதன்கிழமை உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

அகம் தன்னார்வ அமைப்பின் அனுசரணையுடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை அவர்கள் வழங்கி வைத்தனர்.

கடந்த வாரம் முழுவதும் வெருகல் பிரதேசத்தில் பெய்த கடும் மழையால் கடுமையான வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டதுடன், அப்பிரதேசத்தில் 320 குடும்பங்களைச் சேர்ந்த 968 பேர் வெள்ளப் பாதிப்பை எதிர்நோக்கினர்.

இதேவேளை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையிலான குழுவினர் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியதுடன், அவர்களின் தேவைகளையும் அந்தக் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர். இந்நிலையில், இந்த மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவும் பணிப்புரை வழங்கப்பட்டது.

# தோப்பூர் நிருபருக்கு கலைமுத்து விருது



**தோப்பூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேச செயலகம் நடத்திய 2023ஆம் ஆண்டுக்கான கலை இலக்கிய விழாவில் தோப்பூரைச் சேர்ந்த எஸ்.எல்.நௌபர் அண்மையில் கலைமுத்து விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவர் ஊடகத்துறைக்கு ஆற்றிய பெரும்பங்களிப்புக்காகவே விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். பத்திரிகைகளில் தனது ஆக்கங்களை எழுதி வரும் இவர், தினகரன் பத்திரிகையின் தோப்பூர் பிராந்திய செய்தியாளராகவும் உள்ளார். சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர், மத்தியஸ்தராக பணியாற்றி வருவதுடன், காணி உத்தியோகத்தராகவும் உள்ளார்.



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உப்பாறு, சோலைவெட்டுவான், மைலாப்பன் சேனை, காரைவெட்டுவான், கண்டல்காடு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கான நிவாரண உதவியை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் நேற்றுமுன்தினம் வழங்கி வைத்தார். இதன்போது கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனியும் இணைந்துகொண்டார்.

திருகோணமலை - கொழும்பு

# புதிய ரயில் சேவை 07 இல் ஆரம்பம்

**மூதூர் தினகரன் நிருபர்**

திருகோணமலை - கொழும்புக்கு இடையிலான நவீன குளிரூட்டப்பட்ட புதிய ரயில் சேவை ஞாயிற்றுக்கிழமை (07) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, திருகோணமலை பிரதான ரயில் நிலையப் பொறுப்பதிகாரி தி.சர்வேஸ்வரன் தெரிவித்தார். கொழும்பு, புறக்கோட்டையிலிருந்து அதிகாலை 5.45 மணிக்கு திருகோணமலைக்கு பயணத்தை ஆரம்பிக்கும் குளிரூட்டப்பட்ட ரயில், திருகோணமலை ரயில் நிலையத்தை முற்பகல் 11.45 மணிக்கு அடையும். இதேவேளை, திருகோணமலையிலிருந்து இந்த ரயில் மதியம் 12.35 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படுமென்பதுடன், மாலை 6.35 மணிக்கு புறக்கோட்டை ரயில் நிலையத்தை அடையும். இதன் அடிப்படையில் இந்த சேவை வழமையான சேவையாக தொடர்ந்து இடம்பெறுமெனவும், அவர் தெரிவித்தார்.


## அறிவித்தல் !

பேராளர் மாநாடு
ஐக்கிய சமாதான கூட்டமைப்பு

திகதி
ஜனவரி 14 ஞாயிறு, 2024

நேரம்-
பகல் 2:30 முதல் மாலை 5:30 வரை

இடம்-
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை கேட்போர் கூடம்,
இல.14, சுதந்திர வழி, கொழும்பு 07.

பஷீர் சேகு தாவூத் - தவிசாளர்
எம்.டி.ஹசன் அலி - பொது செயலாளர்
ஐ.ஏ.கலீலூர் ரஹ்மான் - பொருளாளர்

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு

## காணி விற்பனைக்கு

திஹாரிய இஸன்றல் ப்ளேஸ் மீர்கனிய்யா தக்யாவுக்கு முன்னால் 10 1/2 பேர்சஸ் தரிசு நிலம், வீடு, கடை கட்டுவதற்கு உகந்த இடம் அல்அஸ்ஹர் தேசிய பாடசாலை பெரிய பள்ளிவாசல் மற்றும் சகல வசதிகளுடன் வாரன வீதி அருகில் (தரகர் தேவையில்லை.)

டெலிபோன் - 0775504221, 0779595751

## சிவில் பாதுகாப்பு திணைக்களம்

## விலைமனுக்கோரல்

### வாகனக் காப்புறுதி - 2024

01. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான 424 வாகனங்களை 2024 ஆம் ஆண்டில் காப்பீடு செய்வதற்கான திறந்த மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | வாகனத்தின் வகை | உற்பத்தி செய்யப்பட்ட வருடம் | காப்பீட்டின் வகை | மனு ஆவணம் பெற்றுக்கொள்ளக் கூடிய திகதி | மனு ஆவணம் வழங்கப்படும் இறுதித்திகதி | விண்ணப்பம் முடிவடையும் திகதி | மீளச் செலுத்தப்படாத மனு ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | Double Cab | 34 | | 08.01.2024 | 30.01.2024 | 30.01.2024 (10.00 மணிக்கு முதல்) | |
| 02 | Single Cab | 15 | | | | | |
| 03 | Pajero jeep | 21 | | | | | |
| 04 | Dimo Batta | 05 | | | | | |
| 05 | Lorries | 14 | | | | | |
| 06 | Vans | 08 | முழுமையான | | | | |
| 07 | Cars | 10 | | | | | |
| 08 | Defenders | 08 | | | | | |
| 09 | Tippers | 02 | | | | | 5,000.00 |
| 10 | Water Bowsers | 03 | | | | | |
| 11 | Buses | 12 | | | | | |
| 12 | Three Wheelers | 02 | | | | | |
| 13 | Tractors | 74 | | | | | |
| 14 | Trailers | 65 | | | | | |
| 15 | Trailer Bowsers | 09 | 03ம் பிரிவினர் | | | | |
| 16 | Hand Tractors | 24 | | | | | |
| 17 | Motor Cycle | 118 | | | | | |

02 மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.

03 மேலே குறிப்பிட்டுள்ள மீளச்பெற முடியாத கட்டணத்தை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிப் பிரிவில் சரப்பிடம் பணமாக செலுத்திய பின்னர் பொது விடுமுறைகள் தவிர்ந்த வார நாட்களில் **மு.ப. 09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

04 விலைமனுக்கள் 02 பிரதிகளாக சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் மற்றும் நகல் பிரதி முத்திரையிடப்பட்டு அசல் பிரதியுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

05 ஆர்வமுள்ள அல்லது தகுதியுடைய மனுதாரர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மீளப்பெற முடியாத மனு ஆவணக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர் உரிய மனு ஆவணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் - வழங்கல்
சிவில் பாதுகாப்பு திணைக்களம்,
ஜெயா மாவத்தை, கட்டுபெத்த, மொரட்டுவ.

பணிப்பாளர் வழங்கல் : 011- 2044854/5 **தொலைநகல் இல : 011-2044855**

**பணிப்பாளர் நாயகம்**
**சிவில் பாதுகாப்பு திணைக்களம்.**

SELACINE

## HEINEKEN LANKA LIMITED

## எந்தவொரு உரிமைக்கோரல்கள் குறித்தும் கடன்கொடுநர்களுக்கான அறிவிப்பு

7வது மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் டவர் 2, 315 வொக்சோல் வீதி, கொழும்பு - 02 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்துடன், முறையாக கூட்டிணைப்புச் செய்யப்பட்ட ஒரு நிறுவனமான HEINEKEN Lanka Limited, 31.12.2023 என்ற திகதியில் உள்ளவாறு தனது கணக்குப் புத்தகங்களை மூடும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பின் குறிப்பிட்ட காலக்கெடு முடிவடையும் திகதிக்குள், 31 டிசம்பர் 2023 திகதியின் படி HEINEKEN Lanka Limited நிறுவனத்தின் அனைத்து கடன்கொடுநர்களையும் எம்முடன் தொடர்பு கொண்டு, அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய எந்தவொரு நிலுவைத் தொகைகள் குறித்தும் தெரியப்படுத்துவதற்காக இந்த முறையான அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அதன்படி, கடன்கொடுநர்கள் தங்கள் உரிமைக்கோரல்களை எழுத்துமூலமாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நிலுவையில் உள்ள தொகைகளை விபரித்து மற்றும் ஏதேனும் அதற்கான ஆதார ஆவணங்களை வழங்க வேண்டிய முகவரி:

| | | |
|---|---|---|
| **முகவரி** | ருவாந்தி பெர்னாண்டோ,<br>சிரேஷ்ட முகாமையாளர்,<br>Ernst & Young – Business Consulting,<br>றொடுன்டா டவர்ஸ்,<br>இல 109, காலி வீதி,<br>கொழும்பு 03 | சமந்தி காரியவசம்,<br>நிதிப் பணிப்பாளர்,<br>HEINEKEN Lanka Limited,<br>7வது மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் டவர் 2, 315 வொக்சோல் வீதி, கொழும்பு - 02 |
| **மின்னஞ்சல்** | ruwanthi.fernando@lk.ey.com | samanthi.Kariyawasam@heineken.com |

உரிமைக்கோரல்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு 10.01.2024 ஆகும்.

HEINEKEN Lanka Limited அதன் கடன்கொடுநர்களிடமிருந்து நிலுவையிலுள்ள தொகைகள் தொடர்பான எந்தவொரு கடிதப் பரிமாற்றத்தையும் 2024 ஜனவரி 10 ஆம் திகதிக்குள் பெற்றுக்கொள்ளாவிட்டால், நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களில் பிரதிபலிக்கும் நிலுவைகள் உண்மையானவை மற்றும் இறுதியானவை என்று கருதப்படும்.

**ஜொஹான் முனவீர**
**பணிப்பாளர் - நிறுவன விவகாரங்கள்,**
**HEINEKEN Lanka Limited**
**7வது மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ் டவர் 2,**
**315 வொக்சோல் வீதி, கொழும்பு-02.**

# உலகின் ஆயிரம் முஸ்லிம்கள் 2024 இல் உம்ராவை இலவசமாக நிறைவேற்ற வசதி

## சவுதி அரேபிய மன்னர் அறிவிப்பு



இரு புனித பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் உலகெங்கிலுமுள்ள ஆயிரம் முஸ்லிம்கள் 2024 இல் இலவச உம்ரா கிரியை நிறைவேற்ற வசதியளிப்பதாக நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.



மன்னரின் இவ்வறிவிப்பின் பிரகாரம் அவரது சொந்த செலவில் உலகின் பல பிரதேசங்களையும் சேர்ந்த ஆயிரம் பேர் உம்ரா கிரியையை முற்றிலும் இலவசமாக செய்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள இருக்கின்றனர். இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுபவர்கள் புனித மக்காவுக்கு வருகை தந்து உம்ரா கிரியை நிறைவேற்றவும் மதீனா மற்றும் புனிதஸ்தலங்களுக்கு விஜயம் செய்யவும் சகல ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

அதேநேரம் மன்னர் சல்மானின் ஏற்பாட்டில் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஹஜ், உம்ரா கடமைகளை இலவசமாக நிறைவேற்றவும் விஷேட விருந்தினர் திட்டத்தின் கீழ் வருடாவருடம் வசதி அளிக்கப்படுகின்றனர்.

சவுதி அரேபியாவின் ஆட்சியாளர்கள் அன்று தொட்டு இன்று வரையும் உலகின் பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த முஸ்லிம்கள் ஹஜ் உம்ரா கடமைகளை இலவசமாக நிறைவேற்ற வருடாந்தம் வசதி அளிப்பது வழமையாகும். அந்தடிப்படையில் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து ஒவ்வொரு வருடமும் உலகின் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஹஜ், உம்ரா கடமைகளை நிறைவேற்றவென தன்னுடைய சொந்த செலவில் வழங்கி மன்னரது விஷேட விருந்தினராக மக்காவுக்கு அழைத்து அக்கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய அனைத்து வசதிகளையும் அளிக்கின்றார். இதன் நிமித்தம் இளவரசர் முஹம்மத் பின் சல்மானும் சவுதி அரேபியாவின் இஸ்லாமிய கலாசார அமைச்சர் அஷ்ஷைக் அப்துல் லதீப் ஆல் ஷைக்கும் துணையாக நிற்கின்றனர்.

உலக முஸ்லிம்களுக்கென இவ்வாறு வசதி அளிக்கின்ற மன்னர் சல்மான் பாதிக்கப்பட்ட பலஸ்தீன மக்களிலும் ஒவ்வொரு வருடமும் ஆயிரம் பேர் ஹஜ், உம்ரா கடமைகளை இலவசமாக நிறைவேற்ற விஷேட கவனம் செலுத்தி வசதி அளிக்கின்றார்.

இந்த இலவச உம்ரா திட்டத்தின் கீழ் நிச்சயம் இலங்கை முஸ்லிம்களும் நிச்சயம் உள்வாங்கப்படுவர் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறான வாய்ப்புக்களை வருடா வருடம் வழங்கும் மன்னர் சல்மானுக்கும் இளவரசர் முஹம்மத் பின் ஸல்மானுக்கும் இஸ்லாமிய கலாச்சார அமைச்சர் அஷ்ஷைக் அப்துல் லதீப் ஆல் ஷைக்குக்கும் சவுதி அரசுக்கும் இலங்கை முஸ்லிம்கள் சார்பாகவும் உலக முஸ்லிம்கள் சார்பாகவும் இலங்கை அல் ஹிக்மா நிறுவனம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகிறது.



**அஷ்ஷைக் எம்.எச். ஷைஹுத்தீன் மதனி**
பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு

# துபாய் சயீடா அமைப்பின் ஸ்தாபகர் இலங்கைக்கு நல்லெண்ண விஜயம்

**(அஜ்வாத் பாஸி)**



துபாய், சயீடா அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் சலீம் யூசுப் நேற்று முன்தினம் (03) இலங்கைக்கு வருகை தந்துள்ளார். சயீடா அமைப்பின் நிதியுதவியில் இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயவே அவர் இந்நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

சயீடா அமைப்பின் இலங்கை இணைப்பாளர் நௌஸர் பௌஸியின் அழைப்பில் வருகை தந்துள்ள அவர், நேற்றைய தினம் கொழும்பு, பாத்திமா மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற வைபவத்தில் கலந்துகொண்டதோடு அவருக்கு மகத்தான வரவேற்புமளிக்கப்பட்டது.



படங்கள் : ருசைக் பாரூக்

இவ்வைபவத்தின்போது, சயீடாவின் நிதியுதவியில் கொழும்பு மாவட்டத்திலுள்ள சுமார் 10 பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கட்டட நிர்மாண பணிகள் தொடர்பில் 'புரொஜெக்டர் திரை' மூலம் அவருக்கு ஏற்பாட்டாளர்களினால் காண்பிக்கப்பட்டது.

மேற்படி 10 பாடசாலைகளில் முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவம் மற்றும் சிங்கள பாடசாலைகள் உள்ளடங்குவதென்பது விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி உட்பட 10 பாடசாலைகளினதும் அதிபர்கள், உப அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# பொருளாதார மேம்பாட்டுக்கு உயர்கல்வி ஊடாக பங்களிக்கும் விஞ்ஞானம், தொழில்நுட்பத்திற்கான சர்வதேச பல்கலைக்கழகம்

## அடுத்தவாரம் மாணவர்களுக்கு கற்கைநெறிகளை அறிமுகம் செய்யும் நிகழ்வு



**மர்லின் மரிக்கார்**

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புனானையில் அமைந்துள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிகளை உயர்கல்வி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு எதிர்வரும் வாரம் இடம்பெற உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு எதிர்வரும் பெப்ரவரி மாதம் இறுதிப்பகுதியில் அல்லது மார்ச் மாத முற்பகுதியில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கும் இப்பல்கலைக் கழகத்தின் கற்கை நெறிகளை அறிமுகம் செய்யும் நிகழ்வே அடுத்த வாரம் இடம்பெற விருப்பதாக இப்பல்கலைக் கழகத்தின் தலைவரான பொறியியலாளர் ஹிராஸ் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்திருக்கிறார்.

மாணவர்களுக்கு கற்கை நெறிகளை அறிமுகம் செய்யும் இந் நிகழ்வின் போது பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் அவற்றின் உத்தியோகத்தர்களையும் கல்வியியல் ஆலோசகர்களையும் மாணவர்களும் அவர்களது பெற்றோரும் சந்தித்து கலந்துரையாட வாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு இப்பல்கலைக்கழகத்தின் வசதிகளை அவர்கள் பார்வையிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு மத்தியில் புதுமுக அறிமுகமும் கற்கை நெறி அறிமுகத்தின் போது கிடைக்கப்பெறும். ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்னசேகர இப்பல்கலைக்கழகத்திற்கு துணை வேந்தராக நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் கல்விசார் அதிகாரிகளுடன் கலந்துரையாடி தாம் விரும்பிய கற்கை நெறிகளை மாணவர்கள் தெரிவு செய்து கொள்ளலாம். சகல வசதிகளையும் உள்ளடக்கி 10 ஆயிரம் மாணவர்களைக் கொண்ட பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் செயற்படத் தொடங்கும் போது இலங்கையிலுள்ள மிகப் பெரிய தனியார் பல்கலைக்கழகமாக இது விளங்கும் என்றும் குறிப்பிடுகிறார் பொறியியலாளர் ஹிராஸ் ஹிஸ்புல்லாஹ்.

தற்போது இப்பல்கலைக்கழகம் நவீன வசதிகளுடன் கூடிய உட்கட்டமைப்புக்களை கொண்டதாக விளங்குகிறது. குறிப்பாக இங்கு மூன்று விசாலமான விரிவுரை மண்டபங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 200 மாணவர்களை உள்ளடக்கக்கூடியனவாக அமைந்துள்ளதோடு 80 மாணவர்களை உள்ளடக்கக்கூடிய 14 விரிவுரை மண்டபங்களும் அடங்கியுள்ளன. 08 ஆய்வுகூடங்களைக் கொண்டுள்ள இப்பல்கலைக்கழகம் வளர்ச்சியடைந்த நாடுகளின் பல்கலைக்கழகங்கள் கொண்டுள்ள நவீன வசதிகளுடனான நூலகத்தையும் கொண்டிருக்கிறது. கல்விசார் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கென தங்குமிட 150 அறைகள் தயார்படுத்தப்பட்டுள்ளதோடு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான தங்கும் விடுதி வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பு பல்கலைக்கழகமென ஏற்கனவே பெயரிடப்பட்டிருந்த இப்பல்கலைக்கழகத்தின் தற்போதைய பெயரே 'விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச பல்கலைக்கழக'மாகும்.

இப்பல்லைக்கழகம் தொடர்பில் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தவறான பிரசாரத்தினால் சுமார் 4 வருடங்கள் அரசாங்கத்தின் ஏற்பாட்டில் இராணுவத்தின் பொறுப்பில் இருந்தது. அக்காலப்பகுதியில் கொவிட் 19 தொற்று சிகிச்சை நிலையமாகவும் இப்பல்கலைக்கழகக் கட்டடங்கள் பயன்படுத்தப்பட்டன.

ஆனாலும் இப்பல்கலைக்கழகக் கட்டடங்கள் பயன்படுத்தப்படாது மூடப்பட்டு கிடப்பது தொடர்பில் விஷேட கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகத் தலைவராக முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்வின் வேண்டுகோளின் அடிப்படையில் அவரிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தார்.

பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், வரைபடக்கலை, சட்டம், சுற்றுலா மற்றும் வர்த்தக முகாமைத்துவம், வள முகாமைத்துவம், விவசாய தொழில்நுட்பம் கலாசாரம் மற்றும் மொழிகள் ஆகிய பீடங்கள் அடங்கலாக ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய உலகளாவிய ரீதியில் வளர்ச்சிபெற்றுவரும் செயற்கை நுண்ணறிவு மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பான கற்கை நெறிகளும் இப்பல்லைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிடுகிறார் கலாநிதி ஹிஸ்புல்லாஹ்.



உள்நாட்டு வெளிநாட்டு தொழிற் சந்தைக்கு ஏற்ப செய்முறைப் பயிற்சியுடன் இங்கு கற்கை நெறிகள் முன்னெடுக்கப்படும்.

வெளிநாடுகளில் அதிக செலவுடன் கற்கக்கூடிய கற்கை நெறிகளை இங்கு சாதாரண கட்டணத்தில் உள்நாட்டு மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கும் உயர்கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் நிதியமொன்று அமைக்கப்பட உள்ளது என்று குறிப்பிட்ட முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ், நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு உயர் கல்வியின் ஊடாக பங்களிப்பதே இப்பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கம் என்றுள்ளார்.



மலையகத் தனித்துவத்தலைவன்,புரட்சித் தலைவன் மனித நேயமிக்க தலைவன், சமூக சிந்தனையுள்ள தலைவன் அமரர்.பெ.சந்திரசேகரனின் 14ஆவது சிரார்த்த தினம் பதுளை மற்றும் தலவாக்கலை ஐக்கிய மக்கள் முன்னனி மற்றும் ஐக்கிய தொழிலாளர் முன்னனி ஆகிய காரியாலயங்களில் அனுஷ்டிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

# மொனராகலை - பிபில வாகன விபத்து கொலையென உறுதி; ஒருவர் கைது

**(அக்குறணை குறூப் நிருபர்)**

மொனராகலை பிபில வீதியில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 23ஆம் திகதி நக்காவத்த என்ற இடத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்தனர். இதுதொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இது ஒரு விபத்தல்ல கொலையென தெரியவந்துள்ளது. சம்பவத்தில் உயிரிழந்த பெண் ஏற்கனவே திருமணமாகி ஒரு குழந்தைக்கு தாயான நிலையில் கணவரை விட்டு பிரிந்து பிறிதொரு நபருடன் வாழ்ந்துவந்துள்ளார்.

பின்னர் அவரையும் கைவிட்டு பிறிதொரு நபருடன் வாழ்ந்து வந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் சந்தேகநபர் அப்பெண்ணின் முன்னாள் காதலன் என தெரியவருகின்றது.

# பெரிய இராணிவத்தை தோட்டத்தில் தீ விபத்து

## இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் பாதிப்பு



**(ரமேஷ், மஸ்கெலியா தினகரன் விசேட, ஹற்றன் விசேட நிருபர்கள்)**

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசேணை பெரிய இராணிவத்தை தோட்டத்தில் நேற்று அதிகாலை 4.45 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக மூன்று வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. தீ விபத்தில் நிர்க்கதியான இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 09 பேர் பொது வாசிகசாலையில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர். அதேநேரத்தில் பாதிக்கப்பட்ட மூன்று வீடுகளில் இரண்டு வீடுகளில் மாத்திரமே குடும்பத்தவர்கள் இருந்ததாகவும் ஒரு வீட்டில் யாரும் இருக்கவில்லையெனவும் தெரியவருகின்றது.

தீ விபத்துக்கான காரணத்தை கண்டறிய பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்றனர்.

மேலும் பெரிய இராணிவத்தை தோட்டத்தில் இலக்கம் (01) தொடர் குடியிருப்பில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரவு வேளையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 16 குடும்பங்களைச் சேர்ந்த 78 பேர் நிர்க்கதிக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இத்திட்டத்தில் இரண்டாவது தீ விபத்து சம்பவமும் நடந்தேறியுள்ளது. இச்சம்பவத்தில் 10 வீடுகளை கொண்ட தொடர் வீட்டுத்தொகுதியில் மூன்று வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஏனைய வீடுகளுக்கும் தீ பரவுவதை தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். அதேநேரத்தில் மூன்று வீடுகளிலிருந்த துணிகள், தளபாடங்கள், ஆவணங்கள் உள்ளிட்ட பாவனை பொருட்கள் சேதமாகியுள்ளன. சேதவிபரங்கள் தொடர்பிலும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## மலைச்சாரல்



கினிகத்தேனை கடவளை விக்னேஸ்வரா கல்லூரியில் பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 2022 இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி முதல்வர் டி.தெய்வேந்திரன் தலைமையில் அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஹற்றன் கல்வி வலய பணிப்பாளர் ஆர்.விஜேயேந்திரன் மற்றும் மத்திய மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் ஏ.ஆர்.சத்தியேந்திரா, ஹற்றன் கல்வி பணிமனையின் உதவி கல்வி பணிப்பாளர் வண ஏ.ஜி.வில்சன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
(படம்: கினிகத்தேனை தினகரன் நிருபர்)

### புதையல் தோண்டிய ஏழு பேர் உபகரணங்களுடன் கைது

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி எல்லைப்பிரதேசமான மில்லனிய ஹல்தொட்ட பிரதேசத்தில் தனியாருக்குச் சொந்தமான காணியொன்றில் புதையல் தோண்டிய சந்தேகநபர்கள் ஏழு பேரை மில்லனிய பொலிஸார் நேற்று (4) கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இவ்விடத்தை சுற்றிவளைத்த பொலிஸார் சந்தேகநபர்களை உபகரணங்களுடன் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் 22 முதல் 46 வயதுக்குட்பட்ட மில்லனிய ஹல்தொட்ட ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என மில்லனிய பொலிஸார் தெரிவித்தனர்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

**I. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.**

அந்த நாரை நீரில் முன்னும் பின்னுமாக நீந்திக் கொண்டு இருந்தது. சிறிய மீன்களைப் பார்த்தவுடன் கரண்டி போன்ற தன் அலகால் அவற்றை அள்ளியது. தண்ணீர் வடிந்த பின் அகப்பட்ட அந்தச் சிறிய மீன்களை விழுங்கியது.

01. நீரில் முன்னும் பின்னுமாக நீந்திக் கொண்டிருந்த பறவை எது? .....................

02. இங்கு இடம்பெற்றுள்ள அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக.

..........................................................................................

03. ஒற்றைக் கொம்பும், அரவும் இடப்பட்டுள்ள ஒரு சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

..........................................................................................

04. இப்பந்தியில் இடம்பெறும் அ·்றிணை, பன்மை, பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக.

..........................................................................................

05. மீன்களை என்பதன் ஒருமை வடிவை எழுதுக. ..........................................

06. தண்ணீர் எனும் சொல்லை பிரித்து எழுதுக. ..........................................

**II.**

07. இளமையில் ................................ சிலையில் எழுத்து.

08. மின்னுவதெல்லாம் .......................... அல்ல.

09. நோயற்ற .................................... குறைவற்ற செல்வம்.

**வாக்கியத்தில் கோடிடப்பட்ட சொல்லுக்குரிய எதிர்க்கருத்துச் சொல்லை அடைப்பினுள் எழுதுக.**

10. நீதிமன்றத்தில் குற்றவாளி தனது கருத்தினைத் தெரிவித்தான். (.......................)

11. நான் காலையில் இறைவனை வணங்கினேன். (..........................................)

12. கோடை காலத்தில் குடையை பயன்படுத்துவோம். (...................................)

**பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

13. யானைகள் கூட்டங்கூட்டமாக வாழ்கின்றன. (......)

14. மனிதர்களுடன் நட்பாக இருக்க விரும்புகின்றன. (......)

15. ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

i. உண்மை - ............................ ii. நித்திரை - ..............................

iii. சந்தோசம் - .......................... iv. தாமரை - ..............................

v. இரத்தம் - ............................


**தொடர்மொழிக்கு பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.**

16. மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை ..........................................

17. முனிவர் வாழும் இடம் ......................................................................

18. ஒருவர் பிறந்து இறக்கும் வரை உள்ள காலம் .......................................

19. தாவரத்தின் பகுதிகள் குறிக்கும் சொல்லை ஆங்கில எழுத்துக்களால் எழுதுக.



20. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை சிங்கள மொழியில் கூறும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i. எனக்குப் பசிக்கின்றது - ..........................................................

ii. உங்களுக்கு தங்கைமார் எத்தனை பேர்? ..........................................

**III. பிரசினங்களைத் தீர்க்க.**

21. ஒரு தோட்டத்தில் 3,927 தேயிலைக் கன்றுகளையும், இன்னொரு தோட்டத்தில் 4,563 தேயிலைக் கன்றுகளையும் நட முடியும். இரு தோட்டங்களிலும் நடக்கூடிய தேயிலைக் கன்றுகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................................

22. இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளிலுள்ள தொழிலாளர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளன.

| தொழிற்சாலை | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 1 | 1,927 | 1,359 |
| 2 | 889 | 2,521 |

i. இரு தொழிற்சாலைகளிலும் உள்ள ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

ii. இரு தொழிற்சாலைகளில் உள்ள பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................................

iii. இரு தொழிற்சாலைகளிலும் உள்ள தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................................

23. கயிறுத்துண்டு ஒன்றின் நீளம் 5m 60cm ஆகும். இன்னொரு கயிறுத்துண்டின் நீளம் 3m 30cm ஆகும். இரண்டு கயிற்றுத் துண்டுகளின் மொத்த நீளம் யாது?

..........................................................................................


24. நீல நிற வயர்த்துண்டு ஒன்றின் நீளம் 8m 20cm ஆகும். சிவப்பு நிற வயர்த்துண்டு ஒன்றின் நீளம் 5m 30 cm ஆகும். இரண்டு வயர்களினதும் மொத்த நீளம் யாது?

..........................................................................................

25. அளவு நாடா ஒன்றின் நீளம் 1m 50 cm ஆகும். அவ்வாறான இரண்டு நாடாக்களின் நீளம் யாது?

..........................................................................................

26. கீழே தரப்பட்டுள்ள உருக்களுக்கு பொருத்தமான பின்னங்களை நிறம் தீட்டுக.



2/4 3/4 1/2

27. கடிகாரமுகம் காட்டும் நேரத்தை விட ஒரு மணித்தியாலம் கழித்து காட்டும் நேரத்தை எழுதுக.



i. .............................. ii. ........................

28. கொழும்பிலிருந்து பி.ப. 2.15ற்கு புறப்பட்ட பேருந்து ஒன்று பி.ப. 6.15 கண்டியை சென்றடைந்தது. அப் பயணத்திற்காக செலவழிக்கப்பட்ட நேரம் எவ்வளவு?

..........................................................................................

29. மு.ப. 7.30 இற்கு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையானது பி.ப. 1.30ற்கு நிறைவடைந்தது எனின், பாடசாலை நடைபெற்ற நேரம் எவ்வளவு?

..........................................................................................

**IV. சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. உடல், உள ஆரோக்கியத்தை பேணும் செயற்பாட்டின் முதலாவது படிமுறை
i. உடலை தளர்த்தல் ii. பிரார்த்தனை iii. திடசித்தம்

31. இரவில் இலைகள் சுருங்கும் ஒரு தாவரம்
i. தேங்காய்ப்பூ கீரை ii. அகத்தி iii. கறிவேப்பிலை

32. கீழே காணப்படும் நபர்களில் எமது நாட்டிலிருந்த முதல் பிரதமர் யார்?

i.  ii.  iii. 

33. நீருடன் நன்றாகக் கலக்கக்கூடியது
i. டீசல் ii. தேங்காய் எண்ணெய் iii. வினாகிரி

34. தண்டில் காய்கள் காய்க்கும் தாவரம் எது?
i. விலிம்பிக்காய் ii. தேங்காய் iii. மாங்காய்

35. பல் வளர்ச்சிக்கு அவசியமான போசணைப்பதார்த்தம்
i. புரதம் ii. காபோவைதரேற்று iii. கல்சியம்

36. பின்வருவனவற்றுள் நற்பழக்கவழக்கமாகக் கருதக்கூடியது
i. மீண்டும் மீண்டும் தண்டனைக்குள்ளாதல்
ii. கோபமாக பெற்றோருடன் கதைத்தல்
iii. கிடைத்த உணவை நண்பர்களுக்கும் பகிர்ந்து உண்ணுதல்

37. வரண்ட வலய பிரதேசங்களில் காணக்கூடிய தாவரமொன்று
i. வாழை ii. தாழை iii. கமுகு

38. விரைவில் வாடாத பூ ஒன்று
i. மல்லிகை ii. அந்தூரியம் iii. செவ்வரத்தை

39. விபத்துக்கள் நடைபெறுவதற்கான காரணம் அல்லாதது
i. அறியாமை ii. அறிவுறுத்தல்களை பின்பற்றாமை
iii. அறிவுறுத்தல்களை பின்பற்றுதல்

40. பாதசாரிகள் எப்பொழுதும் பாதையில்
i. வலது பக்கமாக நடந்து செல்ல வேண்டும்
ii. இடது பக்கமாக நடந்து செல்ல வேண்டும்
iii. இரு பக்கங்களிலும் நடந்து செல்ல வேண்டும்

41. குறித்த காலத்தில் மாத்திரம் பூக்கும் தாவரம்
i. தென்னை ii. வாழை iii. மா

42. சக்தியை தரக்கூடிய ஆகாரமாகக் கருதப்படுவது
i. ரொட்டி ii. மீன் iii. கடலை

43. சிங்கள பாரம்பரிய முறைக்கிணங்க விருந்தினரை அழைக்கப் பயன்படுத்தப்படுவது
i. வாழ்த்துமடல் ii. பூச்செண்டு iii. வெற்றிலை

44. சுய பாதுகாப்பிற்காக தனது நிறத்தை மாற்றிக் கொள்ளும் பிராணிகளில் ஒன்று
i. பச்சோந்தி ii. இலையான் iii. மயில்

45. இருளான இடங்களில் நடமாட விருப்பமுடைய பூச்சி
i. நுளம்பு ii. கரப்பான் பூச்சி iii. தேனீ

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

46. பூ ஒன்றின் பகுதி அல்லாதது
i. இதழ் ii. காம்பு iii. வேர்

47. சிறந்த நடத்தைகளில் அடங்காத ஒன்று
i. சமாதானமாக, ஒற்றுமையாக வாழுதல்
ii. நண்பர்களுக்கு உதவுதல்
iii. வகுப்பிலுள்ள நண்பர்களுக்கு இடையூறு செய்தல்

48. தாவரத்தில் தேனை உறிஞ்சிக் குடிக்கும் விலங்கு
i. தேன்சிட்டு ii. ஆண் நுளம்பு iii. பெண் நுளம்பு

49. சுவர்களைக் கட்டும் போது செங்குத்து தன்மையினைப் பரிசோதிக்கும் உபகரணம்
i. தூக்குக்குண்டு ii. மேசன் கரண்டி iii. மட்டப்பலகை

50. தெளிகருவி பயன்படுத்தும் தொழில் எது?
i. மீன்பிடி ii. விவசாயம் iii. மரவேலை

51. கொல்லன் கம்மாலையில் நெருப்பு எரிய காற்றை வழங்கும் உபகரணம்
i. காற்றாடி ii. துருத்தி iii. துறப்பணம்

52. நில நடுக்கத்தின் போது பாதுகாப்பதற்கு உடனடியாகச் செய்ய வேண்டியது யாது?
i. இருக்கும் இடத்தியே இருத்தல்
ii. மரத்திற்கு கீழே இருத்தல்
iii. திறந்த வெளிக்குச் செல்லல்

53. படத்தில் காட்டப்படுவது
i. மின்காந்தம்
ii. மின் இணைப்பு
iii. காந்த வண்ணத்துப்பூச்சி




54. இலையின் ஓரங்களில் முட்கள் உண்டு. இலையின் உள்ளீடு சோறு என அழைக்கப்படும் அந்த தாவரம் எது?
i. அன்னாசி ii. கள்ளி iii. பப்பாசி

55. இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி எது?
i. மூட்டைப்பூச்சி ii. சிலந்தி iii. அழுக்கணவன்

56. லங்கா சுதந்திர மந்திரம், தேசிய தாலாட்டு போன்ற புத்தகங்களை வெளியிட்டவர்
i. வண. எஸ்.மஹிந்த தேரர் ii. கொங்கலா கொட பண்டா
iii. ஆதர் சி. கிளார்க்

57. தேசப்படமொன்றில் இக்குறியீட்டினால் காட்டப்பட்டுள்ளது
i. புகையிரதப் பாதை ii. அதிவேகப் பாதை iii. பிரதான பாதை

58. இலங்கையிலுள்ள மூவின மக்களும் வழிபடச் செல்லும் இடம்
i. மிஹியங்கனை ii. சிவனொளிபாத மலை iii. பிதுறுதலாகல மலை

59. தேசப்படங்களில் அதிவேகப்பாதை காட்டப்பட்டுள்ள நிறம்
i. ஊதா ii. பச்சை iii. சிவப்பு

60. "எனக்கு கிடைத்த பிறந்தநாள் பரிசு" எனும் தலைப்பின் கீழ் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக. வாக்கியங்கள் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் அடங்கியதாகவும் பொருத்தமான எழுவாய் பயனிலையுடன் தெளிவான கையெழுத்தில் இருக்க வேண்டும்.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

### கடந்த வார (29.12.2023) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 11. 3 | 21. 2 | 31. 1 |
| 02. 1 | 12. 2 | 22. 3 | 32. 3 |
| 03. 2 | 13. 3 | 23. 1 | 33. 3 |
| 04. 2 | 14. 1 | 24. 2 | 34. 1 |
| 05. 3 | 15. 2 | 25. 3 | 35. 3 |
| 06. 2 | 16. 1 | 26. 2 | 36. 1 |
| 07. 3 | 17. 3 | 27. 1 | 37. 2 |
| 08. 1 | 18. 3 | 28. 2 | 38. 3 |
| 09. 1 | 19. 2 | 29. 3 | 39. 1 |
| 10. 3 | 20. 1 | 30. 3 | 40. 2 |

# புத்தாண்டிலிருந்து இதுவரை 282 பேருக்கு டெங்கு காய்ச்சல்

(யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்)

யாழ்ப்பாணத்தில் வருடம் பிறந்து முதல் மூன்று நாட்களில் மாத்திரம் 282 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு வைத்தியசாலைகளில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி மற்றும் நெடுந்தீவு பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலகப்பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்து காணப்படுகிறது. தினமும் சராசரியாக 70 தொடக்கம் 100 நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றனர்.



கடந்த டிசம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளிலேயே டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாக காணப்பட்டது.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்திலே மருதங்கேணி மற்றும் நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலகப்பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துள்ளது. கடந்த வருடத்திலேயே யாழ்.மாவட்டத்திலே 3986 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். இந்த வருடத்தில் முதல் மூன்று நாட்களில் 282 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதனால் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

சுகாதாரத் திணைக்களம், பிரதேச செயலாளர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்கள், பொலிஸார் மற்றும் முப்படையுடன் இணைந்து வீடுவீடாகச் சென்று டெங்கு கண்காணிப்பு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த 2ஆம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்திலும் அதனை சூழவுள்ள வீடுகளிலும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பரீட்சை மண்டபங்களாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலும் டெங்கு தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு புகையூட்டல் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் டெங்கு இறப்புகள் காலம் தாழ்த்தி வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்களே இறப்பினை சந்தித்துள்ளனர்.

எனவே எதிர்காலத்தில் டெங்கு அறிகுறி காணப்படும் நோயாளர்கள் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலையை நாடுவதன் மூலம் தங்களை டெங்கிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார்.

## வடக்கின் உதயம்

# யாழ்ப்பாணத்திற்கு வர வேண்டும் என்ற நீண்ட நாள் ஆசை நிறைவேறியது

## பிரபல பாடகர் பாலக்காடு ஸ்ரீராம்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்திற்கு வர வேண்டும் என்பது நிறைய நாள் ஆசை. தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளேன். மகிழ்ச்சியாக உள்ளது என இந்தியாவின் பிரபல பாடகரும், புல்லாங்குழல் இசை கலைஞருமான பாலக்காடு ஸ்ரீராம் தெரிவித்துள்ளார்.



யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் சினிமாவில் பல பிரபலமான பாடல்களை பாடியுள்ளேன். யாழ்ப்பாணத்தில் எனக்கு இசைத்துறை சார்ந்த நண்பர்கள் உண்டு. அவர்களுடன் கச்சேரிகளில் பாடியுள்ளேன்.

எனக்கும் யாழ்ப்பாணம் வர வேண்டும் என நீண்ட நாள் ஆசை, தற்போது அது நிறைவேறியுள்ளது.

யாழ்ப்பாண உணவு பழக்க வழக்கங்கள், மக்கள் எல்லாம் பிடித்திருக்கிறது என தெரிவித்தார்.

# தேன் விற்பது போல பாசாங்கு செய்து மூதாட்டியின் தாலி அறுப்பு

(பருத்தித்துறை தினகரன் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் தேன் விற்பனையில் ஈடுபடுவது போல் பாசாங்கு காட்டி மூதாட்டியிடமிருந்து 7 பவுண் தங்க தாலிக் கொடியை அறுத்த குற்றச்சாட்டில் இருவர் நேற்றைய தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை தொண்டமானாறு பகுதியில் அண்மையில் தேன் விற்பனையில் ஈடுபடுவதை போல பாசாங்கு காட்டி மூதாட்டியிடமிருந்து தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர். சம்பவம் தொடர்பில் மூதாட்டி வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் கோண்டாவில் மற்றும் தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த 50 மற்றும் 41 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியாவில் 20 பரீட்சை நிலையங்களில் 2497 பரீட்சார்த்திகள்

(வவுனியா விசேட நிருபர்)

வவுனியாவில் 2497 மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதுடன், அவர்களுக்காக 20 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப்பரீட்சை நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பித்துள்ளது. அந்தவகையில் வவுனியா மாவட்டத்திலும் அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு பரீட்சை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இம்முறை உயர்தரபரீட்சைக்கு வவுனியாவில் 2497 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளதுடன், அவர்களுக்காக 20 பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 9 இணைப்பு காரியாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் அமைதியான வகையில் ஆர்வத்துடன் பரீட்சைக்கு செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

# பருத்தித்துறையில் கைதான தமிழக கடற்றொழிலாளர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ். விசேட நிருபர்)

பருத்தித்துறை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 12 தமிழக கடற்றொழிலாளர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், 25 தமிழக கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் இரு படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர். அதேவேளை அவர்கள் கடற்படையினரை தாக்கி, மூன்று கடற்படையினருக்கு காயங்களை ஏற்படுத்திய பிறிதொரு குற்றச்சாட்டில் மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கடற்படையினரை தாக்கிய குற்றச்சாட்டு தொடர்பிலான வழக்கு விசாரணை கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற போது அக்குற்றத்தை கடற்றொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டதை அடுத்து 12 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, அதனை 10 வருடங்களுக்கு நீதவான் ஒத்தி வைத்தார்.

# மணல் டிப்பர் மடக்கிப் பிடிப்பு

(முல்லைத்தீவு குறூப் நிருபர்)

கிளிநொச்சி பூநகரி சாமிப்புலம் கிராமத்தில் மணலுடன் சென்ற டிப்பர் வாகனத்தை விசேட அதிரடிப் படையினர் மடக்கிப் பிடித்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பிடிக்கப்பட்ட டிப்பர் மணல் லொறி பூநகரி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. பூநகரி பிரதேசத்தில் தொடர்ச்சியாக மணல், மரக்கடத்தல்கள் இடம்பெறுவதால் அதனை தடுக்க விசேட அதிரடிப்படையினரும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் களம் இறங்கியுள்ளனர்.

# யாழில். கொவிட் தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது சிறந்தது

(கரவெட்டி தினகரன் நிருபர்)

யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் கொவிட் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது சிறந்தது என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றையதினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்று நோயினால் ஒருவர் இறந்துள்ளார்.

எனவே யாழ்ப்பாணத்திலும் பொதுமக்கள் தற்காப்பு நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் கொரோனா தொற்றிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அதேபோல இந்த காலப்பகுதியில் சுவாசம் சம்பந்தமான நோய்கள் மற்றும் வைரஸ் காய்ச்சல் போன்றவை ஏற்படக்கூடும்.

எனவே பொதுமக்கள் தற்போதுள்ள சூழ்நிலையில் கொரோனா தற்காப்பு நடைமுறைகளை பின்பற்றுவது சாலச் சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

# மன்னாரில் தொழிற்பயிற்சிகள் இடைநிறுத்தம்

(தலைமன்னார் விசேட நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபையால் வழங்கப்படும் பயிற்சிகள் உரிய கட்டட வசதிகளின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அதில் தற்காலிகமாக இயங்குவதற்காக கைத்தொழில் அமைச்சருக்கு சொந்தமான கட்டடத்தை பயன்படுத்துவதற்கான அனுமதியை கைத்தொழில் அமைச்சில் பெறுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் மன்னாரில் ஒரு வாடகை கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருந்த தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்டு வந்த இப்பயிற்சிநெறியானது அக்கட்டடம் உரியவர்களால் மீளப்பெறப்பட்டமையால் நிறுத்தப்பட்டுள்ளது.

மன்னாரில் இடைநிறுத்தப்பட்டு இப்பயிற்சிகள் வவுனியாவுக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

இதனால் மன்னார் மாணவர்கள் பலர் சிரமங்களுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வருடந்தோறும் பயிற்சி நிலையம் மன்னாரில் இயங்கி வந்தபொழுது வருடந்தோறும் சராசரி 200 மாணவர்கள் நன்மையடைந்து வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இவ்வருடம் 100 மாணவர்களே தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபையினால் வழங்கப்படும் பயிற்சிகளுக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் நடைபெற்ற மன்னார் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

வீதி அபிவிருத்தி அதிகார சபை

# விலைக்கோரலுக்கான அழைப்பு

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 1. | EOM&M Division (ESE) பிரிவிற்கான பாதுகாப்பு சேவையை வழங்குதல்<br>கேள்வி இல. RDA/EOM&M/Sec-Ser/ESE//2023 /45 |
| 2. | EOM&M Division (ESE) பிரிவின் பலட்டுவ முதல் மத்தள ஹம்பாந்தோட்ட வரையான பகுதிக்கு சுத்திகரிப்பு சேவையை (சுத்திகரிப்பாளர்கள் மட்டும்) வழங்குதல்<br>கேள்வி இல. RDA/EOM&M/CLS/ESE/2023/46 |

மேற்கூறப்பட்ட பெறுகைக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-01-05ஆம் திகதி முதல் 2024-01-26ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**EOM&M பிரிவின் பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

---

## நிதி அமைச்சு

### அபிவிருத்தி லொத்தர் சபை

## ஒரு வருட காலத்திற்கு Firewall Solutions with SLA இற்கான அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கான விலைமனுக்களுக்கான அழைத்தல்

**Bid No.: BLB/PRO/2024/01**

DLB இற்கு ஒரு வருட காலத்திற்கு Firewall Solutions with SLA இற்கான அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்காக ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக கீழ்மட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் பிரகாரம் நடத்தப்படும்.

03. 2024.01.04ஆம் திகதியிலிருந்து 2024.01.18ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் 18% பெசேவ உடனான மீளளிக்கப்படாத கட்டணமாக 2360.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் கொழும்பு -02 கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா (யூனியன் பிளேஸ்) மாவத்தை 356ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவிற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக் கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று இலவசமாக பரீட்சிக்கப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே அமைந்திருத்தல் வேண்டும்.

04. விலைமனுக்கோரல் ஆவணத்தின் பிரகாரம் விலைமனுக்கள் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

05. விலைமனுக்கோரல் ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறான அனைத்து விபரமான தகவலையும் விலைமனுதாரர் வழங்கல் வேண்டும்.

06. விலைமனு நிபந்தனைகளின் பிரகாரம் விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2024.01.19ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு பிந்தாமல் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'Renewal of Licenses for Firewall Solutions with SLA for One Year' என அடையாளப்படுத்தப்பட்டு இலங்கை, கொழும்பு -02 கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, 356ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் கீழ் மட்ட பெறுகைக் குழுத் தலைவரை வந்தடையும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் ஒரு விலைமனுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

07. விலைமனுக்கள் 2024.01.19ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பதிவுத் தபாலில் தலைவர், கீழ் மட்ட பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, 356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை, கொழும்பு -02, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வழங்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024.01.19ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் மூடும் நேரத்தின் பின்னா விரைவாகவே விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

08. விலைமனுக் கோரல் ஆவணங்களை www.dib.lk என்ற அலொச இன் இணையதளத்தில் பார்வையிடலாம்.

**தலைவர்,**
**கீழ்மட்ட பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மாவத்தை,**
**கொழும்பு -02.**
**தொலைபேசி: 011 4824824**
**www.dlb.lk**
04.01.2024

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய கல்வி நிறுவகம்

### சுத்திகரிப்பு சேவை - 2024

தேசிய கல்வி நிறுவகத்தின் மஹரகம மற்றும் மீப்பே வளாகங்களில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் வளவுகளின் சுத்திகரிப்புச் சேவைக்காக கீர்த்தி வாய்ந்த சுத்திகரிப்புச் சேவை நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. 2024 ஜனவரி 29ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை பின்வரும் ஆவணங்களை மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் (பொறியியல் சேவை) இடம் சமர்ப்பித்து பெறுகைப் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. வியாபாரப் பெயர் சட்டத்தின் 149ஆம் பிரிவின் கீழ் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு.
2. அரச அல்லது தனியார் நிறுவனங்களில் இதற்குச் சமமான வேலைகளை கடந்த 03 வருடத்திற்குள் திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளமை என்பதற்கான சான்றிதழ்கள்
3. கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒப்பந்தப் பதிவுச் சான்றிதழிப் பிரதியொன்றை (PCA 3 படிவம்) விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மீளளிக்கப்படாத 4000.00 ரூபா கேள்விக் கட்டணத்தை தேசிய கல்வி நிறுவகத்தின் வளவினுள் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் 607626 எனும் கணக்கிலக்கத்திற்கு பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் எனும் பெயரில் வைப்புச் செய்தமைக்கான பற்றுச்சீட்டு.
5. சகல விலைமனுக்களுடனும் 300,000.00 ரூபா பெறுமதியான 119 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ISO 9001 தர முகாமைத்துவம், ISO 14001 சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் ISO 45001 தொழில்சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சான்றிதழ்களைக் கொண்ட கேள்விதாரர்களுக்கு ஏனைய கேள்விதாரர்களைவிட 15 வீத (5% x 3 = 15%) முன்னுரிமை வழங்கப்படும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் திகதியில் செல்லுபடியாகும் சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை 2024-01-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், பெறுகைக்குழு, தேசிய கல்வி நிறுவகம் என்ற பெயருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன்பு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி மற்றும் உதவிச் சேவைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சுத்திகரிப்புச் சேவைக்கான விலைக்கோரல்'' எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விக்கு முன்னரான கூட்டமொன்று 2024-01-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மஹரகம, தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.**

---

## வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

# தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களம்

## பின்னவல யானைகள் சரணாலயம் ஞாபகார்த்த விற்பனைசாலை – 01 ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடல் – 2024

தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்திற்குச் சொந்தமான பின்னவல யானைகள் சரணாலயத்தின் ஞாபகார்த்த விற்பனைசாலை 01, ஒரு வருட காலத்திற்கு நடத்திச் செல்வதற்காக ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் முகமாக தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் 2024.01.05 முதல் 2024.01.26 பி.ப. 10.30 வரை தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 1**

| இலக்கம் | விற்பனைசாலைகளின் விபரம் | கேள்விப் பிணை ரூ. |
|---|---|---|
| 01 | ஞாபகார்த்த விற்பனைசாலை 01 - பின்னவல யானைகள் சரணாலயம் | 5,000/- |

2. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) இன் கீழ் இடம்பெறும்.

4. கேள்விதாரர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் கீழ்க்காணுமாறு அமைவதுடன் தகைமைகளை உறுதி செய்யும் ஆவணங்களை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   * வியாபார பெயர் பதிவுச் சான்றிதழ் (விற்பனைசாலையுடன் சம்பந்தப்பட்ட துறையில் இருத்தல் வேண்டும்.)

4. கேள்வி ஆவணங்கள் நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்களை அநகாரிக தர்மபால மாவத்த, தெஹிவளை என்ற முகவரியில் உள்ள தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் தலைமையகத்தில் 2024.01.05 முதல் 2024.01.24 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். அதற்காக எழுத்துமூல வேண்டுதல் மற்றும் ஒவ்வொரு விற்பனைசாலைக்கும் வேறுவேறாக ரூ. 1000/- விண்ணப்பப் படிவக் கட்டணம் வீதம் காசாக செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

5. கேள்வி சமர்ப்பிக்கும் மாதிரிகள் 02 பிரதிகளில் பூர்த்தி செய்து (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென) 02 உறைகளில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் திறக்கப்படக்கூடிய இடங்களில் இறப்பர் முத்திரையிட்டு முத்திரையிடல் கட்டாயமாகும். அவ்வாறே உறையின் இடது பக்க மேல் மூலையில் "பின்னவல யானைகள் சரணாலயத்தின் ஞாபகார்த்த விற்பனைசாலை 01 ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடல் 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும். மூலப்பிரதியை உள்ளிட்டு அனுப்பும் உறையின் முன்பக்கம் "மூலப்பிரதி" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

6. கேள்விப் பத்திரங்கள் "தலைவர், பெறுகைக்குழு, தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம், அநகாரிக தர்மபால மாவத்த, தெஹிவளை" என்ற முகவரிக்கு 2024.01.26 மு.ப. 10.30 இற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் கையோடு கொண்டுவந்து திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரம் உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

7. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கும் சபையின் முன்னிலையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அதற்காக கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

8. ஒவ்வொரு விற்பனைசாலைக்கும் கேள்வி ஆவணங்களுடன் பக்க இல. 02இன் அட்டவணை 01இல் குறிப்பிடப்படும் கேள்விப் பிணைக்காக அரச அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 2024.04.26 வரை செல்லுபடியாகும் வங்கிப் பிணை அல்லது பிணைமுறியின் பெறுமதிக்குச் சமமான தொகையை தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்தின் காசாளர் பிரிவிற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். பிணைமுறி சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்கள் கவனத்திற் கொள்ளப்படாது நிராகரிக்கப்படும்.

9. பொருத்தமான கேள்விதாரரை தேர்ந்தெடுத்தல் பற்றிய முழுமையான உரிமை திணைக்கள பெறுகைக்குழுவிற்கு உரியது. அதற்காக எந்த விதத்திலும் வற்புறுத்தல் செய்தல், தேர்ந்தெடுப்பதற்கான தகைமையற்றதாகக் கொள்ளப்படும். இக்கேள்வி கோரல் அறிவித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது பற்றி தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமை தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது. இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு 0112896779 என்ற தொலைபேசி இல. மூலம் திணைக்களத்தின் பிரதம கணக்காளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களம்,**
**அநகாரிக தர்மபால மாவத்த, தெஹிவளை.**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

### 2023 (2024) க.பொ.த சா/த மற்றும் ஏனைய பரீட்சைகளுக்காக வரைதல் தாள்கள் மற்றும் தேர்மோபோர்ம் தாள்களை (Drawing Papers and Thermoform Papers) வழங்குவதற்கான பெறுகை

### ஒப்பந்த இல. 4/10/3/2023(II)

1. பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வரைதல் தாள்கள் மற்றும் தேர்மோபோர்ம் தாள்களை வழங்கும் பெறுகைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| லொட் இல. | வகை | ஒரு லொட்டிலுள்ள பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Drawing Paper GCE O/L, (24"x36") 125±3 GSM (250 Sheets Per Packets) | 250 பெக்கட்டுகள் (62500 தாள்கள்) |
| 02 | Bralian Thermoform Sheet (11"x11.5") (250 Sheets Per Packets) | 50 பெக்கட்டுகள் (12500 தாள்கள்) |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய பொருட்களை வழங்குவதில்/விற்பனை செய்வதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2786200-238 அல்லது 011-2785219) மற்றும் 2024-01-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

. 2024-01-24ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 4100.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2024-04-24ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்திவாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் 123,000.00 இலங்கை ரூபாவிற்கான (ஒரு இலட்சத்து இருபத்து மூவாயிரம் இலங்கை ரூபா) விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாளிலிருந்து 120 நாட்களுக்கு (2024-05-24ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
9 விலைமனுக்கள் 2024-01-26ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''2023 (2024) க.பொ.த சா/த மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கான வரைதல் தாள்கள் மற்றும் தேர்மோபோர்ம் தாள்களை வழங்குவதற்கான பெறுகை - ஒப்பந்த இல.: 4/10/3/2023 (II)" என குறிப்பிடப்படல் வேண்டும்.
11. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் ஏற்படுத்துதல் அல்லது பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற எவ்விதக் கடப்பாடும் இன்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்கோரல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
2024-01-05.

---

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்

**பிரிவு - 55**

கண்டி மாவட்டத்தின் ஹாரிச்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில் ரணவன எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 320324. கண்ட இ.01 பத்திர இல.01 துண்ட இல.493 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த 29/1/1 இரண்டாம் வீதி ராஜகிரிய எனும் விலாசத்தைக் கொண்ட ராஜா சாந்த லால் பெரேரா ஹெட்டிஆரச்சி என்னும் ஆள் 2023.09.24 திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 1/118/4, கலகெதர வீதி, கடுகஸ்தொட்ட என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.01.26 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

---

# கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**சுத்திகரிப்பு பிரிவு**

REPAIRS TO THE WASH ROOM OF CONTROL ROOM AT OTF

(TENDER No.: C-026-2023)

சி-8 வகுதியின் கீழ் CIDA உடன் பதிவு பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவானது (கீழ்மட்ட சிறிய) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இத்தால் அழைக்கின்றது.

ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக் கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகியிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்கும் வேளையில் மீளளிக்கப்படாத விலைமனு வைப்புத் தொகையாக 3500 ரூபாவை (அனைத்து வரிகளுடனானது) சுத்திகரிப்பு நிதித் திணைக்களத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரமானது 2024 சனவரி 16ம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு என்பதுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களின் பெற்றுக் கொள்ளலின் மூடும் திகதி மற்றும் நேரமானது 2024 சனவரி 24ஆம் திகதியன்று பி.ப. 2 மணியென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைமை அலுவலக பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

சப்புகஸ்கந்த, சுத்திகரிப்பு பிரிவு, பராமரிப்பு மற்றும் செயற்றிட்டங்களுக்கான சுத்திகரிப்பு பிரதி முகாமையாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

www.ceypetco.gov.lk என்ற இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பார்வையிட லாம்.
தொலைபேசி: 0094-0765448572/ 0094-11-2401359
தொலைநகல்: 0094-11-2401359/0094-11-2400431

**தலைவர்**
**(திணைக்கள பெறுகைக் குழு கீழ்மட்ட சிறியது)**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்பு பிரிவு**
**சப்புகஸ்கந்த.**

---

## 1964 ஆம் ஆண்டில் காணி எடுத்தல் (திருத்தல்) சட்டத்தின்படி திருத்தப்படவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல : அம்பகோ/3/4/அ/133
காணி அமைச்சின் குறிப்பு இல : LD/05/2008/WS/88

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப் பட்டிருக்கும் காணியை ஒரு பகிரங்க தேவையின் நிமித்தம் அரசு பெற்றுக்கொள்வதற்கு எண்ணியிருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு இல. 2357/15 மற்றும் 2020.07.13ம் திகதி வெளியான இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் III பகுதியை பார்க்கவும்.

**அட்டவணை**

1. மாவட்டம் : நுவரெலியா
2. பிரதேச செயலகம் : அம்பகமுவ கோரளை
3. கிராமம் : கரோலினா தோட்டம்
4. கிராம உத்தியோகத்தர் பிரிவு : 315A கினிகத்தேன
5. காணியின் பெயர் : கரோலினா தோட்டம்
6. வரைபட இலக்கமும் துண்டு இலக்கமும் : F.V.P 106 வரைபடத்தில் துண்டிலக்கங்கள் 226, 227, 228, 229, 230, 231, 232, 233, 234, 235, 236, 237
7. பரப்பளவு : ஹெக்டயார் 0.1878

**சித்ரா ருவினி கமகே**
**பிரதேச செயலாளர்**
**அம்பகமுவ கோரளை**

**2023.12.22 திகதி**
**பிரதேச செயலகம்**
**அம்பகமுவ கோரளை**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## பகிரங்க ஏல விற்பனை

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீ.எல்.சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு, 2023, டிசம்பர் 31ம் திகதிக்கு காலாவதியாகும் மீட்கப்படாத தங்க நகைகள எமது **இல. 1072, மருதானை வீதி, பொரளை** என்ற இலக்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் **ஜனவரி டிசம்பர் 30, 2024 அன்று காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை** ஏலத்தில் விற்கப்படும்.

### எமது தங்கக் கடன் நிலையங்கள்

| | |
|---|---|
| ■ பொரளை | ■ ஹெட்டன் |
| ■ காலி | ■ கண்டி |
| ■ கம்பஹா | ■ பதுளை |
| ■ கடவத்தை | ■ மாவனல்ல |
| ■ களுத்துறை | ■ சிலாபம் |
| ■ கொச்சிக்கடை | ■ குருநாகல |
| ■ கொட்டாஞ்சேனை | ■ அனுராதபுரம் |
| ■ கொட்டாவ | ■ சுன்னாகம் |
| ■ மாத்தறை | ■ தம்புள்ள |
| ■ நீர்கொழும்பு | ■ எம்பிலிபிட்டிய |
| ■ திஸ்ஸமஹாராம | ■ யாழ்ப்பாணம் |
| ■ இரத்தினபுரி | ■ மாத்தளை |
| ■ வெலிகம | ■ நுவரெலிய |
| ■ வத்தளை | ■ பொலன்னறுவை |
| ■ தமெட்டகொட | ■ கிராண்ட்பாஸ் |

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக மூலப்பொருட்களை வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிட்டம்புவ நிர்வாக பொறியியலாளர் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
   I. **RDA/GAM/CE/TEN/2024/01** - போபத்த, சீகிரி மாவத்தையில் மீதமுள்ள பணிகளை அபிவிருத்தி செய்வதற்கான Graded Aggregates for Base Courses (ABC) வழங்கல்
2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு,**
**தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொ.பே 033-2221020 / 033-2226752**

SELACINE

---

**Repeat Your Ad For Better Offers**

---

**மரண சாசனமில்லாத சொத்துகளுக்கான உரித்துரிமை கோருவதற்கான அறிவித்தல்**
**1998 இல 21 உரித்து பதிவு சட்டம் 55ம் பிரிவு**

கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகம பிரதேச செயலகப்பிரிவில் மீகொட தெற்கு கிராமத்தில் கடத்திரள் வரைபட இலக்கம் 520026, வலய இல 03, பத்திர இல 01, துண்டு இல 0259 என்ற காணிக்கு சொந்தமான இல 478/ஏ/01, தஹம்மாவத்த, புதிய வீதி, மீகொட முகவரியில் வசித்த நாபெ விதானகே ஆரியவதி என்பவர் 2020.02.25ம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர்களுக்கு 2024.02.05ம் திகதிக்கு முன்னர் ஹோமாகம காணி உரித்து நிர்ணயத் திணைக்கள அலுவலகம், இரயில் நிலைய வீதி, ஹோமாகம முகவரியில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத்திணைக்கள பிரதேச அவலகத்திற்கு சமுகம் தருவதற்காக ஆகும்.

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணய திணைக்களம்**

---

## பிழை திருத்தம்

**தம்புள்ள மாநகர சபை**
**2024ம் ஆண்டிற்கு வரிக்கட்டண புத்தகங்களைப் பரிசீலித்தல்**

மேற்படி தலைப்பின் கடந்த **29.12.2023** தினகரன் நாளிதழில் பிரசுரமான விளம்பரத்தின் இறுதியில் **மாநகர சபை தம்புள்ள** என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும். விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**தம்புள்ள.**

---

## விலைமனுக்களுக்காக அழைப்பு (IFB)

**பதுளை மாநகர சபை**

### நொறுக்கும் இயந்திரம் மற்றும் குளிர் அறையுடனான புளொக் ஐஸ் மெசினை வழங்குதல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல்

### BMC/NCB/GOODS/2024/01

1. நொறுக்கி மற்றும் குளிர் அறையுடன் நீர் புளொக் மெசினை வழங்குதல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரிப்பதற்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை பதுளை மாநகர சபை ஆணையாளர் சார்பாக பதுளை மாநகர சபை தலைவர் இப்போது அழைக்கின்றார்

| லொட் | பொருட்களின் விபரம் | விநியோக அமைவிடம் மற்றும் விநியோக காலம் | குறைந்தபட்ச தகைமை | விலைமனுப் பிணை |
|---|---|---|---|---|
| லொட் A | புளொக் ஐஸ் உற்பத்தி மெசீன் | பதுளை 120 நாட்கள் | குறைந்தபட்சம் 10 வருட காலத்திற்கு இலங்கையில் பதிவு செய்த ஓர் நிறுவனமாக இருத்தல் | ரூபா 130,000.00 2024.05.10 வரை செல்லுபடியாகும் |
| | புளொக் ஐஸ் நொறுக்கும் இயந்திரம் | | | |
| | 5 தொன் கொள்ளளவுடைய குளிர் அறை | | | |

2. தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யக்கூடிய எல்லா ஆவணங்களும் விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்படும் குறைதபட்ச தகைமைத் தேவைப்பாடுகள் பூர்வாங்க விலைமனு மதிப்பீட்டிற்காக பொருந்துதல் வேண்டும். குறைந்தபட்ச தகைமையை ஈடு செய்யாத எந்த விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்கள் தேசியபோட்டி விலைமனு ஊடாக நடத்தப்படும்.
4. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் பதுளை மாநகர சபை பொறியியலாளர் (badullamceng@gmail.com) இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் 2024.01.05 முதல் 2024.01.25 வரை பதுளை பண்டாரவளை வீதி, பதுளை மாநகர சபையில் விலைமனு ஆவணங்களைப் பரிசீலிக்கலாம்.
5. 2024.01.05 முதல் 2024.01.25 வரை பதுளை மாநகர சபை ஆணையாளரின் கீழ்க்காணும் முகவரிக்கு மின்னஞ்சல் mebadulla21@gmail.com, badullameeng@gmail.com வட்ஸ்அப் இல. 070 4401495 இற்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. 2024.01.26 பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்பு பதுளை, பண்டாரவளை வீதி, பதுளை மாநகர சபை, பெறுகைக் குழுத் தலைவரின் முகவரிக்கு விலைமனுக்கள் விநியோகிக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024.01.26 பி.ப. 2.00 மணிக்கு பதுளை, பண்டார வளை வீதி, பதுளை மாநகர சபையில் அல்லது ஒன்லைன் மூலம் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024.04.12 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. எல்லா விலைமனுக்களுடனும் ரூபா 130,000.00 தொகையுடனான ஓர் விலைமனுப் பிணை இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப் பிணையானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட ஓர் வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்ட ஓர் நிபந்தனையற்ற தேவைக்கேற்ற வங்கி உத்தரவாதமாக இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலம் 2024.05.10 வரையாகும்.

**ஆணையாளர்,**
**பதுளை மாநகர சபை,**
**பண்டாரவளை வீதி, பதுளை.**

---

NSB
**தேசிய சேமிப்பு வங்கி**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

கேள்வி இல.: **NSB/PT/2024/01**

### SUPPLY, OF GIFT PACKS FOR GRADE 1 & PRE-SCHOOL ENTRANTS IN 2024 FOR NATIONAL SAVINGS BANK

2024 ஆம் ஆண்டில் 1 ஆம் தரம் மற்றும் முன்பள்ளியில் புதிதாக அனுமதி பெறுபவர்களுக்காக தேசிய சேமிப்பு வங்கிக்கு பரிசு பொதிகள், அச்சடிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் காகிதாதி உருப்படிகளை வழங்குவதற்காக புகழ் வாய்ந்த முதன்மையான தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற இலங்கையிலுள்ள உள்ளூர் முகவர்கள் ஆகியோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| பெறுகையின் விளக்கம் | 1. தேசேவ இலட்சினை பொறிக்கப்பட்ட காணக்கூடியதான பையொன்றில் அடக்கப்பட்ட 1 நிறமூட்டும் புத்தகம் மற்றும் 1 ஸ்டிக்கர் தாள் ஆகியவற்றை அடக்கியுள்ள 55,000 எண்ணிக்கையான பொதிகள்.<br>2. தேசேவ இலட்சினை பொறிக்கப்பட்ட தெளிவான பையொன்றில் அடக்கப்பட்ட 12 நிற வண்ணக்கோல்கள் தொகுதி, 1 அழிறப்பர், 1 பென்சில் கூராக்கி, 1 அடிமட்டம் மற்றும் 1 கத்தரிக்கோல் ஆகிய காகிதாதிகளை அடக்கியுள்ள 60,000 எண்ணிக்கையான பொதிகள்.<br>3. தேசேவ இலட்சினை பொறிக்கப்பட்ட ''அந்தரேயின்'' கதைகள் அடங்கலான மாணவர்களின் கதை புத்தகங்கள் அல்லது நிகரானவைகளின் 60,000 எண்ணிக்கை. |
| பெறுகையின் முறை | தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் |
| ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | 15,000 ரூபா |
| சமர்ப்பிக்க வேண்டிய விலைமனு உத்தரவாத பெறுமதி | விலைமனுக்கோரல் ஆவணத்திற்கமைவானது |
| விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2024.01.24 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம் | 2024.01.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

1. முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது எந்தவொரு கேள்விதாரருக்கு அல்லது பெயர் குறிப்பிட்டவருக்காக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவர் கேள்விக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னராகவும் கேள்வியை வழங்கிய பின்னரும் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமானதொன்றாகும்.
2. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். படிவங்கள் 2024.01.05 ஆம் திகதியிலிருந்து 2024.01.24 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றின் மூலமாக படிவங்கள் வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் மேலே சுட்டிக் காட்டியவாறு கேள்விக்கு உரித்தான பெறுமதிக்கான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் இந்த உத்தரவாதமானது வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவும் ஆகக் குறைந்த கால எல்லையாகிய 120 நாட்காட்டி நாட்களுக்கு கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் குறிப்பிட்டுள்ள திகதியன்று மு.ப. 10 மணிக்கு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் மு.ப. 10 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. தேசிய சேமிப்பு வங்கியானது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவொன்றின் பகுதியொன்றையும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை வழங்கலுக்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டாண்மை பெறுகைக் குழு - உயர்மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல.: 255, காலி வீதி, கொழும்பு-03.**

---

## நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட்

## முன்மொழிவுகளுக்கான வேண்டுகோளுக்கான அழைத்தல்

### REP No.: NPCL/RFP/SOLAR-V/002
### REP for Installation of 2.3MW rooftop solar photovoltalic (PV) Energy Systems at Valaichchenai Paper Factory

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில் 2.3MW rooftop solar energy systems ஐ நிறுவுவதற்காக இக்கட்டடத்தின் கூரையை வாடகைக்கு வழங்குவதற்காக சிறந்த முறையில் தாபிக்கப்பட்ட, அனுபவமுள்ள மற்றும் புத்தாக்க கம்பனிகளிடமிருந்து நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட்டின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

முன்மொழிவுகளுக்கான வேண்டுகோளானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.

2024 ஜனவரி 5 ஆம் திகதியிலிருந்து 2024 ஜனவரி 25 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமான 5000 ரூபாவை (பெசேவ நீங்கலானது) செலுத்திய பின்னர் (ஐந்தாயிரம் ரூபா) பெற்றுக் கொண்ட பணப்பற்றுச்சீட்டை ca@npc.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புவதன் மூலம், கொழும்பு-05, கிருளப்பன, ஸ்ரட்போர்ட் அவென்யு, 61 ஆம் இலக்கத்திலுள்ள நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட்டிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேற்கூறப்பட்ட பணக் கொடுப்பனவானது இலங்கை வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையிலுள்ள 164807 என்ற நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட்டின் கணக்கிலக்கத்திற்கு வரைவு வைக்கப்படல் வேண்டும்.

அனைத்து முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் அழைத்தல்களும் மீளளிக்கப்படும் விலைமனுப்பிணையான 15,000 ரூபாவிற்கான (பதினைந்தாயிரம் ரூபா)விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 21 நாட்கள் காலப்பகுதிக்கு 2020.10.28 ஆம் திகதியிடப்பட்ட 5.3.11 என்ற பெறுகைக்கான வழிகாட்டி குறிப்பிற்கான 36 ஆம் இலக்கமுடைய பின்னர் வெளியிடப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட முகவராண்மையொன்றிலிருந்து பெறப்பட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2024 ஜனவரி 16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு இலங்கை, கொழும்பு-05,கிருளப்பன, ஸ்ரட்போர்ட் அவென்யு, 61 ஆம் இலக்கத்திலுள்ள நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட் தலைவரின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இக்கூட்டமானது நேரடியாகவே நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. விலைமனுதாரர் அல்லது அவரது சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுக்களை திறத்தலின் போது சமுகமளிக்க விரும்பும் பிரதிநிதியானவர் அமைச்சு கேள்விக் குழுவினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளார்.

தேவைப்படுத்தப்பட்டுள்ள தகவலை அடக்கியுள்ள உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கான அழைத்தல் ஆவணத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"RFP for Installation of 2.3MW rooftop solar photovoltalic (PV) energy systems at Valaichchenai Paper Factory"**என அடையாளமிடப்பட்டு பதிவுத் தபாலில் அல்லது தூதஞ்சல் சேவையில் 2024 ஜனவரி 25 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-05, கிருளப்பன, ஸ்ரட்போர்ட் அவென்யு, 61 ஆம் இலக்கத்திலுள்ள நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

கொழும்பு-05, கிருளப்பன, ஸ்ரட்போர்ட் அவென்யு, 61 ஆம் இலக்கத்திலுள்ள நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட்டில் 2024 ஜனவரி பி.ப. 3 மணிக்கு விலைமனுக்களை மூடிய பின்னர், உடனடியாகவே பெற்றுக் கொள்ளப்பட்ட முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள்கள் திறக்கப்படும்.

விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு மற்றும் செலவினங்களுக்கு தேசிய பேப்பர் கம்பனி லிமிட்டெட்டானது பொறுப்பேற்க மாட்டாது. மேலதிக விபரங்களுக்கு, தொலைபேசி/ மின்னஞ்சல் வழியாக தேசிய பேப்பர் கம்பனி லிமிட்டெட்டின் தலைவருடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி இல. 0112556465, 0112554189 அல்லது ca@npc.lk)

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**கைத்தொழில் அமைச்சு,**
**த.பெட்டி 570, இல.: 73/1, காலிவீதி,**
**கொழும்பு-03.**
**2024 ஜனவரி 5.**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**மாவட்ட செயலகம் - அநுராதபுரம்**

### அநுராதபுர மாவட்ட செயலகத்தின் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் அலுவலக கட்டடம் மற்றும் 354ஏ இலக்க விடுதிகள் ஆகியவற்றின் புதுப்பித்தல்

1. கீழே குறிப்பிட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அநுராதபுர, மாவட்ட செயலகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| | மதிப்பீடு செய்யப் பட்டுள்ள ஆகு செலவு (மில். ரூபாவில்) | நிர்மாண கால எல்லை | CIDA பதிவு | விலைமனு செல்லுப டியாகும் கால எல்லை | இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்படும் விலைமனுப் பிணை |
|---|---|---|---|---|---|
| அநுராதபுர மாவட்ட செயலகத்தின் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் அலுவலக கட்டட புதுப்பித்தல் | 8.86 | 84 நாட்கள் | கட்டிடங்களுக்காக சி-8, சி-7 அல்லது சி-6 | 77 நாட்கள் | 100,000 ரூபா. (2024.05.13 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்) |
| அநுராதபுர மாவட்ட செயலகத்தின் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் 354ஏ இலக்கமுடைய விடுதியின் புதுப்பித்தல் | 12.44 | 91 நாட்கள் | கட்டிடங்களுக்காக சி-7, சி-6 மற்றும் சி-5 | 77 நாட்கள் | 150,000 ரூபா (2024.05.13 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்) |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் வழங்குவதற்கான தகைமைத் தகவல் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 5 ஆம் பிரிவின் 04 ஆம் பிரிவு மற்றும் அட்டவணை ஆகியவற்றை அடக்கும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அநுராதபுர மாவட்ட செயலக பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 071-8345952)
5. ஒவ்வொரு ஆவணத்திற்கும் 3,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், 2024.01.05 ஆம் திகதியிலிருந்து 2024.01.26 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அநுராதபுர மாவட்ட செயலக மாவட்ட செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் 2024.01.29 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அநுராதபுர மாவட்ட செயலக மாவட்ட செயலாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர். சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**J.M.J.K. Jayasundara,**
**தலைவர், மாவட்ட பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்,**
**மாவட்ட செயலகம்,**
**அநுராதபுரம்.**
**2024.01.05**

# அறிவித்தல்

## சகல அரிசி ஆலை உரிமையாளர்கள்

**1971 இல. 14 நெல் சந்தைப்படுத்தல் சபை சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் விநியோகிக்கப்படும் இல. 1684/54 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்.**

**கட்டாயமாக நெல்சந்தைப்படுத்தல் சபையின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்**

அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல் சந்தைப்படுத்தல் சபையில் பதிவு செய்வதன் மூலம் அவர்களுக்கு நெல் மற்றும் அரிசிக்காக சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் அவர்களின் வர்த்தக விடயங்கள் சார்பாக அரசின் முழு அனுசரனைழய வழங்குதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் ஆலை உரிமையாளர்களுக்கு சட்டரீதியான வர்த்தக தரத்தை பெற்றுக்கொள்ளுமுகமாக இப்பதிவு அவசியமாகும். அதனடிப்படையில் 2024.01.20 ம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் இடங்களில் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- தலைமையகம், நெல் சந்தைப்படுத்தல் சபை, 06ஆம் மாடி வீடமைப்பு செயலக கட்டிடம், சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, கொழும்பு - 02 தொ.பே இல.: 011-2335414.
- அம்பாறை வலயம், இகினியாகல வீதி, அம்பாறை. தொ.பே இல.: 063-2224870.
- பொலன்னறுவை வலயம் கதுருவெல, பொலன்னறுவை. தொ.பே இல.: 027-2222407.
- அநுராதபுரம் வலயம், நகரமண்டப பிரதேசம், 2ம் ஒழுங்கை, அநுராதபுரம் - தொ.பே இல.: 025-2222114.
- தெற்கு வலயம், தெஹிகஹலந்த, அம்பலந்தொட்ட. தொ. பே இல.: 047-2225514.
- வடமேல் வலயம் - மில்லெகொட, நிக்கவெரட்டிய தொ. பே. இல: 037-2260628.
- கிழக்கு வலயம், டிப்போ வீதி, கந்தளாய். தொ. பே. இல.: 026-2226691.
- வடக்கு வலயம், பொலிஸ் அருகில், கிளிநொச்சி. தொ. பே. இல.: 021-2060913.

பதிவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபையின் ராஜகிரிய இலங்கை வங்கிக் கிளையின் இல. 6662403 என்ற கணக்கிற்கு ரூ. 1000.00 தொகையை வைப்பு செய்து குறித்தச் சீட்டை விண்ணபத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024. 01.31 அல்லது அதற்கு முன் பதிவுத் தபால் வழியாக அல்லது குறித்த அலுவலகத்திற்கு கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

சகல சட்டரீதியான அரிசி ஆலை உரிமையாளர்களுடன் குறித்த விண்ணப்பத்தின்படி அனுமதிப்பத்திரமொன்று நெல் சந்தைப்படுத்தல் சபையினால் விநியோகிக்கப்படும்.

**தலைவர்,**
**நெல் சந்தைப்படுத்தல் சபை.**

---

**ජාතික භාෂා අධ්‍යාපන සහ පුහුණු ආයතනය**
**தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**
**National Institute of language Education and Training**

## தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் வெற்றிடமாகவுள்ள கணக்காளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த நிறுவனம் 2007 இல 26 பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட அரச சார்பு நிறுவனமாவதுடன், அதன் மாகும்புற, பன்னிப்பிட்டியவில் அமைந்துள்ள தலைமையகத்தில் வெற்றிடமாகவுள்ள கணக்காளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கணக்காளர் பதவிக்காக சேர்த்துக் கொள்ளல் - சேவைகள்**

- நிறுவனத்திற்கு தேவையான மானியங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் நிதி முகாமைத்துவம்.
- நிறுவனத்தின் நிதி விடயங்கள் சம்பந்தமாக பணிப்பாளர் நாயகத்தினால் நிறுவனத்திற்கு பொறுப்புகள்
- நிதி நிர்வாகத்திற்கு சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை தயாரித்தல்.
- வரவு செலவுத் திட்டம் மற்றும் இறுதிக் கணக்கு மதிப்பீட்டுடனான இணைப்பு
- நிறுவனத்தின் கேள்விச் சபையின் பிரதி நிதித்துவம் மற்றும் களஞ்சிய விடயங்களின் மதிப்பீடு
- கணக்குப் பிரிவின் அதிகாரிகளால் கணக்கு விடயங்கள் சரியாக மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.
- நியமன அதிகாரியினால் ஒப்படைக்கப்படும் பதவியுடன் சம்பந்தப்பட்ட வேறு கடமைகள்.

**நியமனத்தின் தன்மை**

நிரந்தர பதவியாகும், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு பங்களிப்பு செய்யப்படும்.

சம்பள அளவு - **MM1-1 2006 Grade II - ரூ. 53,175 - 10x1375 - 15x1910 - 95,575/-**

- கணக்காளர் பதவிக்காக உள்ளக அல்லது வெளி விண்ணப்பதாரிகளாக விண்ணப்பிப்பதாயின்,

**கல்வித் தகைமைகள்**

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி முகாமைத்துவம்

அல்லது

கணக்கியல் பற்றிய விசேட பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

ஆ) இலங்கை பட்டய கணக்கியல் நிறுவனத்தில் / ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ் பெற்ற முகாமைத்துவ கணக்கியல் நிறுவனத்தில் இடைக்கால மத்திய பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

மேற்படி (அ) அல்லது (ஆ) தகைமைகளைப் பூர்த்தி செய்த பின்னர் அத்தகைமை சேர்த்துக் கொள்ளும் குறைந்தபட்ச தகைமையாக கவனத்திற் கொள்ளப்பட்ட பதவியொன்றில் நிதி முகாமைத்துவ துறையில் குறைந்தபட்சம் 01 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**வயது**

22 வயதிற்குக் குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு அதிகூடிய வயதெல்லை பொருந்தாது)

உள்ளக விண்ணப்பதாரிகளை சேர்த்துக் கொள்ளல்.

நிறுவனத்தின் கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகையின் (JM) கணக்கு அதிகாரி பதவியொன்றில் 05 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**மேற்படி பதவிக்கான பொது நிபந்தனைகள் :-**

அ) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ) பதவிக்காக ஒப்படைக்கப்படும் வேலைகளை முறையாக நிறைவேற்றுதல் போலவே நாட்டின் எந்த பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கு தேவையான உடல், உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ) ஊழியர் தமது சம்பளத்தில் 8% ஐ ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்வதுடன், தொழில்தருநரால் 12% உம், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% உம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை, சுயதரவு விபரங்கள் மற்றும் உறவினரல்லாத இருவரின் பெயர், தொ.பே. இலக்கம், மின்னஞ்சல் முகவரி மற்றும் தபால் முகவரி உள்ளடக்கிய தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை, கல்வி/தொழில்சார் சான்றிதழ்களின் பிரதியுடன் 2024 ஜனவரி 17 அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

தற்போது அரச/ மாகாண அரச/ அரச கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை நிறுவன தலைவரின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**இல. 321/1A,**
**ஹைலெவல் வீதி,**
**மாகும்புற**
**பன்னிப்பிட்டிய**

---

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

---

# பிரசித்த ஏல விற்பனை

02ம், 03ம் அக்டோபர் 2023, 30ம், 31ம் அக்டோபர் 2023, 29ம், 30ம் நவம்பர் 2023, 28ம், 29ம் டிசம்பர் 2023 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. மல்டி பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| மாத்தறை, மருதானை, கண்டி, குருநாகல், ரத்தினபுரி, கம்பஹா, அனுராதபுரம். | 24 ஜனவரி 2024 |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

**MULTI FINANCE**
இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

---

# திரைப்படமாக்கல் பற்றிய டிப்ளோமா பாடநெறி 2024

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் நடத்தும் திரைப்படமாக்கல் டிப்ளோமா பாடநெறி 2024 இற்காக விண்ணப்பங்கள் கோரல் ஆரம்பமாகி உள்ளது.**

திரைப்படமாக்கல் பற்றிய டிப்ளோமா சான்றிதழ் சர்வதேச கல்வி சார்பாகவும், பாடநெறியை பயில்வதற்கும் தகைமை ஆகும்.

**கல்விப் பாடங்கள்** — திரைப்பட நெறியாழகை, செம்மைப்படுத்தல், திரைப்படம் பிடித்தல், திரைவசனம், திரைப்பட தர்க்கம் மற்றும் விமர்சனம்

கால எல்லை **01 வருடம்**
சனி/ஞாயிறு தினங்களில் **மு.ப. 9.00** முதல் **பி.ப. 4.00** வரை
**தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன வளாகத்தில்**
விரிவுரை மற்றும் செயன்முறைப் பயிற்சி பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் துறைசார், நிபுணர்களின் பங்குபற்றுதலில்

**தகைமைகள்** — க.பொ.த (உ.தரம்) சித்தியடைந்திருத்தல் அல்லது துறைசார் அனுபவத்தை பெற்றிருத்தல்.

விண்ணப்பங்களுக்கு - **0779864770/ 0715212028 0776763344** இலக்கங்களுக்கு **WhatsApp** செய்யுங்கள்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி **2024.01.30**

தொடர்புகள் : 0112588773, 0112585721

**இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்,**
இல.303, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு - 07

**DIPLOMA IN FILMMAKING**

---

## அரசாங்கத் தகவல் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோருதல் – 2024**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் சுத்திகரிப்புச் சேவையை மேற்கொள்வதற்காக சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதில் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து 2024-01-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதன்பொருட்டு 1000.00 ரூபா மீளளிக்கப்படாத வைப்பொன்றை அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் விலைக்கோரல் ஆவணங்களை 2024-01-05ஆம் திகதி முதல் 2024-01-24ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

03. சுத்திகரிப்புச் செய்யப்பட வேண்டிய கட்டிடம் மற்றும் உத்தேச சேவை தொடர்பாக இடத்தைப் பரீட்சித்துப் பார்க்கத் தேவையானால் அரசாங்கத் தகவல் திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் (நிர்வாகம்) விசாரித்தறியலாம். (தொ.பே. 011-2514266)

04. இதற்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-01-17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

05. விலைக்கோரல் ஆவணங்களை வேலை நேரங்களில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் இல. 163, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொட, கொழும்பு-05 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது அந்த முகவரியில் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து 2024-01-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் 2024-01-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும்.

07. விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சுத்திகரிப்புச் சேவையை வழங்குவதற்கான விலைமனு'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தினித் சிந்தக கருணாரத்ன,**
**அரசாங்கத் தகவல் பணிப்பாளர் நாயகம்,**
**அரசாங்கத் தகவல் திணைக்களம்.**
**தொலைபேசி இல. 0112512332**
**தொலைநகல் இல. 0112514286**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)


| இல. | ஒப்பந்த விபரம் |
|---|---|
| 1 | பரந்தன் - கராச்சி - முல்லைத்தீவு வீதியில் (35+680 - 35+900 KM) புதுகுடியிருப்பில் கொன்கிரீட் வடிகாலினை அமைத்தல் |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.01.05** ஆம் திகதி முதல் **2024.01.26** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நெடுஞ்சாலை இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---


# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்



**118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

KN-3155 KIA SPORTAGE JEEP, 2011, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958. 001119



**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

BHO-5094 YAMAHA RAY ZR, 2018, MOTOR CYCLE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810. 001122

YS-5552 BAJAJ, 2011, QD-8679 BAJAJ, 2006, THREE-WHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711 2 10 810. 001120

**OBSERVER JOBS**
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

**coop WENNAPPUWA**

## வரையறுக்கப்பட்ட வென்னப்புவ பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

**வாக்குரிமையுள்ள அங்கத்தவர்களின் பெயர்பட்டியலை காட்சிப்படுத்தல்**

1992 இலக்கம் 11 மற்றும் 1983 இலக்கம் 32 திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1972 இலக்கம் 05 தேசிய கூட்டுறவுச் சங்க சட்டத்தின் விதிகளுக்கு அமைாக 1976.05.17ம் திகதி ஹலா/433 இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட வென்னப்புவ பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டு 2023-12-31ம் திகதிக்கு ஒருவருடம் பூர்த்தி செய்துள்ள வாக்குரிமையுள்ள ஒவ்வொரு பிரதேசத்துடனும் சம்பந்தப்பட்ட அங்கத்துவ பெயர்ப்பட்டியல் 2024-01-11ம் திகதி முதல் 2024-01-25ம் திகதி வரை சங்க தலைமையகத்தில் மற்றும் குறித்த பிரதேசங்களிலும், www.wencoops.lk இனையத்தளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சங்கத்தின் கட்டளைப் பிரகாரம் - செயலாளர்.

**வரையறுக்கப்பட்ட வென்னப்புவ பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**
புதிய வீதி - வென்னப்புவ, தொலைபேசி: 031-2255265, 031-2254498 பெக்ஸ்: 031-2257848
இனையத்தளம்: www.wencoops.lk மின்னஞ்சல்: mpcswennappuwa@yahoo.com

---

## மாத்தறை பிரதேச சபைக்குச் சொந்தமான இயந்திராதிகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

மாத்தறை பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க்காணும் 02 இயந்திராதிகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் உருப்படி பற்றிய விபரங்கள்

- 49-9549 பெக்கோ இயந்திரம்
- வீதி அமுத்தி (ரோலர்) இயந்திரம்

2024.01.18 மு.ப.10.00 இற்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படுவதால் விண்ணப்பதாரிகளால் அத்தினத்திற்கு முன்னர் ரூ.1000.00 கட்டணத்தொகையைச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொண்டு பங்குபற்றுதலை உறுதி செய்து கொள்ளுமாறு அறிவிக்கிறேன்.

மேற்படி இயந்திராதிகள் 02 ஐ பரீட்சித்தல் வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.4.00 வரை கும்பல்கம உப அலுவலகத்தில் நடைபெறும்.

**செயலாளர் மாத்தறை பிரதேச சபை**
**தொ.பே இலக்கம் - 041-2222906.**

---

**பின்னிணைப்பு 02**

**மரணசாதனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம் பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் மொரட்டுவப் பிரதேச செயலாளர் பிரிவில் கட்டுபெத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல 520205 துண்டு இல 11 பத்திர இல 01 துண்டு இல 296 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இலக்கம்.

**125A, விகாரை வீதி, கட்டுபெத்த. மொரட்டுவ.** (முகவரி)

எனும் விலாசத்தைக்கொண்ட

**கார்தி ஹேவாவசம் இமதுவகே வயலற் பிரனாந்து** (முழுப்பெயர்)

எனும் ஆள் 2021.04.25ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் 207/1, புதிய காலி வீதி, மொரட்டுவ என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணய திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.02.05 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

---

**Repeat Your ad For Better Offers**

---

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 03/10/2023 | 02/11/2023 | 26 & 30 /01/2024 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

## வ/ப சுகாதார சேவை நிதி சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் பற்றிய சுட்டறவுச் சங்கம் (ஆனந்த சங்கம்)

46வது நூற்றாண்டு மகாசபை 2024 ஜனவரி 20 சனி மு.ப. 10.30 இற்கு கனேமுல்ல வீதி, கடவத்தையில் அமைந்துள்ள கே.சி.பி மண்டபத்தில் கௌரவ தலைவர் திரு. வாசனா லியனகேயின் தலைமையில் நடைபெறும்.
அங்கத்தவர்களாகிய உங்களுடைய வரவை கௌரவமாக எதிர்பார்க்கின்றேன்.

**கவனிக்கவும் :**

01. கூட்ட மண்டபத்திற்கு பிரவேசிப்பதற்கு தேசிய அடையாள அட்டை அல்லது திணைக்கள அடையாள அட்டையை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மு.ப. 10.30 முதல் பி.ப. 12.30 வரையான காலத்திற்குள் இம்மகாசபை நடைபெறவுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப் பிரகாரம்,**
**பொது முகாமையாளர் / செயலாளர்,**
**டபிள்யூ.ஏ.ஐ.எல். வீரசிங்ஹ**
**தொ.பே. இல.: 011-2687476**
**011-2699295**
**பெக்ஸ் : 011-2687477**
**2024.01.05**

## பகிரங்க அறிவித்தல்

**நீதிமன்ற கட்டளை மற்றும் கலைப்பாளரை நியமித்தல்**

கம்பனியின் பெயர்:
**தக்ஷலா வீவர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவு இல: PV**17141**
பதிவு அலுவலக முகவரி :
**இல. 11/3, சுனேத்ரா தேவி வீதி கொஹுவல, நுகேகொட**
வழக்கு இல.
HC/Civil/01/2013/Co
**கட்டளை திகதி:**
2013 ஒகஸ்ட் 05
**நீதிமன்றம்:**
வர்த்தக உயர் நீதிமன்றம், கொழும்பு
**கலைப்பாளரின் நியமனத் திகதி:**
2023 நவம்பர் 14
**கலைப்பாளருக்கு அறிவித்தல் விடுத்த திகதி:**
2023 டிசம்பர் 21
**கலைப்பாளரின் பெயர்:**
கெட்டவ கந்தகே சுதத் குமார்
**கலைப்பாளரின் முகவரி:**
இல. 46, லும்பினி மாவத்த, தளுகம, களனி
**கலைப்பாளரின் அலுவலக முகவரி:**
3ம் மாடி, யதாமா கட்டிடம்,
இல. 142, காலி வீதி, கொழும்பு -03

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்**
**பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் இரத்மலானை பிரதேச செயலாளர் பிரிவில் கட்டுகுருந்துவத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 521005 துண்டு இல. 13 பத்திர இல. 01 துண்டு இல. 461ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல 19/1வி, ஹுனுதாகொடலேன், டெம்பிள் வீதி, கல்கிசை எனும் விலாசத்தைக் கொண்ட சிரில் ரமேஷ் விக்ரமசிங்ஹ எனும் ஆள் 2021.04.18ல் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 5/3,3ம் ஒழுங்கை இரத்மலானை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு அறிவித்தல் பிரசுரமான தினம் முதல் எதிர்வரும் ஒரு மாதம் செல்லும் காலம் 05.02.2024 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

## மரணசாசனமில்லாத சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

**1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்து பதிவுச் சட்டம்**
**பிரிவு 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் ரிலாவல எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல.: 520024, கண்ட இல.: 01, பத்திர இல. --------- துண்டு இல. 0156 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த பொல்கஸ்ஓவிட்ட, ரிலாவல, தியகம வீதி, 74B எனும் விலாசத்தைக் கொண்ட காமினி சுனில் ஜயமான்ன எனும் ஆள் 2023.05.11 ஆம் திகதியன்று மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் ஹோமாகம புகையிரத நிலைய வீதி, 1 ஆம் ஒழுங்கை, 6 ஆம் இலக்கம் என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.02.05 ஆம் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6556(MAR) | 01 No. of CV 50-200 Johnson Vertical Self-Priming Centrifugal Sea Water Pump and Spares for Dredger Hansakawa | 100,000.00 | 3,500.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6558(EL) | VFC Unit for Alimak Elevators of ZPMC Cranes at JCT | 30,000.00 | 1,000.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6559(EL) | Current Transformers for the Yaskawa YS1000 Inverters of Cranes at JCT | 7,500.00 | 1,000.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6560(EL) | 12 Nos. Current Transformers for the Yaskawa A1000 Inverters of Cranes at JCT | 7,500.00 | 1,000.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6562(EL) | 06 Nos. IGBT for the Yaskawa A1000 Inverters of Cranes at JCT | 40,000.00 | 1,000.00 | 2024.02.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6563(MP) | Spares for Terberg Terminal Tractors at JCT | 90,000.00 | 1,000.00 | 2024.02.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6510(EL) | Spreader Statues Indication Led Lamps for Spreader of STS Cranes | 75,000.00 | 1,000.00 | 2024.02.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6561(MAR) | Spares for 8000 -12000 Hour Overhead of both ABB VTR214P-11 Turbochargers of Wartsila 9L 20 main Engines of M/T Barana II | 350,000.00 | 3,500.00 | 2024.02.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6457(MP) | 02 Nos. Fork Lift 3.5 Ton (Short Mass) | 280,000.00 | 3,500.00 | 2024.02.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/ PT/14/067 | 7200 KGS dissolved Acctylene GAS for Year 2023-2024 | 360,000.00 | 3,500.00 | 2024.01.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/22/017 | 168 Nos. GI Lip Channel 150 X 75 x 20, 3MM Thick 12M Length | 84,000.00 | 1,000.00 | 2024.01.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/050K | Paint and Thinners for construction work of proposed Fort Lift repair section | 100,000.00 | 3,500.00 | 2024.01.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/066 | 12 Nos. Fuel Injectors for Gardner Engines of Launches "Donald Neish" and "Alfred Normandale" | 45,000.00 | 1,000.00 | 2024.01.29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/073 | Spares for Caterpillar C-15 Engines of RTG Cranes | 120,000.00 | 3,500.00 | 2024.01.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/065 | Motor Tyres 1000X20 PLY (Cross PLY) | 27,500.00 | 1,000.00 | 2024.01.29 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/04/-074 | Spares for Cummins QSK-15 Engines of RTG Cranes | 70,000.00 | 1,000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/064 | 25 Nos. Motor Tyres 1100 x 20 16 PLY | 43,250.00 | 1,000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/23/016 | Steel material and accessories for construction work of proposed Fort Lift repair section | 86,000.00 | 1,000.00 | 2024.01.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/01/062 | Overall – 3700 No. for Year 2024 | 234,000.00 | 3,500.00 | 2024.01.31 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/01/069 | Spares for UD Nissan Prime Movers | 19,000.00 | 1,000.00 | 2024.01.31 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 ஜனவரி 05 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராகக் கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலேகுறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443

# மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

## மாநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## விலைமனுக்கோரல்

## லுனாவ “Sea View Residencies” வீடமைப்புத் திட்டத்தில் கட்டிட இல 01, 02 இல் (Block - 01, 02) தரைமாடி, வணிக இடவசதிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குதல்.

மொறட்டுவை நகரில் இல. 95, சாள்ஸ் பிளேஸ், லுனாவ முகவரியில் மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்ட “Sea View Residencies” வீடமைப்புத் திட்டத்தில் கட்டிட இல. 01, 02 இன் தரைமாடி வியாபார இடவசதிகளை மாதாந்த வாடகை அடிப்படையில் (குறைந்தபட்சம் 10 வருட காலத்திற்கு) வழங்குவதற்காக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பிரதான) இனால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. குறித்த விபரம் கீழ்க்காணுமாறு அமையும்.

| கட்டிடப் பிரிவு | தரைமாடி | அளவு ($m^2$) | $m^2$ இற்கான வருடாந்த வாடகைப் பெறுமதி | குத்தகைப் பிணை முறி | நீர் மற்றும் மின் கட்டண பிணை முறி | 105 நாள் காலத்திற்கு செல்லுபடியாகுமாறு சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை முறி |
|---|---|---|---|---|---|---|
| Block 01 | வணிகப் பிரதேசம் 01 | $260m^2$ | ரூ. 5,288.46 | 06 மாத குத்தகைப் பெறுமதி | ரூ.55,500.00 | ரூ.66,575.00 |
| | வணிகப பிரதேசம் 02 | $94m^2$ | ரூ. 5,319.15 | | ரூ.20,100.00 | ரூ.24,100.00 |
| | வணிகப பிரதேசம் 03 | $275m^2$ | ரூ.5,272.73 | | ரூ.59,000.00 | ரூ.70,500.00 |
| Block 02 | வணிகப பிரதேசம் 01 | $74m^2$ | ரூ.4,662.16 | | ரூ.15,500.00 | ரூ.19,000.00 |

**குறிப்பு**

01. அரச மதிப்பீட்டு பெறுமதியுடன் ஒப்பிடுகையில் அதிகூடிய மாதாந்த வாடகை பெறுமதியை சமர்ப்பித்துள்ள கேள்விதாரர்களுக்கே கேள்விகள் வழங்கப்படும்.
02. தகைமை பெறும் கேள்விதாரர்களால் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு குத்தகை பிணை முறி மற்றும் நீர் மின்சார சிட்டைகள் பிணை முறி வழங்கப்படுவதுடன் குத்தகை உடன்படிக்கைக் கால எல்லை முடிவில் அத்தொகை அதிகாரசபையினால் மீண்டும் செலுத்தப்படும்.
03. குத்தகைதாரர்களால் மேற்படி வர்த்தக இடவசதி அல்லது அதன் ஒரு பகுதியின் உரிமையை வேறு ஒருவருக்கு விற்றல், ஒப்படைத்தல், ஈடுவைத்தல் அல்லது இடைக்கால குத்தகைக்கு வழங்கல் அல்லது மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் முழு எழுத்துமூல அனுமதியின்றி மேற்கொள்ளல் கூடாது. அவ்வாறு வேறு ஒருவர் உரிமையில் இருப்பதாக விடயங்கள் உறுதி செய்யப்படின் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்யும் அதிகாரம் முதலாம் தரப்பினரான மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தாவதாக இரண்டாம் தரப்பினர் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
04. இரண்டாம் தரப்பினரால் பெற்றுக் கொள்ளும் பொறுப்புகளுக்கு முதலாம் தரப்பினரால் பொறுப்புக் கூறப்படமாட்டாது அத்துடன் நீர் மற்றும் மின்சாரம் பற்றிய விடயங்கள் போலவே தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் தம்மால் பூர்த்தி செய்தல் இரண்டாம் தரப்பினரின் பொறுப்பாகும்.
05. கேள்வி ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 3500.00 தொகையை (ஒரு கேள்விக்காக) 09ம் மாடி, செத்சிரிபாய அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் காசாளரிடம் 2024.01.08 முதல் 2024.01.26 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் செலுத்தி கேள்விப் பத்திரங்களை (சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட) பிரதிப் பணிப்பாளர் (பெறுகை மற்றும் சந்தைப்படுத்தல்) இடம் பெற்றுக் கொள்ள முடிவதுடன் ஒரு கேள்விப் பத்திரத்தின் மூலம் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடிவது ஒரு வணிகப் பிரதேசத்திற்கு மாத்திரம் ஆவதுடன் அதிகாரசபையினால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தின் மூலம் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடியும்.
06. செயற்றிட்ட தளம் மற்றும் கட்டிட வரைவுகளை நேரடியாகப் பரீட்சித்தல் 2024.01.22 முதல் 2024.01.26 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரையான காலத்திற்குள் மேற்கொள்ளலாம்.
07. கேள்விப் பிணை முறிகளின் பெறுமதி மற்றும் செல்லுபடிக்காலம் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு அமைவதுடன் அக் கேள்விப் பிணைமுறி இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கைக்குள் செயற்படுத்தப்படும் அரச அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட மீளளிக்கப்படும் பிணை முறியின் மூலம் அல்லது அனுமதிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டின் பிரதியுடன் சகல கேள்விகளையும் சமர்ப்பிக்க வேண்டியதுடன் கேள்விப் பிணை வைப்பு பற்றுச்சீட்டின் பிரதி இன்றி சமர்ப்பிக்கப்படும் சகல கேள்வியும் நிராகரிக்கப்படும்.
08. கேள்விப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளல் 2024.01.29 மு.ப. 10.00 இற்கு முடிவுறும் பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் குறித்த நேரத்திற்கு முன்பு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பிரதான) நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை, 09ம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில், “லுனாவ வீடமைப்புத் தொகுதியின் வர்த்தக இடவசதிகளைக் குத்தகை அடிப்படையில் வழங்குதல் - (கட்டிட இலக்கம் .........., வணிகப் பிரதேசம்............)” எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரின் அலுவலகத்தில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் தேவைப்படின் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
09. கேள்வி பற்றிய மேலதிக தகவல்களை மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் (பெறுகை மற்றும் சந்தைப்படுத்தல்) 0112884147 / 0770101997 இடம் பெற்றுக் கொள்ளலாம்.
10. கிடைக்கப்பெறும் கேள்விகளில் பொருத்தமான கேள்வியை ஏற்றுக் கொள்ளல் அல்லது சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பிரதான) இற்கு உரிமையுண்டு அத்துடன், அக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். கேள்விப் பத்திரங்களை தயாரித்தல் பற்றிய எந்தச் செலவிற்கும் மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பொறுப்புக் கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பிரதான)**
**மாநகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**09ம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல.**

# இரு ஆட்டமிழப்புகளை சோதிப்பதை தவிர்க்க ஐ.சி.சி. விதிகளில் மாற்றம்

சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் (ஐ.சி.சி.) கிரிக்கெட் விதியில் புதிய மாற்றத்தை கொண்டுவந்துள்ளது. இதன்படி இனிவரும் போட்டிகளில் கள நடுவர்களால் கோரப்படும் 'ஸ்டம்பிங்' சரிபார்ப்பின்போது தொலைக்காட்சி நடுவர் விக்கெட்டுக்கு பின்னால் இடம்பெறும் பிடியெடுப்பு பற்றி சரிபார்க்க மாட்டார்.



கடந்த 2023 டிசம்பர் 12 ஆம் திகதி அமுலுக்கு வந்திருக்கும் இந்த மாற்றத்தின்படி அணியொன்று விக்கெட் காப்பாளரின் பிடியெடுப்புக்காக முறையீடு செய்து அப்போது ஸ்டிம்பிங்கும் செய்திருந்தால் அவை இரண்டும் வெவ்வேறு மேன்முறையீடுகள் மூலமே சரிபார்க்கப்படும்.

கடந்த ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெற்ற இந்தியாவுக்கு எதிரான தொடரில், அவுஸ்திரேலிய விக்கெட் காப்பாளர் அலெக்ஸ் கெர்ரி ஸ்டம்ப் ஆட்டமிழப்பு முறையீடு செய்த சந்தர்ப்பங்களில் தொலைக்காட்சி நடுவர் மேன்முறையீடு ஒன்றை பயன்படுத்தாமலேயே துடுப்பில் பந்து படுவது பற்றிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இருந்தார்.

எனினும் தற்போது ஸ்டம்ப் முறையீடு செய்யப்பட்டால் அதனை சரிபார்க்க பக்கக் கெமரா காட்சிகள் மாத்திரமே காண்பிக்கப்படவுள்ளன. நடுவர் துடுப்பில் பந்து பட்டது பற்றி சரிபார்க்க மாட்டார்.

"ஸ்டம்பிங் மேன்முறையீட்டின்போது ஸ்டம்ப் செய்யப்பட்டது மாத்திரமே சரிபார்க்கப்படும் வகையில் வரையறுக்கப்படுகிறது. அது களத்தடுப்பு அணி வீரர்கள் மேன்முறையிடு ஒன்றை பயன்படுத்தாது இலவசமான மற்றொரு ஆட்டமிழப்பு (விக்கெட்டுக்கு பின்னால் பிடியெடுத்தல்) முறையை பெறுவதை தவிர்ப்பதாக இருக்கும்" என்று ஐ.சி.சியின் புதிய திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காயம் காரணமாக களமிறக்கப்படும் மாற்று வீரர் விதியிலும் ஐ.சி.சி. மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. இப்போது, பந்துவீசும் சமயத்தில் ஒரு வீரர் காயம் காரணமாக வெளியேறினால், மாற்று வீரர் பந்துவீச அனுமதிக்கப்பட மாட்டார். இதேபோன்று, விளையாடும்போது ஏற்படும் காயத்தை மதிப்பீடு செய்து சிகிச்சை அளிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை நான்கு நிமிடங்களுக்கு ஐ.சி.சி. மட்டுப்படுத்தியுள்ளது.

# ஐ.சி.சி. விருதுகளுக்காக சமரி, டில்ஷான் பரிந்துரை





சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் 2023 ஆம் ஆண்டுக்கான விருதுகளுக்கு இலங்கையின் இளம் வேகப்பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க மற்றும் இலங்கை மகளிர் அணித் தலைவி சமரி அத்தபத்து ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஆண்டின் ஐ.சி.சி. மகளிர் டி20 வீராங்கனை விருதுக்காக பரிந்துரைக்கப்பட்ட நான்கு வீராங்கனைகளில் சமரியின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் சொபி எக்லஸ்டோன் (இங்கிலாந்து), ஹேய்லி மத்தியூஸ் (மேற்கிந்திய தீவுகள்) மற்றும் எலிஸ் பெர்ரி (அவுஸ்திரேலியா) ஆகியோருடன் அவர் இந்த விருதுக்காக போட்டியிடுகிறார்.

அண்மையில் நடந்த ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் திறமையை வெளிப்படுத்திய இடது கை வேகப்பந்து வீச்சாளர் மதுஷங்க ஐ.சி.சியின் ஆண்டின் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இந்த விருதுக்கு தென்னாபிரிக்காவின் கெரால்ட் கோட்சீ, இந்தியாவின் யாஷஸ்வி ஜெயிஸ்வால் மற்றும் நியூசிலாந்தின் ரச்சின் ரவிந்திரா ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு கிரிக்கெட் அரங்கில் திறமையை வெளிப்படுத்திய வீர, வீராங்கனைகளுக்கான விருது விபரம் ஜனவரி பிற்பகுதியில் அறிவிக்கப்படவுள்ளது.

இதனிடையே, 2023ஆம் ஆண்டின் சிறந்த டி20 கிரிக்கெட் வீரர் விருதுக்காக இந்தியாவின் சூர்ய குமார் யாதவ், சிம்பாப்வே வீரர் சிக்கந்தர் ராசா, நியூசிலாந்தைச் சேர்ந்த மார்க் சாப்மேன் மற்றும் உகாண்டா அணியைச் சேர்ந்த அல்பேஷ் ராம்ஜானி ஆகியோரது பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இரண்டு நாட்களில் டெஸ்டை வென்றது இந்தியா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் இரண்டு நாட்களுக்குள் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இந்திய அணி இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை 1–1 சமன் செய்தது.

கேப் டவுனில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று (04) இந்திய அணிக்கு 79 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் இந்த இலக்கை மூன்று விக்கெட்டுகளை இழந்து எட்டியது.

இந்த டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 55 ஓட்டங்களுக்கே சுருண்டதோடு இந்த அணி முதல் இன்னிங்ஸில் 153 ஓட்டங்களையே பெற்றது. அதிலும் இந்திய அணியின் கடைசி ஆறு விக்கெட்டுகளும் ஓட்டங்கள் இன்றியே விழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரர் எய்டன் மார்க்ரம் 106 ஓட்டங்களை பெற்ற போதும் வேறு எவரும் 13 ஓட்டங்களை கூட பெறாத நிலையில் அந்த அணி 176 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறியொடுத்தது.

## சர்வதேச செய்திகள்

### பிராந்திய பதற்றத்திற்கு மத்தியில்

# மீண்டும் இஸ்ரேலுக்கு விரைந்தார் அமெரிக்க இராஜாங்க செயலாளர்



காசாவில் போர் நீடித்து, லெபனானில் ஹமாஸ் பிரதித் தலைவர் படுகொலை செய்யப்பட்டு, ஈரானில் குண்டு தாக்குதல்கள் இடம்பெற்று பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ள சூழலில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் நேற்று (04) மீண்டும் ஒருமுறை இஸ்ரேலுக்கு விரைந்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான போர் வெடித்த பின் நான்காவது முறையாக இடம்பெறும் பிளிங்கனின் இஸ்ரேலுக்கான விஜயத்தை அமெரிக்க அதிகாரி ஒருவர் உறுதி செய்தபோதும் அது தொடர்பில் மேலதிக விபரங்கள் வெளியிடப்படவில்லை.

டெஹ்ரானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் குறைந்தது 95 பேர் கொல்லப்பட்டதற்கு ஈரான் உடனடியாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மீது குற்றம்சாட்டியது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்த அமெரிக்கா, இஸ்ரேல் இதனைச் செய்ய வாய்ப்பு இல்லை என்று கூறியது பெய்ரூட் புறநகரில் நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் ஹமாஸ் பிரதித் தலைவர் கொல்லப்பட்ட நிலையிலேயே யாரும் உரிமை கோராத டெஹ்ரான் குண்டு தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் பிளிங்கனின் இஸ்ரேலிய விஜயம் பற்றி அறிவிப்பை வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் மத்தியூ மில்லர், பிராந்தியத்தில் பதற்றம் அதிகரிக்கும் வாய்ப்பு பற்றி கவலையை வெளியிட்டிருந்தார்.

"ஏற்கனவே இருக்கும் மோதல் மேலும் விரிவடைவதை பிராந்தியத்தில் உள்ள எந்த ஒருவரும் எந்த நாடும் விரும்புவதில்லை, உலகில் எந்த நாடும் விரும்புவதில்லை" என்றார்.

ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் படைகள் இடையே அடிக்கடி மோதல் இடம்பெற்று வரும் லெபனானுடனான இஸ்ரேலிய எல்லைக்கு கடந்த புதன்கிழமை (03) சென்ற இஸ்ரேல் இராணுவத் தளபதி ஹெர்சி ஹலெவி, "துருப்பினர் உச்ச தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்" என்றார்.

இந்நிலையில் லெபானின் நகூரா கிராமத்தில் இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதல்களில் நான்கு ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலிய போர் விமானம் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி அதனை தகர்த்ததாக லெபனான் அரச செய்தி நிறுவனம் கூறியது. இதில் மேலும் ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தப் பதற்றம் யெமன் வரை பரவி இருக்கும் சூழலில், ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் மீதான அதன் தாக்குதல்களை உடன் நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணிகள் எச்சரிக்கை விடுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. பலஸ்தீனத்திற்கு ஆதரவாக யெமன் ஹூத்திக்கள் செங்கடலில் செல்லும் கப்பல்கள் மீது ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை கொண்டு தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதேவேளை காசா மீதான இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்கள் தொடர்ந்து நீடித்து வருகின்றன. இஸ்ரேலிய அறிவுறுத்தலின் கீழ் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் அல் மவாசி பகுதிக்கு அருகில் புதன்கிழமை இரவு தொடர்ச்சியாக தாக்குதல்கள் இடம்பெற்றன.

அந்தப் பகுதிக்கு அருகில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தின் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் மிக வயது குறைந்தவராக ஐந்து வயது சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டதோடு பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் 10 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

கான் யூனிஸ் மற்றும் மத்திய காசாவின் மேலும் பல பகுதிகளில் தாக்குதல்கள் தீவிரம் அடைந்திருந்ததோடு தெற்கின் டெயிரல் பலாஹ்வில் கடும் தாக்குதல்கள் பதிவானதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கான் யூனிஸில் இருக்கும் பலஸ்தீன செம்பிறை சங்க தலைமையக கட்டடத்தின் ஐந்தாவது மாடி மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் அறுவர் காயமடைந்ததாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பமான போரில் காசாவில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 22,500ஐ நெருங்கியுள்ளது. அந்த குறுகிய நிலப்பகுதியில் வாழும் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அனைவரும் போல் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.



# இஸ்ரேலுக்கு எதிராக 'பகிரங்க விசாரணை'




காசாவில் இஸ்ரேல் இனப்படுகொலையில் ஈடுபட்டு வருவதாக தென்னாபிரிக்கா தாக்கல் செய்த வழக்கு மீது சர்வதேச நீதிமன்றத்தில் பகிரங்க விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜனவரி 11 மற்றும் 12 ஆம் திகதியில் நடைபெறும் என்று ஹேகில் உள்ள சர்வதேச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு எதிராக தொடுக்கப்பட்ட இந்த வழக்கிற்கு துருக்கி மற்றும் மலேசிய நாடுகள் தென்னாபிரிக்காவுக்கு ஆதரவு வெளியிட்டுள்ளன. தென்னாபிரிக்காவின் இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தின் முன் தோன்றுவதாக இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது. இதேநேரம் இந்த வழக்கை நிராகரித்திருக்கும் அமெரிக்கா, "தகுதியற்ற, எதிர்மறையான மற்றும் முழுமையாக எந்த ஒரு அடிப்படையும் அற்றது" என்று குறிப்பிட்டுள்ளது. காசா மீது தொடரும் இஸ்ரேலிய தாக்குதல்களில் சிறுவர்கள் மற்றும் பெண்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட 22,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# பசித்த விலங்குகள் இடையே அடைக்கலம் பெறும் மக்கள்

இஸ்ரேலிய தாக்குதல்களால் எகிப்து எல்லையில் இருக்கும் ரபா பகுதிக்கு இடம்பெயர்ந்த மக்கள் அங்குள்ள மிருகக்காட்சிசாலையின் பசித்த விலங்குகளின் கூடுகளுக்கு இடையே அடைக்கலம் பெற்றுள்ளனர்.



"நிலைமை கவலைக்கிடமாக உள்ளது, இங்கே உணவு, நீர், மருந்து எதுவுமே இல்லை" என்று அந்த மிருக்காட்சிசாலையின் உரிமையாளர் அஹமது ஜுமா குறிப்பிட்டார். இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதலால் பெரும்பாலான மக்கள் தற்போது ரபாவில் அடைக்கலம் பெற்றிருக்கும் நிலையிலேயே அவர்களுக்கு அங்குள்ள மிருகக்காட்சிசாலையும் திறந்துவிடப்பட்டுள்ளது.

"போரை அடுத்து மிருகக்காட்சிசாலை மூடப்பட்டபோதும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் நண்பர்களுக்காக அது திறக்கப்பட்டது" என்றார் ஜுமா. இவ்வாறு அடைக்கலம் பெற்றவர்கள் விலக்குகளின் கூடுகளுக்கு இடையே கூடாரம் அமைத்துள்ளனர்.

எனினும் இங்கு விலங்குகளுக்கு மற்றும் அடைக்கலம் பெற்றவர்கள் என்று எவருக்கும் போதுமான உணவு இல்லை.

"உணவு கிடைப்பதில்லை. சில விலங்குகளும் இறந்துவிட்டன" என்று கூறி ஜுமா, "சிங்கம் குட்டி ஈன்றபோதும் அதற்கு வழங்க உணவு இல்லாததால் அந்தக் குட்டி இறந்துவிட்டது" என்றார்.

# ஜோ பைடன் மீதான அதிருப்தி அதிகரிப்பு



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் காசா மோதலை கையாளும் முறைக்கு அதிருப்தி வெளியிட்டு அமெரிக்க கல்வித் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் பதவி விலகியுள்ளார். இந்தப் போருக்கு எதிராக அமெரிக்க நிர்வாகத்தில் அதிகரித்து வரும் அதிருப்தியின் தொடர்ச்சியாகவே இந்தப் பதவி விலகல் அமைந்துள்ளது.

இந்த விவகாரத்தால் எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தோல்வியை சந்திக்கக் கூடும் என்று பைடனுக்கு அவரது பிரசாரக் குழுவைச் சேர்ந்தவர்கள் அனுப்பிய கடிதம் ஒன்றில் எச்சரித்துள்ளனர்.

கல்வித் திணைக்களத்தின் திட்டமிடல், மதிப்பீடு மற்றும் கொள்கை மேம்பாட்டு அதிகாரியான தாரிக் ஹபாஷ் கல்விச் செயலாளர் மகுவேல் கார்டோனாவுக்கு அனுப்பி இருக்கும் கடிதத்தில், "அப்பாவி பலஸ்தீனர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுமைகள் தொடர்பில் நிர்வாகம் கண்மூடி இருப்பதை பார்த்து என்னால் தொடர்ந்தும் அமைதியாக இருக்க முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இஸ்ரேலுக்கு கண்மூடித்தனமாக ஆதரவு வழங்குவதாகக் கூறிய முன்னாள் இராஜாங்கத் திணைக்கள அதிகாரி ஜோஷ் போல் கடந்த ஒக்டோபரில் பைடன் நிர்வாகத்தில் இருந்து இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.